Koviloor Digital Library

தயவு

அருட்பெருஞ்ஜோதி
அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை
அருட்பெருஞ்ஜோதி

ஞானசரியை

விளக்க உரை

மரணமில்லாப் பெருவாழ்வு

ACC No 44028
R65-வள்ள

தயாநிதி சுவாமி சரவணானந்தா

Koviloor Digital Library

Koviloor Digital Library

4/5

தயவு

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
A. No. 44028

மரணமிலாப் பெருவாழ்வு

ஞானசரியை : ஞான உரை

இஃது

திரு அருட்பா ஆறாம் திருமுறையில்
அமையப் பெற்ற
நிறை இன்ப வாழ்வு தரும்
பாமாலை விளக்க நூல்

தயாநிதி
சுவாமி சரவணானந்தா

தயவு சத்திய ஞான கோட்டம்
திண்டுக்கல்.

Koviloor Digital Library

தயவு

"ஞானசரியை"

நூல் ஆசிரியர் :

தயாநிதி சுவாமி சரவணானந்தா

நூல் முதற் பதிப்பு : 1975
நூல் இரண்டாம் பதிப்பு : 1994
நூல் மூன்றாம் பதிப்பு : 1996
நூல் நான்காம் பதிப்பு : 2002
நூல் ஐந்தாம் பதிப்பு : 2014
நூல் ஆறாம் பதிப்பு : 2017

நூல் ஏழாம் பதிப்பு : தயாநிதி சுவாமி சரவணானந்தா அவர்களின் - 17ம் ஆண்டு குருபூஜை விழா வெளியீடு பங்குனி பூசம் - 2023 (1975ல் வெளியான முதற் பதிப்பினை மூலமாகக் கொண்டு சரிபார்க்கப்பட்டது)

நூல் ஏழாம் பதிப்பின் பொருட்சக்தி உதவி :

தயவு நூல் வெளியீட்டு அறக்கட்டளை - திண்டுக்கல்.

நூல் வெளியீடு :

தயவு நூல் வெளியீட்டு அறக்கட்டளை
தயவு சத்திய ஞான கோட்டம்,
4, நாகசாமி சந்து, கீழ ரத வீதி,
திண்டுக்கல் - 624 001.
செல் : 99767 50609.
https://www.daeiou.in

விலை : 75 ரூ

அச்சிட்டோர் :

KSN பிராஸஸ், சிவகாசி செல் : 94421 22269.

Koviloor Digital Library

தயவு

நான்காம் பதிப்பு

ஞானசரியை : விளக்க உரை

முன்னுரை

கடவுள் உண்மை அகல் வான்வெளி முற்றும் அருட்பெருஞ்ஜோதி ஆக நிறைந்து, நம் அனுபவத்தின் பொருட்டு தலைநடு 'ப'கர வடிவக் குழியில் தீபச்சுடர் போன்று திகழ்கின்றது; அதன் பிரதிபலிப்புதான் நமது புருவநடு விளங்குகின்றது. இதுவே கடவுள் உண்மையும் நமது உண்மையும் ஆகும். ஆதலின், புருவநடு ஒருமையோடு இருந்து கொண்டு ஓதி ஓதி, அதுவாவது விசாரநிலை; அப்படி நிலைத்து இருந்து கொண்டு அனுபவம் பெறுவதால், உடல் பற்று நீங்கும் போது, அகநிலை பெறக் கூடும். பின்னர் அந்த அகம் இருந்தவாறு அனகமாக உலகில் வாழப்பழக வேண்டும்.

அப்படி வாழ்வதால், நிறை அருளால் நிறை இன்ப வாழ்வு பெறலாம். முன் வெளியீடுகளால் அறிந்த, பெற்ற அனுபவங்களை விட மேலான அக அனுபவத்தைப் பெறலாம்.

இந்நூலால் உலகம் முழுமையும், இதுவரை பெறலரிய, ஆன்மநேய ஒருமை இன்ப வாழ்வைப் பெறலாகும். மற்ற மொழிகளிலும் இந்நூல் மொழிபெயர்ப்பு பெறவேண்டிய ஒன்றாகும். திருவருளே அப்படிக் கூட்டிவைக்கும். இதனால் எல்லோரும் ஏற்று வாழ்விற் கொண்டு விளங்க இறை அருளையே வேண்டுகின்றனன்.

தயவு சத்திய ஞான கோட்டம்
திண்டுக்கல்
4.10.2002.

இவண்
தயாநேயன்

Koviloor Digital Library

தயவு

சத்திய வாக்கும் நித்திய வாழ்வும்

முகவுரை

ஞானசரியை என்றும் வாய்ப்பறையார்த்தல் என்றும், மரணமிலாப் பெருவாழ்வு என்றும் கூறப்படும் திருஅருட்பாவின் அக உண்மையை வழங்க உள்ளது இந்தச் சிறிய நூல்.

இதனை, அகநின்று அனகமாக நோக்கும்போது, இறை உண்மை நிறை வாழ்வு தரும் ஒன்றாகக் கண்டு கொள்ளலாகும். ஆகவேதான் இதற்கு இம்முகவுரை கொடுக்கப்பட்டுள்ளது.

நித்திய பரம்பொருளாகிய இறையின் இயல் விளக்க நிறை உண்மை கொண்ட ஒரு சொல்தான் **ஓம்** என ஆன்றோர் வழி உலகம் கண்டு ஏற்று உள்ளது. இது, என்றும் அகல் வான்வெளி முற்றும் சதாஒலித்துக் கொண்டே யாவையும் ஆக்கிக் காத்து அழித்தும் வருகின்றது.

இம் முச்செயல் உண்மையைக் குறிக்க, அ, உ, ம் என்ற மூ ஒலிக்கூட்டே ஓம் ஆகியுள்ளது என அருள் உணர்வால் கண்டிருந்தனர். இதனால் இந்த ஓங்கார மந்திரத்தின் அகப்பொருள் 'அருள்' என்றே கொண்டனர். அது உடல், உயிர் உள்ளொளி நிலையை உணர்த்தி, அதுவாகிடச் செய்தது அந்நாள் பக்குவ மனிதனை!

அதுவா இறை மந்திரம் அருளும் நிறை அனுபவ நிலை? ஆம், எனக் கொண்டு அகம் சூழ்ந்து போனான்

Koviloor Digital Library 4/5

அன்றைய ஞானி. ஆனால், அம் மந்திர ஒலியோ இடையறாது என்றும் ஒலித்துக் கொண்டே, முத்தொழில் புரிந்து வருகின்றதை அறிகின்றோம்.

ஆகையால், அருள் தந்த பொருள், நித்தியமான ஒன்றாய் இருக்க வேண்டும். அந்த நித்திய வாழ்வு தரும் பொருள், அருள் நிலையாய் இருக்க முடியாது, வேறு ஒன்றாகத்தான் இருக்க வேண்டும் என அவ்வருளே உணர்த்துகின்றது! அது, அவ்வருள் நிலையிலிருந்து சதா வெளியாகிக் கொண்டே இருக்கும் ஒன்றாகத்தான் இருக்க வேண்டும் என உணர்த்தப் பெறுகின்றோம் இன்று!

ஓம் மந்திர உள்ளொளி நிலை ம் எனவும் அதினின்றே 'உ'கர, 'அ'கர அலைகள் சதா வெளியாகிக் கொண்டிருத்தலின், ஓங்கார மந்திரமும், அதன் முத்தொழிற் செயல்களும் வெளியாகிக் கொண்டே இருத்தல் நித்தியமேயாம்.

அப்படி அகமிருந்து அனகமாக வெளிவந்து விளங்கிடும் பொருள் கொண்ட ஒரு சொல் "தயவு" ஆன ஒன்றே ஆம். ம் எனும் மகரமெய்யே தகராகாச இறை ஜோதிப் பெருவடிவமாகும், அது மனிதனின் தலைநடு, 'ய'கர ஆன்ம ஒளியாய்த் தோற்றி உகர உயிர் உடம்பு கொண்டு திகழ்கின்றதாம். ஆகையால், ஓங்கார மந்திர அனக தயவு மூலம் மனிதன் நித்திய வாழ்வு பெறுவது நிச்சயமே!

இவ்வுண்மையையுணர்த்தி, அனுபவவாழ்வு பெறச் செய்யும் நோக்கோடுதான், திரிதேக சித்தி பெற்ற வள்ளல் திருவருட்பிரகாசர், திருஅருட்பாவில் இந்தப் பாமாலையை அந்தாதி முறையில் அருளி சுழன்றிலங்கச் செய்துள்ளார். ஆகவே, இதனை இருபொருள் அனுபவமும் உண்டாக உள்ளுணர்ந்து ஓதிப் பயன் கொள்ள வேண்டும்.

Koviloor Digital Library

"முதலில் சத்விசாரத்தால் ஓங்கார அகப்பொருளை அருட்பெருஞ்ஜோதியாகத் தலைநடுவுள்ளொளியாகக் கண்டு அதுவாகி நிற்க வேண்டும். அந்நிலை நின்றே தயவினால் தினசரி வாழ்வை நடத்தப் பழகல்வேண்டுவது அவசியம்".

கடவுள் உண்மைதான், நம் சிரநடுவுள் சிற்றம்பல ஜோதியாகவும், பிற எல்லாத் தெய்வ, தெய்வீக மனித உண்மையாகவும் கண்டு கண்டு, போற்றி, உட்கூடி நின்று தயை பெருகப் பெருக வாழ்தல் வேண்டும்.

வேறு வேறான புறச் சந்நிதிகளிலே, கற்பனா தெய்வப் பீடங்களின் முன் நின்று முறையிடுவதாலும், தோத்தரிப்பதாலும், வேண்டிக் கொள்ளுவதாலும் பெறமுடியாத உண்மை விளக்கமும், அனுபவமும் அகஜோதி பதியிடமிருந்து அடைந்திடலாகும்.

வடலூர் வள்ளல், சத்திய ஞானத்தால் அருட் பெருஞ்ஜோதியைக் கண்டு, ஆனந்தத் தெள்ளமுதுண்டுதான் சூழ இருக்கும் ஆன்ம நேயர்களை எல்லாம் மிக உருக்கத்தோடும், உறுதியோடும் இங்கே வாருங்கள் வாருங்கள் என அழைக்கின்றார். **இங்கே என்றால் எங்கே? புற வடலூருக்கா, அல்ல. சத்திய ஞானம் விளங்கும் தலை இடத்திற்கு! அங்குதான் அவரும், அருட்ஜோதியும் இரண்டற இருக்கும் இடம் ஆம்.**

தயாவொழுக்கத்தோடு கூடிய சத்விசாரத்தால், அவரையும், அவர் வாழிடத்தையும் கண்டு அடைய முடியும். அப்படி அகமிருந்துதான் மெய்ப்பொருளையும் அனுபவத்தையும் பெறமுடியும்! அனுபவத்தில், வாழ்வில் அடையப் பெறாதது, அர்த்தம் அற்றது, அனர்த்தமே, கேடும் அழிவுமே!

Koviloor Digital Library

இதில் 28 பாடல்கள் தொடர்ந்து, சுற்றிச் சுற்றி வந்து உயிர் உடம்பைச் சுத்த, பிரணவ, ஞான உடலாக மாற்றித் தயவு அனுபவத்தோடே நிலவச் செய்யும் தன்மைத்தாம். இதனால்தான் இதனைச் சத்தியவாக்கும் நித்திய வாழ்வும் என்ற தலைப்பு கொடுத்துச் சிறப்பிக்கச் செய்துள்ளோம்.

முதற் பதிப்பில் தெளிவாகக் கண்டு கொள்ளப்படாது இருந்த விளக்கம் மிகத் தெளிவாகவும், எடுப்பான தடித்த எழுத்துக்களாலும் அமைக்கப்பட்டுள்ளன. இப்பகுதிகளை மேலெழுந்த வாரியாகப் படிக்கும் போதே உண்மையைக் கண்டு கொள்ளலாம்.

இதன் விளக்கத்தைப் பிறரும் நன்கு அறிந்து ஏற்கப் பன்மொழியிலும் வெளியிடலாம். அது கொண்டு நம் வள்ளலாரையும், அவரது திருவருட்பாவின் உண்மையையும், அவரது மரணமில்லாப் பெருவாழ்வின் சாத்தியப் பேறையும் உலகம் எல்லாம் அறிந்து பெரும் பயன் அடையலாகும்.

பழம் கற்பனா நெறிமுறைகளால், உலகம் சீர்கெட்டு அழிகின்ற நிலை மாறி, தயா ஒளி பெற்று இன்பில் தழைத்தோங்கும் என்பது சத்தியம்.

விளைக தனிப்பெருந்தயவு

தயவு சத்திய ஞான கோட்டம்
திண்டுக்கல்
20.01.94

இவண்
தயாநேயன்
சரவணானந்தா

Koviloor Digital Library

தயவு

முதற் பதிப்பின் முகவுரை

திருவருட் பிரகாச வள்ளலார் வழங்கியுள்ள திருவருட்பா, கடவுட் பேரருளையே தெள்ளத் தெளிய விளக்கி, விரித்து உரைத்து அவ்வருள் உண்மையை உள்ளவாறு கண்டு கொள்ளச் செய்கின்றதாம். அம்பலப்பாட்டே அருட்பாட்டு, அல்லாத பாட்டெல்லாம் மருட்பாட்டு எனவும் கூறியுள்ளார். திருவருள் ஏகதேசத்தால் பாடப்பட்ட பல பிற பாட்டுகளைப் போலல்லாது, அத் திருவருள் நிறைவால், அதனையே அது வெளிப்படுத்திக் கொண்டு விளங்கும் உண்மையை, இத் திருவருட் பாடல்களை உள்ளொன்றி ஓதுகின்றவர்கள் உணர்ந்து கொள்ளுவார்கள். அப்படி அருள் ஒளி வீசும் பாக்களில், இந்த ஞான சரியை என்னும் அந்தாதி மாலை மிக முக்கியமான ஒன்றாக இருக்கின்றதாகும். ஆதலின் அதனை ஒவ்வொரு பாடலாக எடுத்துக் கொண்டு சற்று விரிவுரை செய்ய முயன்றனன். அம் முயற்சிக்குத் திருவருளே துணை நின்று முடித்துக் கொடுத்ததாம். இங்கு குறிக்கப்பட்டுள்ள விளக்கங்கள் சுத்த சன்மார்க்கத்தின் தத்துவ உண்மை மீது அமைக்கப்பட்டனவாகும். சமய மத மார்க்கங்களின் தொடர்போடு பெற்ற ஞானத்தினால் மட்டும் இப்பாக்களின் கருத்தை நோக்கினால், மெய்யான பொருள் கண்டு கொள்ள முடியாது; பெரும் பயனும் ஏற்படாது. அப்பழ நெறிகளில் கண்டு கொள்ளப்படுவதெல்லாம், சிற்றெல்லைக்கு உட்பட்டு சிறு வாழ்வு வழங்கி யொழிவனவாகவே முடிவில் கண்டு கொள்ளப்படும். அருள் ஒளியிற் காணும் ஆன்ம நேய ஒருமைப்பாட்டு உரிமை விளங்காது, ஏகதேச தத்துவ சித்தி கொண்டு தயங்கிடச் செய்வனவே அந்தப்

Koviloor Digital Library

பழையனவாய அன்மார்க்கங்கள். அவற்றையெல்லாம் விலக்கித் தள்ளி, சன்மார்க்கப் பெரு நெறியை வழங்கப்படுகின்றோம் இதில். இதனால் உண்மை விளங்கும்; லட்சியம் உயரும்; அகிலமாம் சகோதரத்துவம் வரும். ஆகவே இந்த சுத்தசன்மார்க்க ஒளிவுடை திருவருட் பாடல்களை ஒவ்வொருவரும் நன்கு ஓதியுணர்தல் வேண்டும். உண்மை அறிந்து கொள்ளுவதில், விருப்பும் வெறுப்பும், பற்றுதலும், பற்றின்மையும் இருக்கக் கூடாது. பொது நோக்கத்தோடு சுத்த தயவும் நல்ல ஒழுக்கமும் உடையவர்களாயிருந்து கொண்டு திருவருட்பாவைப் படித்தல் வேண்டும். அப்படிப் படித்து வந்தால், அதில் வரும் இந்த ஞான சரியையின் உண்மைக் கருத்து உள்ளங்கை நெல்லிக்கனி போல விளங்கும். விளங்குவதோடு உள்ளிருக்கும் அருட்ஜோதியைக் கண்டு கொண்டதால் ஏற்படும் இன்பானுபவமும் சிறிது சிறிதாகத் தழைத்தோங்குவதையும் உணர்ந்து கொள்ளலாம். அக அனுபவம் அனகத்தே நிறைவு கொள்ளும்போது, அசுத்தமாய் அழியுந் தன்மையோடிருந்த மாயா தேகமே, சுத்தமாய் அழியாத் தன்மையோடு திகழும் மாயாத அருட்ஜோதி தேகமாக மாறி விளங்க வல்லதாகிவிடும். இந்த உண்மையைத்தான், இப்பாடல்களில் சத்தியஞ் செய்து தெரிவிக்கப்பட்டுள்ளதை அங்கங்கு பரக்கக் காணலாம். முழு நம்பிக்கையோடு படித்தால் உண்மை காணலாம், முழுப்பயனும் பெற்றுக் கொள்ளலாம்.

உள்ளமாகிய சத்தியஞான சபையின் வாயிலினின்று இவ்வளவும் உரைக்கப்படுகின்றன. நீங்களும் இவ்விடம் வந்து, கற்கின்றதன் உண்மைப் பொருளையும் நேருக்கு நேராக கண்டு, அருளால் அடைந்து ஆனந்தங் கொள்ளலாம். வாரீர் அன்பீர்.

இவண்,
ஆசிரியர்

Koviloor Digital Library

தயவு



THIRU ARUTPRAKASA VALLALAR

Koviloor Digital Library

தயவு

ஞானசரியை

தலைப்பு விளக்கம்

அன்பு ஒளிரும் ஆறறிவு நிரம்பிய மனிதர்களாய், விளங்குகின்ற எல்லோரும், நல்லின்ப வாழ்வு பெற்று, ஒத்து வாழவேண்டும் என்பதே கடவுள் திருவுள்ளமாக இருக்கின்றது என, உண்மை மெய்ஞ்ஞானியர்கள் ஓதுகின்றார்கள். அந்த இறை இன்ப வாழ்வு இவ்வுலகில் வருவித்தற் பொருட்டு, பல்வேறு கொள்கை கோட்பாடுகள், பலப் பலரால் வகுத்து வழங்கப்பட்டுள்ளன. அவைகளில், கடவுள் உண்மையைக் கொண்ட ஆன்ம ஞானம் படைத்தவர்கள் தந்துள்ள "சன்மார்க்க ஞான நெறியே" யாவர்க்கும் பயன்படுவதாக உள்ளதாம். இந்த ஞானத்தில் கடவுள் விளக்கம் அகத்தில் கண்டு, புற வாழ்வில் விரித்துக் கொள்ளப்படுகின்றதாம்.

மேற்படி ஞான பக்குவம் வருவதற்கும், முடிந்த அனுபவம் உண்டாவதற்கும், நான்கு நான்கு படிகள் கொண்ட நான்கு நிலைகள் ஏற்படுத்தியுள்ளனர். அவை, "சரியை, கிரியை, யோகம், ஞானம்" என்ற நான்கு நிலைகளும், அவற்றில் ஒவ்வொன்றிலும், இந்த நான்கும் பயின்று வர,

சரியையில் - சரியை, கிரியை, யோகம், ஞானம்
கிரியையில் - சரியை, கிரியை, யோகம், ஞானம்
யோகத்தில் - சரியை, கிரியை, யோகம், ஞானம்
ஞானத்தில் - சரியை, கிரியை, யோகம், ஞானம்

என்பனவாம்.

Koviloor Digital Library

1. *சரியை* :- உலக வாழ்வில் திருத்தொண்டு புரிதல் நல்ல சரியையாம். பக்தி நெறியாளர் கோவிற் பணியே இதுவாகக் கொள்ளுகின்றனர். "உண்மைக் கடவுளுக்கு உயிருடம்பே ஆலயமாய்" இருப்பதால் "ஆருயிர்த் தொண்டே அருஞ்சரியை" என்று கொள்ள வேண்டும்.

2. *கிரியை* :- இது போல் தெய்வ ஆராதனை "உயிர் விளக்கம் செய்தல் ஒன்றே" யாதலின் அதுவே நற்கிரியையாகக் கொள்ளப்படும்.

3. *யோகம்* :- மேல், நல்லொழுக்கத்துடன் இருந்து அருட்சக்தியைப் பெறுவதே மெய் யோகமாக அமைவதாம்.

4. *ஞானம்* :- "அந்த அருளாலே உண்மைக் கடவுள் ஒளியில் பொருந்தி நின்று உலவா இன்பில் வாழ்வதே ஞானப்பயனாம்".

இந்த நான்கு நிலையில் முறையாகப் பயின்றால், "சாலோக, சாமீப, சாரூப, சாயுச்சிய நிலை" எய்தலாம் என்பர். உண்மையான அருட்பெரும்பதியை உணர்ந்து, அடைந்து அத்துவிதானந்த வாழ்வு பெற வேண்டியது ஒன்றே நம் குறிக்கோளாக இருக்கின்றதால், மேற்படி சாதனா சாத்தியம் உண்டாக வாழ்க்கை நடத்த வேண்டும் ஒவ்வொருவரும். "சாதனா முறை சத்விசாரத்தாலும், சாத்தியமுறை பரோபகாரத்தாலும் சித்திப்பதாய் உள்ளனவாம்."

"ஜீவ தயா ஒழுக்கத்தோடு சத்விசாரம் செய்தால், நாம் நான்காவது ஆகிய ஞான நிலையில் இருந்து கொண்டு, சாதனை புரிகின்றதாக உணர்ந்து கொள்வோம். இதுவே "ஞானசரியா" நிலையாம். இந் நிலையிலிருந்து உலகியலை நடத்த, நடத்த, மெய்யன்பும், மெய்யறிவும் விளைவு கொள்ளும். இந்நிலையிலிருந்தே ஞானகிரியையும், ஞானயோகமும் சத்விசாரப் பயனாக விளைவு கொள்ளும்.

Koviloor Digital Library

பின்னர், சுத்த தயா அனுபவத்தால் ஞானஞானமாகிய பேரின்ப நிலை சாத்தியமாகும்."

இங்கு, நம் வள்ளல் பெருமான், ஞானசரியை என்ற தலைப்பை எடுத்துக் கொண்டு, சுத்த சன்மார்க்கத்தின் முதற் கூறாகிய "சாதனா விளக்கம்" நன்கு அருள்கின்றார். இதில் சத்விசார நிலையும், இயலும், பயனும் தெள்ளத் தெளிய விரிக்கப்படுகின்றனவாம். புற நெறியாளர் இதுவரை காணா, அனகநெறி உண்மை நன்கு எடுத்து ஓத வந்தது இப்பகுதி. தயா வண்ணராம் பதியை முதலாகக் கொண்டு தோன்றியுள்ளவர்கள் நாம். அந்தப் பதியை அனுபவத்திற் கொண்டு வாழ்வதற்கும் சுத்த தயவே நெறியாகச் சூழ வேண்டுவது நம் கடமையாம். இந்த நம் ஆன்மா, எட்டோடு இரண்டு சேர்ந்த, (அ : 8 + உ : 2 = ய : 10) பத்தின் உருவாய் உள்ளது எனக் கூறப்படும். இதில் எட்டு அகர எழுத்தாகி, கடவுள் உண்மை வடிவாக உள்ளதாய் மொழியப்படும். அத்தோடுற்ற இரண்டு உகரமாய்த் திகழ்ந்து, அருள் உணர்வாய் விளைந்து அகர பதியைக் கண்டு கொள்வதாம். இதுதான் யகரம் சுட்ட வந்த கடவுளான்ம உண்மை என்ப.

இந்த ஞான சரியைப் பகுதியில் மேற்படி ஆன்மக் கடவுள் அனுபவம் பெறப்பட வேண்டியுள்ளதால் "அருள் துணையே" முதலில் நாடப்படுகின்றது. அவ் அருளைக் கொண்டு அறிந்தடைதல் முறையே. தாயைக் கொண்டு தந்தையை அறிந்து கொள்ளல் போல்வதாம்.

5. இங்கு உகரமும், அகரமும் வரிசைப்படுத்தி நிறுத்திய போது உஅ (28) 28 ஆக விளங்கக் காண்கின்றோம். இவ்விருபத்தெட்டுமே இந்த ஞானசரியைக்கு 28 செய்யுள் வகுக்கப்படக் காரணமாய் அமைந்தனவாம். மேலும் இவ்விருபத்தெட்டு செய்யுட்களும், அந்தாதி முறையில் அணிபெற கோவை செய்து வழங்கப்பட்டுள்ளனவாம்.

Koviloor Digital Library

6. இதின் ஒவ்வொரு பாவும், எண்சீர் அடியான் வந்து எட்டாகிய அகர பதியின் இலட்சணத்தை ஞான சரியாதி நான்கினும் கண்டு கொள்ள உதவுகின்றனவாம். அன்றியும், இருபத்தெட்டு என்று கூறும் போது, இரண்டு (பத்து) எட்டு என்று ஒலி வடிவில் மட்டும் காண்கின்றோம். இது நம் தமிழ் முறையில் (உயஅ) முன்பும் வழக்கில் இருந்து வந்ததேயாம். ஆன்மஞானம் விளங்கிய காலம் அதுவாக இருந்ததால், அப்படி யகரமாகிய ஆன்ம எழுத்தெண் வெளிப்படக் குறிக்கப்பட்டதோ, என எண்ணத் தோன்றுகின்றது. அதே காரண நிமித்தம் இன்று, அவ்வான்ம ஞானம் மறைந்து கிடத்தலின், இந்த இருபத்தெட்டின் இடை நின்ற பத்து இல்லையாம்படி ஆயிற்று போலும்!

மேலும், கடவுள் உள்ளாக மறைந்து இருக்கின்றதால், அதனை எடுத்துக் கூற (வந்த) முயன்ற ஞானநூலை, மறை என இயம்பினர் போலும். அந்த மறையில் மறைந்து கிடக்கும், மறைபொருளாகிய அக் கடவுளை அறிந்து அடைவதற்கு உரை நூலாக செய்யப்பட்டன ஆகமங்கள். செம்பொருட் சிவபதியைக் காட்டி கூட்டி வைக்கும் சைவ ஆகமங்கள் இருபத்தெட்டே என்பர். அவ்வாகமங்கள் ஒவ்வொன்றும் பெரும் கலை ஞானப் பெட்டகங்களாய் இருப்பனவாம். அக்கலை ஞானங்களை ஓர்ந்து பற்றி பயன் காண்பது எளிதல்ல. இவற்றிற்காக வேண்டி, எத்தனை, எத்தனை கலைக் கூடங்கள், சிற்ப ஆலயங்கள், குரு பீடங்கள், சந்நிதானங்கள். அவற்றிற்கான நூல் முதலியனவும், விக்கிரகங்கள் முதலியனவும், குருமகா சன்னிதானங்களும், ஆசிரியர்களும் தோன்றியுள்ளார்கள்! இவைகளாலும், இவர்களாலும் பன்னெடுங்காலம் பயிற்றுவிக்கப்பட்டும், கடைப்பிடித்து ஒழுக விதிக்கப்பட்டும் அந்த மாமறை ஜோதியனைக் கண்டு அடைவது அருமையாய் இருக்கின்றதாம். ஏனெனில், இவ்வாகம வழியில்

Koviloor Digital Library

சென்றவர்கள் கடின பாடுபட்டு உழைத்துக் கண்ட பயன் அற்பமாய்ப் புறத்ததாய் நின்றுவிட்டதாம். புற பக்தி வழிபாட்டிற்காம் பலவாகிய தந்திர, மந்திர, சாஸ்திர, ஸ்தோத்திர நூல்கள் பெருகின. அதனால் அப்படியாக நேர்ந்ததாம். அகவுண்மையைக் கூற வந்த யோக ஞான கலைகளும் கூட மனிதனை, அகத்தில் மூழ்கடித்து விட்டனவே, என் செய்வது! அவை புறத்தில் ஓரளவு சிறப்பொடு வாழ்வித்தன, சிறிதுகாலம், பின்னர் ஒடுக்கி விட்டனவாம். "ஆகம நெறியிற் கண்ட உண்மை பூர்ணமாக வெளிப்பட்டு பயன்படவில்லை". ஏகதேச வெளிப்பாட்டால் ஏகதேசச் சித்தி நலன் காணப்பட்டது உண்மையே. மேலும், அந்த ஆகம நெறி உலகப் பொது நெறியாகக் கூடாது போயது. ஏனெனில் அது, அகமிருக்கும் ஒன்றான உண்மையிலிருந்து அனகமுற விரியவில்லை; புறச் சூழலால் பலவாகத் தோன்றி, ஒன்றான நிலைபேறு அறியக்கூடாது மறைந்ததாம்.

இது சமயம் "சுத்த சன்மார்க்க அனகநெறி" தோன்றி உள்ளதால், மறையாகமம் வழங்கற்கரிய மாண்பொருள் நம் கைவரப் பெறுவோமாக. அதற்கென்றே நம் அருட்பிரகாச வள்ளல் பெருமான், வேதத்தின் அந்தமும், ஆகமாந்தமும் உரைத்தற்கரிய அனுபவ அருட்பெரும் பொருளை இந்த ஞானசரியை மாலையில் இருபத்தெட்டு அருட்ஜோதி மணிகளாகப் பதித்து ஒளிர வைத்துள்ளார். எவரும், சமய மதச் சார்பு கொண்டு நோக்காது, அருட்பெரும் பதியை உள்ளவாறு கண்டடையும் நோக்கோடு, இம்மாலையை பன்முறை நன்முறையில் ஓதுதல் வேண்டும். அங்ஙனம் ஓத ஓத 'ஒருமை' உண்டாம். அந்த ஒருமையில் தயா நெகிழ்வும் தோன்றும் போது உண்மை எல்லாம் விளங்கும். ஞானசரியை இதுதான் என உள்ளங்கை நெல்லிக்கனி போல விளங்கும்.

Koviloor Digital Library

இதில் அடங்கிய இருபத்தெட்டு பாடல்களை ஒவ்வொன்றாக எடுத்துக் கொண்டு விளக்கம் செய்ய முற்படுவோம். "இங்கு குறிக்கப்பட உள்ளது புறச் சான்றுகள் பல கொண்ட விரிவான உரைகளாகா." அஃது கலை அறிஞர் ஏராளமாய்த் தருவார்கள். அவற்றால் நமக்கு அக உண்மை சிறிதும் விளங்காது. பெருநன்மையும் உண்டாகாது. "அருள் வேண்டும் நமக்கு. அவ்வருள் கொண்டு காண அகச்சான்று போதுமானது வழங்கப் பெறுகின்றோம்". இந்த அனக மாலையிலும், மற்ற நம் வள்ளல் தந்துள்ள பாக்களிலும், நம் ஒவ்வொருவருடைய அகத்திலுமே ஒளிர்கின்றது உண்மையான அகச்சான்று. அந்த ஒப்பற்ற அகச் சான்றாம் தயாபெருஞ்ஜோதியை ஒன்றி நின்றுதான், இங்கு இச் செய்யுட்களுக்கு மெய்ப் பொருள் காணலாகின்றதாம். ஆதலின் இவ்வுரைத் துணையால் கடவுள் தயவும் அத் தயவால் "அனகானந்த அனுபவமும்" பெற்றுக் கொள்வீர்கள். பொருள் விளக்கம் எளிதாகக் காணலாம். கண்டு கொண்டால் "திருஅருட்பாவின் இதயம் இதுவே" எனவும் தெளிந்து கொள்ளலாம். உலகுக்கு ஆண்டவர் அருள் வெளிப்படுகின்ற சமயம் அடுத்துள்ளது.

தயவு

Koviloor Digital Library

தயவு

வாய்ப்பறை ஆர்த்தல்

ஒரு விஷயத்தை உலகுக்குத் தெரிவிக்க வேண்டின், விளம்பரம் அவசியமாம். பறை அடித்துக் கூறுதல் பழமுறை. கற்றார்க்கும் கல்லாதார்க்கும் எளிதில் தெரியப்படுத்த, அம்முறை அக்காலத்தில் பொருத்தமாகவே இருந்ததாம். இக்காலத்தில், ஒலிபெருக்கி முதலிய சாதனங்கள், முக்கிய சங்கதிகளை உலகுக்கு அதி விரைவில் தெரியப்படுத்தி விடுகின்றனவாம். இன்னும் எளிதில் மொழி அறியார்க்கும் தெரியப்படுத்தும் வண்ணம் தொலைப்படக்காட்சி (Television) உதவவருகின்றது. இவ்வளவாலும் அறிவிக்கப்பட உள்ளவை புற விஷயங்களே. உலகியல் சிறு பயன் தருபவைகளே. நமது குறிக்கோள் அகத்திருந்து அனகப்பட வேண்டிய ஒன்றாய் உள்ளது. அதனை எப்படி விளம்பரப்படுத்தலாம் என்றால், உண்மை உரைப்பதால் ஆம் என்க. "உண்மை உரை செய்தலாவது, அக ஒளியைப் பரப்புதலாம்". திருவாய் மலர்தல் என்பதின் உட்பொருளும் இதுவே. அதிலிருந்து தயவோடு உரைக்கின்ற ஒவ்வொரு சொல்லும், புறப் பறையார்த்து உரைப்பதை விட வானொலி பரப்புதலை விடச் சக்தி வாய்ந்ததாய் ஒவ்வொருவரின் உள்ளத்தும் பதிக்கப் பெற்று விளங்குவதாய் உள்ளது. ஆதலின், நம் வள்ளல் வாய்ப்பறை ஆர்த்த இப்பாமொழிகள் எல்லோர் உள்ளத்தும் பரப்பப்பட்டு, பதிவு செய்யப்பட்டு என்றென்றும் விளங்கிக் கொண்டு இருக்கின்றதாகும்.

"ஒருமையும் தயவும் கொண்டு உள்ளத் தளியில் உற்றுப் பார்த்தால், இந்தச் செய்யுள்களையும், இவற்றால்

Koviloor Digital Library

சுட்டாமல் சுட்டப்படுகின்ற கடவுளையும் கண்டு கொள்ளலாம். வாய்ப்பறையின் உண்மை இதுவாகும்". இதுவன்றிப் புலனெறியாளர் தம் வாய்ப்பறை சிறப்பற்றதாம். அவர்கள் தம் வாயே பறையாக, நாக்கடிப்பால் ஆரவாரஞ் செய்து ஒலிப்பனவற்றால் பெரும்பயன் உண்டாக மாட்டா என அறிதல் வேண்டும். அருட் பெரும் பயனை அடைவித்தற் பொருட்டே, நம் வள்ளல் இந்த வாய்ப்பறை யார்த்தார், ஆர்க்கின்றார், என்றும் ஆர்ப்பார். உள்ளப் பொறியில் தயாஒளி உருவாய்ப், பாவின் பொருளாய், நம் பதியே ஒளிர்கின்றார். இக்காட்சி, கண்ணால் காணவல்ல புலக்காட்சி அன்று. தயா ஞானமாகிய கண்ணால் மெய்ப்படக் காண வேண்டி உள்ளதாம்.

"இந்தக் கண் தயா விசாரத்தால் திறக்கப் பெறும். ஆகையால், தயவோடு இருந்து விசாரஞ் செய்வோம். கடவுளிடத்து, உண்மையை விளக்கி வழங்கும்படி விண்ணப்பித்துக் கொண்டு இருப்போம். அத்தோடு அருட்பாக்களையும் ஒருமையுடன் ஓதிக் கொண்டு வருவோம். அப்படிச் செய்து கொண்டு வந்தால், நம் தயாபதி நம் கண்ணை நன்கு திறப்பித்து அருள்வார். தயவு ஞானக் கண்ணைத் திறப்பித்து உண்மையை எல்லாம் கண்டு கொள்ளவும் செய்வார்." இப்படியாகத்தான் இந்த ஞானசரியைப் பாடல்களின் பொருளைத் தெரிந்து தெளிதல் வேண்டி உள்ளதாகும். இந் நிலையிலிருந்து கொண்டு காணும் மெய்ப்பொருள், புலனெறியில் பயின்றுள்ளவர்களுக்கு ஏகதேச புற வண்ணமாகத் தோன்றுதல் அன்றி, அக உண்மை வண்ணமாகக் கண்டுகொள்ள முடிகின்றதில்லை. எங்கும் தயாபெருஞ்ஜோதியாய், அகமிருந்து, அனக நிறைவாய் உள்ள கடவுளை புறத்தில் எப்படிக் காண முடியும்? "புறத்தில் காண்பதெல்லாம் அந்தக் கடவுளின் மிகச்சிறு சிறு கூறே

Koviloor Digital Library

யல்லாமல் பூரணம் அல்லவாம்." ஆதலின், அப்பூரணப் பொருளை அருளாலே அகத்தில் கண்டு கொள்ளுவோம். அதனோடு கலந்து ஒன்றி நின்று இந்த ஞான சரியா மாலையை நுண்ணிதாகத் துருவிப் பேசப்படாப் பொருளை உளம் கொண்டு மகிழ்வோமாக.

தயவு

Koviloor Digital Library

தயவு

அருட்பெருஞ்ஜோதி
அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை
அருட்பெருஞ்ஜோதி

நூல்: தைப்பூச விழாவின் சிறப்பு (speech on 31. 12. 2000)

மரணமிலாப் பெருவாழ்வு = ஆறாவது தொழில்

முன்னோர் பலரும் இறை அருளை வேண்டி அகநிலையில் மறைந்தனர். ஆனால் வள்ளல்பெருமானோ இறையருளைப் பெற்று செயல்பட ஆரம்பித்தார்.

'விஞ்ஞானகலர்' என்று ஆன்மாக்களை குறிப்பிடும்போது ஆணவமலம் மட்டும் நீங்காத ஆன்மாக்கள் தனி உரு அல்ல, ஆணவ மலம் நீங்கிய பின் ஆண்டவரோடு கலந்து இருந்து அனுபவிக்கின்றார். **மற்றவர்கள் பிறவாமையை வேண்டினர். இவரோ இறவாமையை வேண்டினார்.** மும்மலம் இல்லாத நிலை, அருள் ஒளியின் சேர்ப்பினால் சுத்த பிரணவ ஞானதேகம் ஆக்கப்பட்டது. இறைவனின் ஐந்தொழில் செய்யும் ஆற்றலையும் இவர் பெற்றுக் கொண்டார்.

ஆக்கல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்தொழிலுடன் ஆறாவது தொழிலாக, மரணமிலாப் பெருவாழ்வு தருதல் செயலையும் செய்து வருகிறார்.

வள்ளல் பெருமான் கடவுளில் ஐக்கியமாகி மறையவில்லை. கடவுளே இவரில் தன்னை முழுமையாக வெளிப்படுத்திக் கொண்டார்.

தயவு [signature]

https://www.facebook.com/112254003883417/posts
Daeiou Sathiya Gnana Kottam, Dindigul.
+ 91 99767 50609

பா விளக்கம்

ஞான சரியை - செய்யுள் : 1

நினைந்துநினைந் துணர்ந்துணர்ந்து
நெகிழ்ந்துநெகிழ்ந் தன்பே
நிறைந்துநிறைந்து ஊற்றெழுங்கண்
ணீரதனால் உடம்பு

நனைந்துநனைந் தருளமுதே
நன்னிதியே ஞான
நடத்தரசே என்னுரிமை
நாயகனே என்று

வனைந்துவனைந் தேத்துதும்நாம்
வம்மினுல கியலீர்
மரணமிலாப் பெருவாழ்வில்
வாழ்ந்திடலாம் கண்டீர்

புனைந்துரையேன் பொய்புகலேன்
சத்தியம்சொல் கின்றேன்
பொற்சபையில் சிற்சபையில்
புகுந்தருண மிதுவே.

உரை : 'வம்மின் உலகியலீர்' என்று உலகிலுள்ள எல்லோரையும் வரவேற்கின்றார். அன்று என்றோ ஒரு நாள், ஏதோ ஓரிடத்தில் இருந்து கொண்டு, உலகில் அப்பொழுது இருந்தவர்களை மட்டுமா வரவேற்றார்? அல்ல. நித்தியமாக அருட்பெருஞ்ஜோதி விளங்கும் பதிக்கண் இருந்து கொண்டு, அன்றும், இன்றும், என்றும் வரவேற்கின்றார்; வரவேற்றுக் கொண்டே இருக்கின்றார், எக்காலத்தவரையும், எவ்விடத்தவரையும். இப்படி எதற்காக எல்லோரையும்

Koviloor Digital Library

வரவேற்றுக் கொண்டேயிருக்கின்றார்? என்றால், "மரணமிலாப் பெருவாழ்வில் வாழ்ந்திடற்காகத்தான் வரவேற்கின்றார்". ஏன் இப்பொழுதே வரவேண்டும் என்கின்றார்? என்றால், இந்த சந்தர்ப்பத்தில் திருவருளால், "பொற்சபையும், சிற்சபையும் காட்டிக் கூட்டி வைக்கப்பட உள்ளோம்". இவ்விஷயம் முக்காலும் உண்மையானது. புனைந்துரையல்ல; பொய் மொழியல்ல; சத்திய வாசகமேயாம். ஆகையால், ஒவ்வொருவரும் இந்த நல்லதொரு வாய்ப்பைத் தவற விடக்கூடாது. ஏனெனில், இதுபோன்ற பிறிதொரு நல்வாய்ப்பும், சூழ்நிலையும் எவ்விடத்தில், எந்தக்காலத்தில் ஏற்படப் போகின்றதோ? அதற்குள்ளாக எவ்வளவு அவத்தைகளும் தடைகளும் ஏற்படுமோ? அவையெல்லாம் சொல்லும் தரமன்று. இந்தச் சமயம் தப்பினால், வரும் பிறப்பில் கூடுமோ? அல்லது இன்னும் எத்தனை பிறவிகள் சென்றபின் சந்தர்ப்பம் உண்டாகுமோ? எனத் தெரியக் கூடாது இருக்கின்றதாலே, இப்படி இது வலியுறுத்தப்படுகின்றது இப்போது. திருவருள் ஆணையும், நமது கடமையும் இதுவாக அறிந்து கொள்ளப்படுகின்ற இந்த ஒரு வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளுதலே அறிவுடைமை ஆகும். முயன்று அடையாது வீண்போதல், அறியாமையே, பேரவத்தையே என்றாலும், நம் பதி தனிப்பெருந்தயவு உடையவர். ஆதலின் எவரையும் தன்னின்ப நிலைக்கு ஏற்றி வைக்காமல் விடார். இப்பொழுது இல்லையானாலும், என்றோ ஒரு நாள் ஒவ்வொருவரையும் மரணமிலாப் பெருவாழ்வில் நிலவச் செய்தே தீருவார். இதனை, எவர் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் முடிவில் பெற்றேயாக வேண்டும். திருவருள் ஆணையிது. ஆகையால், நாம் ஏன் இந்தச் சந்தர்ப்பத்தை நழுவ விடவேண்டும். இன்னும் தொல்லைப்பட்டுக் கொண்டு இந்தப் பிறவிச் சூழலில் அலமர வேண்டுமா? "உண்மையான

Koviloor Digital Library

இன்பத்தை, இப்பொழுதே கிடைக்கப் பெற உள்ளதை மறுத்துவிட்டு, பொய்யான புலபோகப் பிழைப்பை, ஏன் இன்னும் தழுவிக் கொண்டிருத்தல் வேண்டும்? அவற்றைப் பற்றற விட்டுவிட்டு அருளம்பலத்திற்கே வம்மின்! வம்மின்!!"

மேற்குறித்த "அருளம்பலம் எங்கே இருக்கின்றது? அதனை எப்படிச் சென்று அடைவது? அடைந்துதான் என்ன செய்வது? சும்மா அம்பலத்திற்குச் சென்று மீண்டும் திரும்பி இங்கு வந்து விடுவதா?" இவ்வினாக்களுக்கு எல்லாம் சரியான விடை தெரிந்து கொள்ள வேண்டுமல்லவா. ஆம், தெரிந்து கொண்டுதான் ஆக வேண்டும்.

அருளம்பலம் உள்ள இடம்

அருள் என்பதே கடவுள் உண்மைத் தன்மை. இது எங்கே விளங்குகிறது? "மனிதப் பிறப்பு ஏற்று, நிரம்பிய பகுத்தறிவு நிலைக்கு மேலே விளங்கும் ஆன்மாவினிடத்தே இப்பொழுது வெளிப்பட்டு விளங்குகின்றதாம்." இந்த ஆன்மாவில், கடவுள் மறைந்திருந்து கொண்டு, அந்த அருள் உண்மையை வெளிப்படுத்த இசைந்துள்ளார். ஆகவே, **ஆன்மாவே அருளம்பலமாக இருக்கின்றது.** சரி, இந்த அருளம்பலமாகிய ஆன்மா எங்கே உள்ளது? என்னில், "மெய்யறிவுப் பீடமாகிய ஓங்கார மூளையின் மீது, அந்த மெய்யறிவு மயமாகவே மிளிர்கின்றதாகும்." இந்த **மெய்யறிவு ஒளியே அருட்ஜோதியாம்.** இவ்வொளி, ஆன்மாவில் நித்தியமாக இருந்து அருட்பெரு நடனம் புரிந்து கொண்டேயுள்ளது என்றாலும், அகத்தே மறைந்திருந்து கொண்டு, அனகத்தே விரிந்து நிறைந்துள்ள காரணத்தால், புறத்தில் அறிந்து கொள்ளப்படுகின்றதில்லையாம். ஆன்ம அகத்திலிருக்கின்ற, அந்த அருட்ஜோதியின் ஐந்தொழிற் செயலாலே, அதனைச் சூழ்ந்து ஓரறிவுதேக முதல்,

Koviloor Digital Library

ஆறறிவுத்தேகம் வரை எத்தனையோ பிறவிகள் வந்து வந்து போய்க் கொண்டேயிருக்கின்றனவாம். அப்படித்தான் இச்சமயம், அந்த ஆன்மாவைச் சூழ இந்த தேகம் வந்து பகுத்தறிவுக்கு மேலே விளங்கும் அந்த அருள் உண்மையைப் புரிந்து கொண்டுள்ளதாம். இப்பொழுது அந்த அருட்பெரும் பதியின் அருளால் அதனையே காண்கின்றோம். அதற்கு நேர் நின்று, புருவ மத்திய இடத்திருந்து உள்நோக்கி சிரநடுப் பீடத்தே கண்டு கொள்கின்றோம். சுத்த மன அறிவு மயமாக, இரு கண்ணிடை நின்று ஆன்மாலயத்தைக் காண்கின்றோம்.

இந்த ஆன்மாலயம் 'அருளம்பலம்' எனக் கூறினது ஏன் என்றால், அந்த அருள் ஞானம் விளங்கும் இடமாகையால் என்ப. அன்றியும், அம்பலம் என்ற சொல், அம்+பல்+அம் என விளங்கிடலால், அகவுண்மை மிக அறியக் கிடக்கின்றதாம். அதாவது, அ (உ) ம் + பல் + அ (உ) ம்= அது ஓம் + பல் + ஓம் என்றால் இதில் 'ஓம்' என்றது அருளென்னும் பொருளுடையதாய், பிரணவஜோதி வண்ணமாய் உள்ளதாகும். ஓரான்ம அணு அருட்ஜோதியால் சூழ்ந்தே உள்ளது எப்பொழுதும். இப்படி எப்பொழுதும் 'ஓம்' அல்லது 'அம்' என்னும் அருட்ஜோதியால் சூழப்பட்டுள்ள ஆன்மா இந்தப் பிறப்பில் இப்பொழுது 'பல்' என நடுவிளங்கி நிற்க, 'அம்' ஆல் சூழப்பட்டதாய், அம்பலமாகி விளங்கக் காண்கின்றோம். "ஆகவே, நமது அருளம்பலம் என்னும் ஆன்மாலயம் சிரநடு ஓங்கார மூளையின் மீது 'ப'கர வடிவ பீடத்தின் மேல் 'ல'கர மெய்வண்ண திரயோதசாந்த அருள் வெளியாகத் திகழக் கண்டு கொள்ளலாகின்றதாம். முதல் கேள்விக்கு விடையாக அம்பலம் விளங்கும் இடம் இதுவென ஈண்டு விளக்க நேர்ந்ததாம்".

இனி இரண்டாவதாக, அந்த அம்பலத்தை எப்படி அடைவது, அடைந்துதான் என்ன செய்வது என்பன பற்றி

Koviloor Digital Library

விளக்குவாம். இந்த அருள் அம்பலத்திலே நம் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரே நித்தியமாக எழுந்தருளி உள்ளார். அவரைப் பிறவிடத்தில் காணமுடியாது. நம்மிடத்தில், நமது ஒருவர் இடத்தில் இருக்கின்றதே போல், எல்லோருடைய சிரநடுவுள்ளும் இருக்கின்றவர்தானே என்றால், நமது அகத்தே மெய்யறிவுக்கே விளங்குகின்ற ஒருவராயும், அந்த ஒருவர்தானே, அருட் காரியார்த்தமாகத் தன் பிரதிபிம்பத்தையே பிற பிற இடங்களில் காட்டி, அன்புச் செயல்புரிந்து, அருள் விளக்கம் பெற உதவுகின்றவராய் உள்ளதால், "நமது அம்பலத்தின் கண்ணே அனுபவபூர்வமாகக் கண்டுகொள்ள உள்ளார்" என அறிந்து கொள்ளல் வேண்டும். "**நமது அம்பல நிலை அடையப் பெறா விட்டால் அக அனுபவம் வராது**". புற வடிவங்களில் கடவுளிருப்பதாகக் கருதி பாவிப்பதும், புலனின்பம் கருதி உதவுவதும் பந்தத்தையே உண்டுபண்ணும். அதனால் வினைப் பிறவி சூழ்ந்து கொண்டே தானிருக்கும். ஆகையால், அம்பலத்தரசை அகத்தே கண்டு, அவருடன் கலந்து ஒன்றிடவே வேண்டும். இதன் பொருட்டே, ஆண்டவர் **பற்று ஒன்றே நிலைக்கவும், பிற பற்றுகள் யாவும் ஒழியவும்**, சத்விசாரத்தால், உள் **நிலைக்கண் உய்க்கப்படுகின்றது**. அந்த விசார முறையீடு, பதியைப் பற்றியும், அப்பதியின் அன்பாற்றலைப் பற்றியும், அம்பல முன்னிலிருந்து கொண்டு தீவிரமாய் நினைத்தல் வேண்டுமென்பது குறித்து "**நினைந்து நினைந்து, உணர்ந்து உணர்ந்து**" எனக் கூறப்பட்டு உள்ளதாகும். அங்ஙனம், எல்லாம் வல்ல அன்பு ஜோதியை அம்பலத்தே கண்டு பற்றி நிற்கும் போது, 'நான்' என்ற அகங்கார போதம் நழுவிப் போக, நாமே அன்பு ஒளியாய் உட்பெருகுகின்றோம். அந்த அன்புணர்ச்சியை உடம்பு முழுவதும் நிறைத்துக் கொள்ள வேண்டுமென்பதே, "அன்பே நிறைந்து நிறைந்து, ஊற்றெழுங்கண்ணீர் அதனால்

Koviloor Digital Library

உடம்புமுழுவதும் நனைந்திட வேண்டுமாம்". அழுகைக் கண்ணீரல்ல ஈண்டு குறிக்கப்படுவது. கண்ணீர் என்றாலே கண்ணீரின் தன்மையாகிய 'தயவு 'அல்லது அன்பே. "தயவினால், அன்பினால், இரக்கத்தினால், அக நெகிழ்ச்சியால் உண்டாகின்ற அனுபவம் இந்தக் கண்ணீராக விளங்கும்." இந்த உணர்ச்சி உண்டானால்தான் நம் பதிபால் பிரிவற்ற பற்று உண்டாகி நிலைக்கும். அந்தப் பிரியாநிலை வரும் வரை, அந்தச் சந்நிதியிலிருந்து, "அருளமுதே, நன்னிதியே, ஞான நடத்தரசே என்னுரிமை நாயகனே" என்று தோத்திரம் பலபுரிந்து கொண்டிருத்தலே முறையாகும். இப்படி நினைவும், துதியும் மேலும் மேலும் ஏற்பட்டுக் கொண்டேயிருந்தால், அந்த அம்பலவாணனை, அம்பலத்திற் கண்டு, ஒன்றி விடலாம். அப்போது 'நாம்' என்பது போய் 'அவரே'யாகி வாழலாம்.

ஞான சரியை - செய்யுள் : 2

புகுந்தருண மிதுகண்டீர்
நம்மவரே நான்தான்
புகல்கின்றேன் என்மொழியோர்
பொய்மொழி என்னாதீர்

உகுந்தருண முற்றவரும்
பெற்றவரும் பிறரும்
உடைமைகளு முலகியலும்
உற்றதுணை அன்றே

மிகுந்தசுவைக் கரும்பேசெங்
கனியேகோற் றேனே
மெய்ப்பயனே கைப்பொருளே
விலையறியா மணியே

Koviloor Digital Library

தகுந்ததனிப் பெரும்பதியே
தயாநிதியே கதியே
சத்தியமே என்றுரைமின்
பக்தியொடு பணிந்தே.

உரை : நிலையான வாழ்வு விளங்காத புறவுலகில், வீணிற் பிழைத்துக் கொண்டிருக்கின்ற நம்மவர்களுக்கு ஒரு விண்ணப்பம் என்னவென்றால், ஆனந்த வாழ்வு விளங்கும் அருட் பேரம்பலத்திலே புகுந்து கொள்வதற்குத் தக்க சமயம் இதுவாக இருக்கின்றது. வந்து கண்டு கொள்ளுங்கள். எனது வார்த்தை உண்மையானது. பொய் என்று நினைத்து சும்மா இருந்து விடாதீர்கள். இந்த உலகில் நமக்கு உற்ற துணையாக உள்ளது எது என்று அறியாது இருக்கின்றீர்கள். "உகுந்தருணம்" என்றால், வெளியில் கொட்டுகின்ற சமயம்; அதாவது, பொன் பொருள் முதலியன நிறையப் பெற்று புறவுலகம் மிக மதிக்கின்ற தருணமாம். அப்பொழுதுதான், முன்பு எந்தச் சந்தர்ப்பத்திலும் நெருங்கி வந்து உறவு கொண்டாடாதவர்களும் கூட சொந்தம் சொல்லிக் கொண்டு வந்து சூழ்வார்கள், "கனிமரம் பழுத்தால் பறவைகள் வந்து கூடுவன போல". பொருள் இல்லாவிடத்து திரும்பிக்கூட பார்க்கமாட்டார், இந்தப் பொய் உறவினர்கள். கைப்பொருளங்கு உண்டாயின் எல்லோரும் சென்று எதிர் கொள்ளுதல் காண்கின்றோம். "கைத்துடையான் காற்கீழ் ஒதுங்கும் கடல் ஞாலம்" என்பது மெய் உணர்ந்தோர் மொழி. ஆகையால், இந்த உலகில், பெற்றவர்கள் கூட நமக்கு உற்ற துணை ஆகார் என அறிகின்றபோது மற்றவர்களைக் குறித்து என் சொல்லுவது? எவரும் உண்மைத் துணை என கொள்ளத் தகாரே. இது போலத்தான் புற உடைமைகள், உலகியற் சுக போகங்கள். எவையும் துணையாக நிற்காவாம். ஆகையால் உலகில் எவர் மீதும், எப்பொருளின் மீதும் மற்று எதன்மீதும் பற்று கொண்டு உற்ற காலத்தில்

Koviloor Digital Library

உதவாது போதல் கண்டு வருந்தி, கசந்து போவானேன். இப்பொழுது முதலே, நமக்கு உற்ற துணையாய், பற்றுதற் குரித்தாயிருக்கின்ற நம் அருட்பெருஞ்ஜோதியைப் பற்றிக் கொண்டு உய்வோமாக.

இதற்காக, நம் பதிவளர் திருச்சந்நிதி யுற்று, பக்திப் பணிவோடு துதித்துக் கொண்டிருப்போம். மிகுந்த "சுவைக் கரும்பே" என்போம். இந்தப் பதியாம் கரும்பினிடத்திருந்து தான், கன்னற் கனியாம் அருட்பெரும் பயன் கிடைக்கப் பெறவுள்ளோம். ஆதலின், இதனைச் சுவைமிக்க கரும்பெனப் போற்ற நேர்கின்றதாம். பின்னர் "செங்கனியாக" கூறப்படுகின்றது, செம்மை நிறத்தை மட்டும் குறிப்பதன்று. நல்லியல்பும், சிறந்த தன்மையும் சுட்டப்படுகின்றதாம். இந்த செம்மை என்ற பண்புச் சொல்லால் "செம்பொருளாகிய நம் பதியே" செங்கனி என்றதன் உண்மை உளங் கொள்வோமாக. அடுத்து "கோற்றேனாகக்" கூறினது யாதெனின், கேடற்று விளங்கும் சுத்த சத்துவப் பொருளில் தேன் ஒன்றாகும், அதனிலும் கோற்றேன் சிறப்புடைத்தாம். கோல்+தேன் = கோற்றேனாம். இது கொம்புத் தேனாகக் கூறப்படும். அன்றியும் கோ-என்ற சொல்லைத் தனித்தெடுத்துப் பொருள் படுத்தும்போது, தெய்வம், கடவுள் என்றே ஆதலின், இது நம் பதியையே சுட்டுவதாகக் கொள்ளலாம். முன்னோரும் 'தேன் போல்வனைச் செவ்வேலனை' எனக் கூறியுள்ளனர்.

அடுத்து, "மெய்ப்பயனே, கைப்பொருளே" என ஓதப் படுகின்றது "மெய்ப் பயனாவது உண்மைப் பயன் என்ப. அது, இத்தேகத்தைப் பெற்றதனால், அடையப் பெற வேண்டிய கடவுட் பேறே ஆம்."

"உடம்பினைப் பெற்ற பயனாவதெல்லாம்
உடம்பினில் உத்தமனைக் காண்".

Koviloor Digital Library

என்பது ஔவையின் ஞானோபதேசம். அது, இப்பொழுது, நம் அருட்பெருஞ்ஜோதி பதியை இவ்வுடம்பில் வைத்துக் கண்டு கொள்ளுவதே மெய்ப் பயனாக தெளிந்து கொள்ளப்படுகின்றதாம். அந்த மெய்ப்பயனின் அடைவே, அல்லது அனுபவமே கைப்பொருளாக ஈண்டு உரைக்கப்பட்டுள்ளதாம். கைவரப்பெறுதல், சொந்தமாக அடைதல், உரிமை ஆக்கிக் கொள்ளுதல், உடைமையாதல் எல்லாம் "கைப்பொருள்" என்பதில் அடங்கும். (உள்ளம்) கைக்கனி என்பதும் இந்த அனுபவ நிலையையே சுட்டி நிற்பதாகும்.

பின்னர், "விலையறியா மணியே" என விளம்பப்படுகின்றது. அற்பப் பயன் தந்து ஒழியும் உலகம் கண்ட மணிக்குத்தான், இவ்வளவு விலை பெறும் என மதிப்பிட முடியும். ஒப்புயர்வற்ற நம் அருட்பெருஞ்ஜோதி மணிக்கு விலை மதிப்பேது! ஆனால் இவ்விலை அறியா மணியோ காசு (குற்றம்) இல்லார்க்கே உரிமையாய் உள்ளதாம். "இந்த உலகில் காசில்லாரே அருட் செல்வர்களாவர்". அவர்கட்கே இம் மணி வலிய வழங்கப்படும். நாமும் இந்த காசில்லார்க்குரிய மாசில்லா மணியைப் பெறுதற்கு, பக்தியோடு பணிந்து, "தகுந்த தனிப் பெரும் பதியே, தயாநிதியே, கதியே, சத்தியமே", என்றெல்லாம் போற்றித் துதிப்போமாக.

தகுந்த தனிப்பெரும் பதியாவது, தனிப்பெரும் பதி ஆவதற்கு தகுதி வாய்ந்தவர் என்பது கருத்து. அதாவது, எல்லோருக்கும் மேலாய், தனக்கு ஒப்பில்லாராய், எக்காலத்தும், எவ்விடத்தும், எப்பொருளின் மீதும், எவ்வுயிரின் மேலும் தன் ஆணையைச் செலுத்துகின்றவராய் ஏக நாயகனாய் உள்ளவர் நம் பதியே. ஆதலின், அவரே தகுந்த தனிப்பெரும் பதியாகச் சாற்றப்படுகின்றார்.

Koviloor Digital Library

"தயாநிதி" என்று குறிக்கப்படுவதால், கடவுளரின், மெய்ப்பொருளின் தனிப்பெருந்தயவுத் தன்மை சுட்டப் படுவதாகும். யாவராலும் விரும்பப்படும் திருவொடு விளங்குகின்றது இந்தத் தயாநிதியாகும். மற்ற உலக நிதியைத் துறவோர் விரும்புகின்றதில்லை. ஆதலின், அவர்கள், அந்த அழிபடு பொருளை, வெறுக்கை என்றும் ஆட்கொல்லி என்றும் சொல்லுகின்றார்கள். ஆனால், இன்றைய உலகம், அந்த மாய நிதியைத்தானே மிக முக்கியமாக மதித்துக் கொண்டாடுகின்றது. நம் தயாநிதியை யார் அறிய முயலுகின்றார்கள்! உலகிகளுக்குப் பொருளே அல்லவா பரம்பொருளா யிருக்கின்றது. சன்மார்க்க ஞானியர்க்கே, அருளே பொருளாக, சுத்த தயவே பெரு நிதியாக உள்ளதாம்.

'கதி'யே என வழுத்தப்படுகின்றதும், நம் அருட்பெருஞ்ஜோதிக்கே பொருந்துவதாம். கதியாவது, செல்லும் மார்க்கம், அடைவிடம், புகல் எனவெல்லாம் உள்ளதாம். அப்படியுள்ளது நம்முடைய அருட்பெருஞ் ஜோதியே எனக் கண்டு கொண்டுள்ளோம். மற்ற உலகியற் கதிகள் எல்லாம் பெருமையுடையன அல்லவாம். போற்றிக் கொள்ளத்தக்கனவும் அல்லவாம்.

முடிவாக 'சத்தியமே' என்று கூறித் துதிக்கப்படுகின்றது. சத்தியமாவது உண்மை என்ப. சத்தாம், நித்தியமாய் அழியாது இலங்கும் தன்மையே சத்தியம் என்றதன் மெய்ப்பொருள். அப்படி உள்ளது நமது அருட்பெருஞ்ஜோதிபதி ஒன்றே ஆதலின், அதுவே சத்தியம். "அந்த சத்திய வஸ்துவை, சத்தியமாக அறிந்து சார்ந்து கொள்ளுகின்றவர்கள், அந்தச் சத்திய ஜோதியாகவே நித்திய மங்களத்தோடு நிலவுவது சத்தியமேயாம்."

இங்கு மேற்கொண்டுள்ள ஞான சரியா மார்க்கத்தில்,

Koviloor Digital Library

உள்ளத்திலங்கும் அருட்பெரும் பொருளைக் கண்டு கொண்டு, பரோபகாரச் செயல் வெளிப்பட அனக வாழ்வு வாழ்தல் வேண்டியுள்ளதால் தனிமையில் இருந்து, அருட்ஜோதியின் புகழ் பாடிக் கூடி நிற்கப் பழகுதற் பொருட்டு இப்பாக்கள் இசைக்கப்படுகின்றனவாக கண்டு கொள்வோமாக. அப்படி அகநிலை பெற்றுக் கொண்டால் தான், மேல் அனக வாழ்வு வாழ முடியும். இனி, மூன்றாம் பாடலைத் தொடருவோம்.

ஞான சரியை - செய்யுள் : 3

பணிந்துபணிந் தணிந்தணிந்து
பாடுமினோ வுலகீர்
பரம்பரமே சிதம்பரமே
பராபரமே வரமே

துணிந்துவந்த வேதாந்த
சுத்தவனு பவமே
துரியமுடி யனுபவமே
சுத்தசித்தாந் தமதாய்த்

தணிந்தநிலைப் பெருஞ்சுகமே
சமரசசன் மார்க்க
சத்தியமே இயற்கையுண்மைத்
தனிப்பதியே என்று

கணிந்துளத்தே கனிந்துநினைந்
துரைத்திடிலப் பொழுதே
காணாத காட்சியெல்லாம்
கண்டுகொள லாமே.

உரை : இதில், துதிக்க வேண்டிய முறையைப் பலவாக விரித்துரைக்கின்றார். அத்துதிக்கப்படு பொருளாகிய கடவுள்

Koviloor Digital Library

ஒளியைக் காணும்போது, இதுவரை காணாத காட்சியெல்லாம் கண்டு கொள்ளலாமே என சுயானுபவம் கூறுகின்றார். அதற்கு,"அவ்வனுபவம் பெறுவதற்குப் பணிந்து, பணிந்து, அணிந்து, அணிந்து பாடுதல் வேண்டும். அக நோக்கிய பணிவு, லலாட பீடத்தில் இருந்து, சத்விசாரத்தால் ஏற்பட வேண்டும்." மனம், அதிகம் உலக விஷயங்களிலே ஓடிக் கொண்டிருக்கும் இயல்புடையதாய் இருத்தலின், முதலில் அவ்விடத்து ஒருமையுற்றிருப்பது கடினமாகும். தயவோடு கூடிய நிராசை உண்டாகி இருந்தால் மனம் எளிதில் ஒருமையுறும். அப்படி ஒருமையுறவே மேலும் மேலும் பணிதல் செய்ய வேண்டி உள்ளதாம். "தெய்வத் திருவடியில், ஆறங்கமும் நிலம் தோயப் பணிவதால், தேகப் பற்றும் தற்போதமும் அழிகின்றன." அப்போதுதான், மாசற்ற மனத்தின் கண் ஈசன் ஒளி வீசும். ஆதலின் அங்ஙனம் தொழுதெழுந்து நின்று, அவ்வீசனது அருட் பெருமையை, உன்னியுன்னி அணியுறப் பாடிப்பாடிக் கொண்டிருத்தல் முறையாகும். அவ்வருள் ஒளியில் தான், "பரம்பரமே, சிதம்பரமே, பராபரமே, வரமே, துணிந்து வந்த வேதாந்த சுத்த அனுபவமே, துரியமுடி அனுபவமே; சுத்த சித்தாந்தமதாய்த் தணிந்த நிலை பெருஞ்சுகமே, சமரச சன்மார்க்க சத்தியமே, இயற்கை உண்மைத் தனிப்பதியே," என்றெல்லாம் அழகுறப் புனைந்து புனைந்து பாடலாகின்றது. இந்தப் புனைபெயர்கள் எல்லாம் பொருள் தெரிந்தே ஆக்கப் படவேண்டும். முன்னோர் கற்பித்தனவாகக் கொண்டு ஓதல் சிறப்புடைத்தன்றாம். அச்சொற் பொருளை ஒருவாறு ஈண்டு சற்றே விளக்குவாம்:

பரம்பரம் என்றது, நம் பதியின், எல்லாவற்றிற்கும் மேலான நிலையை உணர்த்த வந்த சொல்லாம். 'பரம்', என்றாலே உயர்ந்தது என்று பொருள்படும். இந்தப் பிரபஞ்சத்தில் எது ஒன்று உயர்ந்ததாகக் காணப்படுகின்றதோ

Koviloor Digital Library

அந்த உயர்ந்ததற்கும் மேலானது தான் பரம்பரம் ஆகிய நம் பதியாம். அன்றியும், ஆதியும் அந்தமும் இல்லாமல், தொடர்ந்து வந்து விளங்கிக் கொண்டிருப்பது பரம்பரையான பொருளாகப் பகரப்படும். அது நம் அருட்பெருஞ்ஜோதியாம் பரம்பொருள் தான். இதனால் இதுவே, 'பரம்பரமே' எனப் பரவப்பட்டது. சிதம்பரம் - என்றால், சித்+அம்பரம் = ஞான ஆகாசம் நம் பதியின், அருள் ஞானம் விளங்கும் அக ஆகாசமே சுட்டப்படுவதாம்.

இனி பராபரம் - என்றால், பரம் அபரம் என விளங்குவது. எது உயர்ந்தது அல்லது சிறந்ததுவோ அதுவே, 'பரம்' எனப்படும்போது, அதுவல்லாத பிற எல்லாம் 'அபர'மாகவே கொள்ளப்படும். உள்ளது ஒன்றே. அதில் ஒரு கூறு 'பரம்' என்றால் எஞ்சியது 'அபரம்' ஆம். இதுபோல், கண்டம் ஒரு பகுதி, அகண்டம் முழுமையாம். பரமும், அபரமும் சேர்ந்தே முழுப்பரம்பொருளாகும். ஆகையால்தான், நமது ஆண்டவர் பராபரமாகப் போற்றப்படுகின்றார்.

வரமே - என்று குறிக்கப்படும் போது, உயர்ந்த தெய்வநிலைப் பேற்றைச் சுட்டும். நம் பதியே அப்பேறாகவும், அப்பேற்றை வழங்கும் ஒன்றாகவும் அறிந்து கொள்ளப்படுவதால், இங்ஙனம் 'வரமே' எனப் போற்றிக் கொள்ளப்படுவதாம்.

மேலே கூறப்படுவது சுத்த அனுபவ நிலைகளாம். அதில் துணிந்து வந்த வேதாந்த சுத்த அனுபவம் நம் பதியாகும். அதாவது, வேதாந்தத் துணிவுப் பொருள் என்னவென்றால், "நான் கடவுள்" என்பதுவே. இது அந்த வேதாந்தத்தில் பாவனா வண்ணமாய்த் தோற்றி ஒழிவதே அன்றி நிலைத்து விளங்குவதில்லை. அருள்மய சுத்த சன்மார்க்கத்தில்தான், 'அது நான்' என்ற அனுபவமும் வாழ்வும் உண்டாகின்றதாம். "இந்த பதியுணர்வு, விழிப்பு

Koviloor Digital Library

நிலையில் விளங்குவதே போல், கனா நிலையினும், உறக்க நிலையினும், கழன்று போய்விடாது, மேலும் நிலைத்திலங்குவதே துரியானுபவ நிலையாகக் கூறப்படும்". துரியம் என்ற சொல், தன்மயமாய் நிற்பது என்றே பொருள்படும்.

சித்தாந்தம் - சிவனருளால், பசுத்துவம் நீங்கி, இரண்டற்றுப் போதல். இதில் காணும் சிவானுபவம் தேகம் உள்ள பரியந்தமே நிலைக்கின்றதாம். ஆதலின், அதனை மறுக்க வேண்டி சுத்த சித்தாந்தம் வருவிக்கப்பட்டது. இதில், சிவானுபவம் ஒழியாது விளங்கவல்லதாம். சிவமாயிருந்த பதியே, "தணிந்த நிலைப் பெருஞ்சுகமாக" சுத்த சன்மார்க்க அனுபவத்தில் இறங்கி விளங்குகின்றதாம். ஆகையால், நம் சுத்த நெறியின் வந்திலங்கும் சத்திய வஸ்துவை, "இயற்கை உண்மையாம் சத்துப் பொருளாக, தன்னிகரில்லா ஒன்றாக" போற்றப்படுவதாம்.

இவ்வளவுமாக விளங்கும் பதியை முதலில் நம் உள்ளத்தில் பதித்துக் கொள்ளல் வேண்டும். அதுதான் கணிந்திடல் வேண்டுமெனப்பட்டது. கணித்தலே இங்ஙனம் மெல்லினத்து ஓதப்பட்டதாம். கணக்கிட்டுப் பதிவு செய்தலே கணித்தல் என்ப. அப்படிக் கடவுள் தத்துவத்தை உள்ளத்தில் இருத்திக் கொண்டபின், உள்ள நெகிழ்வால், கனிவால் துதி செய்யச் செய்ய உண்மைகள் எல்லாம் புலப்பட ஆரம்பிக்கும். அப்பொழுது, காணாத காட்சியெல்லாம் கண்டு கொள்ளலாம். "இந்தக் காணாத காட்சி, புலக் கண் காட்சி மட்டுமல்ல கரணக்காட்சி, ஜீவக்காட்சி, ஆன்மக்காட்சியும், அவற்றிற்கு மேலாம் அருள் அனுபவமுமாம். இக்காட்சிகளின் முடிவில் பெறுவது சுத்த சுக ஞான பேரின்பமேயாம்"

Koviloor Digital Library

இனி, அவ்வுண்மைக் காட்சி விசேடத்தை உணர்த்தி மேனிலைக்கண் அடைவிக்கும் உபாயமாக அடுத்த பாடல் தொடுக்கப்பட்டுள்ளதாகும். அதனை இங்கு எடுத்துக் கொண்டு ஆய்ந்து பார்க்கலாம்.

ஞான சரியை - செய்யுள் : 4

கண்டதெலாம் அநித்தியமே
கேட்டதெலாம் பழுதே
கற்றதெலாம் பொய்யேநீர்
களித்ததெலாம் வீணே

உண்டதெலாம் மலமேஉட்
கொண்டதெலாம் குறையே
உலகியலீ ரிதுவரையும்
உண்மையறிந் திலிரே

விண்டதனால் என்இனிநீர்
சமரசசன் மார்க்க
மெய்ந்நெறியைக் கடைப்பிடித்து
மெய்ப்பொருள்நன் குணர்ந்தே

எண்டகுசிற் றம்பலத்தே
எந்தையருள் அடைமின்
இறவாத வரம்பெறலாம்
இன்பமுற லாமே.

உரை : நாம் இந்த உலகில் எதற்காகத் தோற்றுவிக்கப் பட்டுள்ளோம்? நமது இலட்சியம் என்ன? அந்த இலட்சியத்தை அடைவது எப்படி? என்றெல்லாம் தெரிந்து கொள்ளவேண்டும். அருளாளர் உள்ளத்தில் இவ்வினாக்களுக்காம் விடை நன்கு விளங்குகின்றன.

Koviloor Digital Library

அவற்றை நாமும் தெரிந்து கொண்டால்தான், அருள் நன்முயற்சி செய்ய முடியும். நம் பதியும் அவற்றை நன்கருளி இனிது முடித்து வைப்பார். ஆண்டவர் தமது பூரண அருளை வழங்கவே நம்மை ஈண்டு வரவழைத்துள்ளார். ஆதலின், அந்த அருளைப் பெறுவதே நமது இலட்சியமாகக் கொள்ள வேண்டும் நாமும். அதனைப் (அருளைப்) பெறுவது எப்படி என்பதுதான் இந்த ஞானசரியை சத்விசாரத் துதிப்பாடலில் காட்டப்படுகின்றதாம். இதில் இங்கு கண்டு கொள்ளுவோம்.

"இறவாத வரம் பெற்று, அழியாத இன்பமுற்று என்றென்றும் வாழலாம்" என உறுதி கூறப்பட்டுள்ளது இப்பாடலில். அதற்கு நாம் என்ன செய்ய வேண்டும்? என்ன செய்து கொண்டிருக்கின்றோம் (இந்த நொடி வரை) என்பவற்றைப் பார்ப்போம். "நாம், கடவுள் உண்மையைச் சத்விசாரத்தால் அறிந்து, தெரிந்து, தெளிந்து பற்றிக் கொண்டு, அதனோடு கலந்து வாழ வேண்டும்." அப்படியெல்லாம் செய்யாமல் மாறுபாடான காட்சியும் அனுபவமும் கொண்டு உழல்கின்றோம். இதனையே உணர்த்த வந்தன இச்செய்யுளின் முதலீரடிகள் (முதல் இரண்டடிகள்).

"கண்டதெல்லாம் அநித்தியம்" என்பது உண்மை தானே. ஆனால், அநித்தியம் என்று உணர்ந்து கொண்டும், அதில் பற்று வைத்துக் கொண்டு எல்லாத் துன்பங்களையும் வரவழைத்துக் கொள்ளுகின்றோம். இந்த மூடச் செயல் ஒழிய வேண்டும் தானே. இதுபோல், கேட்டவை யாவும் பழுதுபட்டொழிவனவே. இன்சொல்லால் மகிழ்ந்திட்டோம். நல்லுரைகளாலும், உபதேசங்களாலும் எவ்வளவோ தெரிந்து கொண்டோம்; எனினும் அவையொன்றும் நிலையான இன்பவாழ்வில் கூட்டி வைக்கவில்லை நம்மை. அவையெல்லாம் பழுதுபட்டு ஒழிகின்றனவேயாம். அடுத்து, 'கற்றதெல்லாம் பொய்யே' எனப்படுகின்றது. ஆம்,

Koviloor Digital Library

உலகியலில் எத்தனை கலைகளை, மொழிகளை, செயல்களைப் பழக்கவழக்கங்களை, எல்லாம் கற்றுக் கொள்ளுகின்றான். மனிதன், அங்ஙனம் கற்றுத் துறை போகி சிறந்திலங்கிய மனிதன், அவற்றையெல்லாம் விடுத்து விட்டு அகன்று விடுகின்றான். "அவனே போய் விட்டபின், அவனது புகழ் மட்டும் நின்று என்ன பயனோ? அவனுக்கு!" ஆதலின் இதுவரை கற்றதெல்லாம் பொய்த்துப் போகின்றனவேயாம்.

'களித்த தெல்லாம் வீணே', எனப்படுகின்றது. ஐம்புலன் இன்பத்திலும், நால்வகைக் கரணங்களாலும் துய்த்தவை எல்லாம் வீண் எனக் காண்கின்றோம். முடிவில் !

'உண்டதெல்லாம் மலமே' - அறிவு வந்த நாள் முதல் உண்டவையெல்லாம் கணக்குப் பார்த்தால், அந்த அளவைக் காணும்போது வியக்க நேரிடும். "இவ்வளவா உண்டோம்" என்று ஆச்சரியப்பட வேண்டியிருக்கும்! அவ்வளவும் என்னவாச்சு? அநேகமாக எல்லாம் மலமாகப் போனது போக, மல உடம்பு தான் மிஞ்சியுள்ளதாம். இந்த மல உடம்பை சுமக்கத்தானா உண்டு வளர்ந்தோம்? அருளாலே அருளை அடைந்து, சூழுற்ற சுமை உடம்பை, சொல்லரிய 'தயா ஜோதி உடம்பாக மாற்றிக் கொள்ளவன்றோ வந்துள்ளோம்.' ஆதலின், உணவில் விருப்பு, வெறுப்பின்றி, சுத்த சத்துவ ஆகாரத்தை அளவாக ஏற்று, உயிர் விளக்கமும், அருள் அறிவு விளக்கமும் கொண்டு உய்வோமாக.

'உட்கொண்டதெல்லாம் குறையே' ஆம், உட்கொண்ட உண்டியும் எண்ணங்களும், லட்சியங்களும், வாழ்க்கை அனுபவங்களும் குறைவுடையனவேயாம்.

இதுவரையில், உலகியலில் உண்மை அறியாமல்தான் வீண் போகின்றனர் மக்கள். ஏதோ பக்குவ வசத்தால் சிறிது உண்மை அறிந்தும் கூட, பழக்க வசத்தால் பழ (பழைய) வழியிலேயே நழுவிச் சென்று பாழ்படுகின்றார்கள்.

Koviloor Digital Library

இவ்வளவையும் விண்டு வெளிப்படையாக எடுத்துச் சொல்லிவிடுகின்றார் நம் வள்ளல் பெருமான். சொல்லிவிட்டு, உண்மை நெறியாகிய சுத்த சன்மார்க்கத்தை வழங்குகின்றார். இதனைக் கைக்கொண்டு ஒழுகி, மெய்ப்பொருளை அகத்திலே நன்கு உணர்ந்து பதிவு செய்து கொள்ளல் வேண்டும். அப்படி "அகப் பதியிலே பதிவுற்று நிற்றல் சத்விசார இயல்பாகும்." ஆனால், இந்த விசாரத்திலேயே அழுந்திப் போய் விடக்கூடாது. அப்படி அழுந்திப் போனால் உலகவாழ்வு தடைபட்டுப் போகும். அருளாளன் திருவுள்ளமும் அதுவன்று. அங்ஙனம் இருந்து கொண்டுதான் நம் அருட்ஜோதிபதி சூழுலகத்தை எல்லாம் ஆள்கின்றார். அவரைப் போற்றிக் கொண்டு வாழ்த்துகின்ற நாமும் அவர் மயமாகி அருளே உணர்விலும், உயிருடம்பிலும் குணச் செயல்களிலும் வெளிப்பட வாழ வேண்டும். அந்த வாழ்வு தான் சிற்றம்பல வாழ்வாகச் சிறப்பித்துக் கூறப்படும். அந்த சிற்றம்பலம், எண்தகு சிற்றம்பலமாக இயம்பப்படுகின்றது. எண்ணுதற்கு, சிந்தித்து தெளிவுற்றுக் கருத்தில் கொள்ளுவதற்குத் தகுந்தது இந்தச் சிற்றம்பலம் என்பது குறிப்பு. இதிலிருந்து கொண்டு "தயவுமய வாழ்வு நடத்துவதே, எண்டகு சிற்றம்பலத்தே எந்தை அருள் அடைதலாகக்" குறிக்கப்பட்டுள்ளதாகும். மற்றபடி, எல்லோருக்கும் தான் பதித் திருவருள் பொதுவாக ஏகதேசமாக இயற்கையிலே அமைந்துள்ளது. தான தர்ம நற்செயல்களால் ஓரளவு விசேட அருளைப் பெற்று ஓரளவு இன்புற்றும் இருக்கலாம். ஆனால் அவ்வருளின்ப வாழ்வு நிறைவு பெற்றதாய் விளங்கவேண்டுமாயின், சிற்றம்பலத்திலே பொருந்தி இருந்து கொண்டு, அருளே பெருகப் பெருக வாழவேண்டும் என்பது தெளிவாம்.

இப்படி, அம்பல இன்ப வாழ்வு வாழும் போது, அநித்தியமாகக் காண்பவற்றிலும், கேள்விப்படும் பழுதான

Koviloor Digital Library

விடயங்களிலும், கற்கின்ற பொய் நூல்களிலும் கூட மறைந்து கிடக்கும் சிறிதளவு உண்மையைக் கண்டு மற்றவைகளை விலக்கி விடவும் கூடும். ஏதேதோ உண்டு களித்தும், கதைபேசி, உறங்கி விழித்து கழித்ததெல்லாம் கூட திருவருளின் திருவுள்ளப்படியே நடந்திருக்கின்றதாகவும், அவற்றிலிருந்து நிகர இலாபமாக ஓரளவு உண்மை ஞானமும், சுத்த தயவில் பற்றுதலும் உண்டாகி இருப்பதாயும் உணர்ந்து கொள்ளுகின்றோம். அதனால், இப்பொழுது முதல், அருள் அம்பலத்தில் பொருந்தி, அருள்வாழ்வு நடத்துவோம். நடத்தி ஆனந்தத்தில் விளங்குவோமாக.

ஞான சரியை - செய்யுள் : 5

இன்புறலாம் எவ்வுலகும்
ஏத்திடவாழ்ந் திடலாம்
எல்லாம்செய் வல்லசித்தி
இறைமையும்பெற் றிடலாம்

அன்புடையீர் வம்மினிங்கே
சமரசசன் மார்க்கம்
அடைந்திடுமின் அகவடிவிங்
கனகவடி வாகிப்

பொன்புடைநன் கொளிரொளியே
புத்தமுதே ஞான
பூரணமே ஆரணத்தின்
பொருள்முடிமேற் பொருளே

வன்புடையார் பெறற்கரிதாம்
மணியேசிற் சபையின்
மாமருந்தே என்றுரைமின்
தீமையெலாம் தவிர்ந்தே

Koviloor Digital Library

உரை : மனிதனாகப் பிறந்துள்ளவன், மன் (நித்திய, நிலையான) இதன் (இன்பமுடையவன்) ஆக வாழவேண்டும் என்பதே ஆண்டவர் திருவுள்ளமாய் இருக்கின்றது. அப்படி இன்ப நிலையுறுவதால், எவ்வுலகும் புகழ்ந்து கொண்டாடும்படி வாழ்ந்திடலாம் என்கின்றார். அத்தோடு எல்லாஞ் செய்யவல்ல கடவுட் சித்தியும் கைவரப் பெற்றிடலாம் என்றும் குறிக்கப்படுகின்றது. அதற்கு, அவ்வாழ்வு பெற்றுக் கொள்வதற்கு 'அன்பர்களே, இவண் வாருங்கள்' என்கின்றார். எங்கு வரச் சொல்லி அழைக்கின்றார்? என்றால் "நமது அருட்பெருஞ்ஜோதி வளர் சத்திய ஞான சபையாகிய உள்ளக் கோயிலுக்கே" அழைக்கின்றார். இங்குதான் நித்தியமாக இருந்துகொண்டு, வம்மின், வம்மின் என்று அன்போடு அழைத்துக் கொண்டேயிருக்கின்றார். "நாமும் அன்பொழுக்கத்தோடு சத்விசாரம் செய்துதான் அவரையும், அவர் விளங்கும், அருளம்பலத்தையும் கண்டு அடையலாம்." எப்படியோ விசாரவசத்தால், அகப் பெரும்பதியைக் கண்டு கொண்டுவிட்டாலும் போதாது. கண்ட அப்பதியோடு ஒன்றி நின்றுகொண்டு, அந்த அக வடிவமே, அனகவடிவாக நிறைந்து பெருகிக் கொண்டேயிருத்தல் வேண்டும். அதாவது "அகத்திலிருந்து தயா உணர்வையும், தயா ஆர்வத்தோடு கூடிய சிந்தனையையும், சொற்களையும், செய்கைகளையும், உள்ளிருந்தே அத் தயாஜோதி பதியிடத்திருந்தே வெளிப்படுத்திக் கொண்டேயிருத்தல் வேண்டும்" என்பதாம். அப்படிச் செய்து கொண்டிருக்கும் போது, விசாரஞானத்தில் அறியப்படுகின்ற கடவுள் விளக்கத்தைத் துதித்தல் முறையாகும். அத்துதிதான், பின் அரைப் பாவில் காண்கின்றோம்.

"பொன்புடை நன்கு ஒளிர் ஒளியே", எனப்படுகின்றது. கற்பூர ஜோதியில், பொன்னொளி சூழ பெற்றிருக்கக்

Koviloor Digital Library

காண்கின்றோம். நமது தயா ஜோதிப் பதியும், சுத்த தயவு என்னும் பொன்னால் சூழ்ந்திலங்கக் காண்கின்றதாம். முதலில் இக்காட்சியே ஏற்படுவதாம். அடுத்து, அத்தயா ஜோதியே, 'புத்தமுதமாகவும்' உணரப்படுகின்றது. இந்த அமுதம், கண்டபோதே பசி தீர்க்க வல்லதாய் இருக்கின்றதாம். ஆதலின், இதுவும் காட்சி மாத்திரத்தால் உண்டான அனுபவமாகவே கொள்ளலாம். ஏனெனில், "பூரண அனுபவத்தில், அதுவாய் இரண்டற்றிருக்க நேருங்கால், மௌனானந்தமே அமையும்" அப்போது துதித்திடவும், வெளியிடவும் இடமில்லையாகும். ஆனால், இங்கு மேலும் மேலும் துதித்துக் கொண்டே இருக்கின்றோம். ஆதலின் இது, துவைதமாகிய சத்விசார நிலையனுபவமே ஆகத் தெளிந்து கொள்ளல் வேண்டும்.

அடுத்து, "ஞான பூரணமே", எனப்படுகின்றது. 'சர்வஞ்ஞன்' என்பது மறைமொழி. எல்லாம் அறிகின்ற அறிவுமயமான பொருள், நிறையறிவுப் பரம்பொருள் நம்பதி என்பது உணர்த்தப்படுவது.

மேல், "ஆரணத்தின் பொருள் முடி மேற்பொருளே" என ஓதியுள்ளார். ஆரணமாவது வேதம், அதன் பொருள் என்பது ஆகமம். அவ் ஆகமத்திற்கும் மூல காரணமாய் உள்ளதுவே, ஆகமத்தின் மேற்பொருள் அதுதான் நம் தயாபெருஞ்ஜோதி ஆகும்.

வேதம்	**- உபாய ஞானம்**
ஆகமம்	**- உண்மை ஞானம்**
தயாஜோதி அனகவாழ்வே	**- அனுபவ ஞானமாம்**

"வன்புடையார் பெறற்கரிதாம் மணியே" என்றது; அன்புக்கு எதிர்ப்பதமே வன்பு என்னும் கடின சித்த நிலையாகும். அவர்கள் நமது தயாமயமான அன்பொளிக்

Koviloor Digital Library

கடவுளை எங்ஙனம் காணமுடியும்? ஆகவே, அவர்களால் இதனை அறியவும், காணவும், அடையவும் முடியாதென்பது தெளிவாம். ஆகையால், இந்த வன்பு நிறை கண்ணெஞ்சம் (கல்நெஞ்சம்) அன்பினால் கசிந்து உருகவேண்டும். அப்போது தீமையெல்லாம் தவிர்ந்துபோம். அந்த அன்பு நெஞ்சிலே குடிகொண்டு விளங்குவார் நம் தயா நேயர். "அன்பு முந்து சிந்தையே ஆலயங் கொள் தந்தையே" என பிற இடத்தே வாழ்த்துகின்றார் நம் வள்ளலார். "சிற்சபையின் மாமருந்தே என்றுரைமின்" எனக் குறிக்கின்றார் ஈண்டு. இந்தச் சிற்சபா மருந்து எல்லாப் பிணிகளையும் வேரறக்களைந்து என்றென்றும் நோயற்ற வாழ்வில் விளங்கச் செய்வதாம். இனி அடுத்த பாடலைத் தொடருவோம்.

ஞான சரியை - செய்யுள் : 6

தீமையெல்லாம் நன்மையென்றே
திருவுளங்கொண் டருளிச்
சிறியேனுக் கருளமுதத்
தெளிவளித்த திறத்தை

ஆமயந்தீர்த் தியற்கையின்ப
அனுபவமே மயமாய்
அம்பலத்தே விளங்குகின்ற
அருட்பெருஞ்ஜோதியை ஓர்

ஓமயவான் வடிவுடையார்
உள்ளகத்தே நிறைந்த
ஒருபொருளைப் பெருங்கருணை
உடையபெரும் பதியை

நாமருவி இறவாத
நலம்பெறலா முலகீர்

Koviloor Digital Library

நல்லவொரு தருணமிது
வல்லைவம்மின் நீரே.

உரை : **ஆமயம்** - என்றால், ஆன்மாவின் இயற்கைத் தன்மையாம். ஆன்மாவுக்கு இயற்கைத் தன்மை யாதெனில் நித்தியமானது. என்றாலும், ஆணவமல சகிதமாய் இருத்தலின், மேல் மாயா கன்ம மலங்கள் சார்ந்து சார்ந்து, புறத்தே பிறப்பிறப்புகள் ஒன்றன் பின் ஒன்றாய் வந்து கொண்டே இருப்பனவாம். ஆதலின், இந்த ஆன்ம சுபாவத்தை முடிந்த நிலையாகக் கொள்ளற்கில்லையாம். இவ்வியற்கை நிலையைத் தீர்த்து இயற்கை இன்பானுபவமே, அதற்கு உரிய கடவுட் சுபாவமாய்ப் பெற்று நிலவ வேண்டி உள்ளதாம். இச்சுத்தநிலை வழங்கி, ஆன்மாவைத் தன்னுடன் கொண்டு, அம்பலத்தே ஆடுகின்றார் நம் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர். இந்த உண்மை ஆண்டவரை, ஓமயவான் வடிவுடையார், உள் அகத்தே நிறைந்திலங்கக் காண்கின்றார்கள். அம், மா கருணை வள்ளற் ஜோதியை, நாமும் கலந்து கொண்டு நலம் எல்லாம் பெறலாம். "இச்சமயம் மிகப் பொருத்தமானதாக அமைந்துள்ளது. ஆதலின், வாருங்கள் நீவிரெல்லாம்" என அழைப்பு விடுக்கின்றார் நம் திருவருட்பிரகாசர்.

அவர் எவ்வளவு பெரிய அனுபவ நிலையைப் பெற்று விளங்குகின்றார். இருந்தும், தன் தற்போதத்தைச் சிறிதும் காட்டிக் கொள்ளாது, தனக்கு, அவ்வருட்பெரும் பதி, தீமையெல்லாம் நன்மை என்றே திருவுளங் கொண்டருளி, அருள் அமுதத் தெளிவளித்தார் என்று தெரிவிக்கின்றார். ஆகையால், எவ்வளவோ கீழ்க் கடையான நிலையில் உழன்று கொண்டிருக்கின்ற நாம், எப்படியெல்லாம் வருந்தி, உளமுருகி, அப்பதியை வேண்டிக்கொள்ள வேண்டும். அப்படி வேண்டிக் கொண்டால், அவசியம் கருணை

Koviloor Digital Library

பாலிப்பார். அவர் தனிப்பெருங்கருணை வள்ளலன்றோ !

ஓமயவான் வடிவு என்றது, "அருள் ஆகாச வண்ணமாகிய பிரணவ உண்மை ஒளி வடிவமாம்". "அருட்பக்குவிகளின் உள்ளம், இவ்வொளி வண்ணமாய்த் திகழ்வதாம். உள்ளத்தில் அது இருக்கின்றதா அல்லது உள்ளமே அதுவாகிவிட்டதா எனப் பிரித்தறியக் கூடா வண்ணம் விளங்குவதாம்."

"உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற விமல" என ஓதுகின்றார்கள் ஆன்றோர்கள். சமய சன்மார்க்கியின் உள்ளத்தில் அவ் ஓம், ஒளியாயிருந்தது, அம்மார்க்கிக்குத் தேகம் இருக்கும் வரை விளங்கிக் கொண்டிருந்தது. அவனையே தன்னில் கிரகித்துக் கொண்டு மறைந்ததாம். ஆனால், இப்பொழுது, அது ஓங்காரத்து உட்பொருளாகிய பேரருள் வண்ணமாய் விளங்கி நின்று, அனக நிறைவால், அவனது உடலைச் சுத்த சன்மார்க்கச் சுக உருவாய் ஆக்கி, நிலைபெறச் செய்து விடுகின்றதாம். இதில் அவன், பதியோடு இருந்து கொண்டு, அனக வாழ்வே நடத்துகின்றான்.

உண்மையில் இருக்கின்றது அந்த அருட் பெருஞ்ஜோதிபதி ஒருவரே. அவரே நமது சிற்றம்பலத்தின் கண் எழுந்தருளி இருக்கின்றார். இருந்து ஐந்தொழில் ஆட்டம் ஆடுகின்றார். அவ் ஆட்டத்தின் விளைவே அவரைச் சுற்றி உயிருடம்புகள் தோற்றி மறையும் செயலாகும். இதில், அவரும் அவரது அருள் நடனமுமே அல்லாது பிறிதொன்றில்லையாம். அப்படியாயின் "நாம்", "நாம்" என்று சொல்லிக் கொள்ளுகின்றோமே, இது என்ன? அல்லது யார்? எங்கே உள்ளது? "அது தேகப்பற்று காரணமாக எழுந்த உணர்வின் ரூபமே- நாமாக உள்ளதாம்." உண்மையில் அத்தேகமும், உணர்வும் ஆண்டவர் அருளின் கூறேயாம். இது, இவ்வுடற் பற்று

Koviloor Digital Library

நீங்கிய விடத்து உள்ளிருந்து விளங்குவதாகும். அங்கு, அருட்ஜோதி பதியே நமது உள்ளமாய், நாமாய் இருக்கக் காண்கின்றோம். "தேகப் பற்றற்ற விடத்து, அவ்வொளி யுருவை மருவி அதுவாகி விளங்க உள்ளதாம்." இங்ஙனம், அருள்மயமாகி வாழவே நம் அருட்ஜோதியார் அழைத்துக் கொண்டுள்ளார். அருட்பெருஞ்ஜோதி பதியே, அருட்பிரகாச வள்ளல் உருவாயது. அதுவும், அவரும் ஒன்றாகி, இப்பொழுது நாமாகவும் ஒன்றியுள்ளார் என்பது உண்மை. சுத்த சன்மார்க்கத்தினால் யாவரும் பெற்றுக்கொள்ள உள்ளது இந்த அருட்ஜோதி இன்ப வடிவமேயாம்.

ஞான சரியை - செய்யுள் : 7

நீர்பிறரோ யானுமக்கு
நேயவுற வலனோ
நெடுமொழியே யுரைப்பனன்றிக்
கொடுமொழிசொல் வேனோ

சார்புறவே அருளமுதம்
தந்தெனைமே லேற்றித்
தனித்தபெருஞ் சுகமளித்த
தனித்தபெரும் பதிதான்

சீர்பெறவே திருப்பொதுவில்
திருமேனி தரித்துச்
சித்தாடல் புரிகின்ற
திருநாள்கள் அடுத்த

ஓர்புறவே இதுநல்ல
தருணமிங்கே வம்மின்
உலகியலீர் உன்னியவா
றுற்றிடுவீர் விரைந்தே.

Koviloor Digital Library

உரை : நான் என்றும், நீர் என்றும், பிறர் என்றும் தோன்றுகின்றன வெல்லாம் என்ன என ஆராய்ந்து நோக்கும் போது, "ஒன்றான, அந்த அருட்பெருஞ்ஜோதிக் கடவுளே, ஒவ்வொருவருடைய ஆன்ம அணுவாய் இருந்து கொண்டு, ஒவ்வொரு சூழுருவம் ஏற்று விளங்குவதாக அறிகின்றோம்." ஆதலின், "யாவரும் ஒரு தன்மையான ஆன்மாக்களே" யாவோம். அந்த ஒரு தன்மை என்பது தான், அருட்பெருஞ்ஜோதி மயமாம். "இந்த அருள் ஞானத்தினால் தான், நாம் யாவரும் ஆன்ம நேய ஒருமைப் பாட்டுரிமைச் சகோதரர்கள் எனத் தெளிந்து கொள்ளுகின்றோம்". இந்த ஆன்மநேய உறவு முறையைத் தான், இப்பாவின் முதலடியில் குறிப்பிடுகின்றார். இவ்வுறவுக் காரணமாகவே, பலப்பலவாக எடுத்துக் கூறி அழைத்துக் கொண்டிருக்கின்றார். ஆகையால், அம்மொழிகள், கொடுமொழியும் அன்று, கெடுமொழியும் அன்று, எல்லோருக்கும் நலஞ்செய்யும் நடுமொழியேயாகும்.

"சார்புறவே" நீவீரெல்லாம், என்னைச் சார்ந்து கொண்டு, மேனிலை பெறவே, என் பதி எனக்கு அருள் அமுதம் தந்துள்ளான். ஏறாத நிலைமேலேற்றி பெருஞ்சுகப் பேற்றை அருளியுள்ளான். அவன், எனது சத்திய ஞானப் பொதுவின் கண்ணே, அருட்ஜோதி உருக்கொண்டு எழுந்தருளி, அருள் அற்புதச் சித்திகள் பல புரியப் போகின்றான். அது எப்பொழுதோ எனத் தாமதித்திருத்தல் வேண்டாம். அது மிக அடுத்த சந்தர்ப்பமாக இருக்கின்றதால், நீங்கள், இவண் வந்து பாருங்கள். வந்து சாருங்கள் உலகீரே. நீங்கள் பெற வேண்டியதைப் பெற்றுக் கொள்வீர்கள். விரைந்து வந்து சேருங்கள்.

"திருப்பொது" - என்பது யாதெனில், நம் ஆன்மாலயமே. இது கடவுளுக்கு உண்மைக் கோயிலாம். ஆன்மாக்கள் எல்லாம் ஒரு தன்மையானவைகளே என

Koviloor Digital Library

மேலே கூறப்பட்டது. அவற்றிலெல்லாம் உறைகின்ற பதி ஒருவரே என்பதும் அறிவோம். ஆகையால், கடவுளே எல்லோருக்கும் பொதுவானவர். அந்தப் பொதுவில் வளர் ஆன்மாலயமும் பொதுவாகவே விளம்புதல் பொருந்தும். "எல்லார்க்கும் பொதுவில் நடமிடுகின்ற சிவமே" என ஓதப்படுகின்றதும் காண்க. கடவுளுக்கும் நமக்கும் பொது உறையுளாயிருக்கின்றது இந்த அருட்ஜோதி ஆன்மாலயமே.

"இதுவென்ற தெல்லாம்பொய் என்றான் எனக்கே
பொதுவின்றித் தங்குமிடம் போச்சு - அது நான்காண்
என்றான் அதன்பேர் இரவைப் பகலாக்கும்
ஒன்றோ பரமசுக மோ" (வள்ளலார் சாத்திரம்)

"உலகில் எந்த ஒரு இடமும், ஆன்மா தங்கி ஒளிர்வதற்கு இல்லையாம். அதற்குக் கடவுளாகிய பொது ஒன்றே அமைந்துள்ளது." 'நான்' என்றதற்குப் பொருளாயிருக்கும் அவ்வான்மாவே கடவுட் பொதுவாய் எனக்குள்ளதாகும். ஆதலின், எனக்கு அப்பொதுவே, எக்காலத்தும் உறைவிடமாயிருக்கின்றது. இவ்வளவு காலம், இந்த உண்மையை அறியாதிருந்தேன். எனினும், அந்தப் பொதுவில் தான் இருந்தேன், இருக்கின்றேன், இனியும் இருப்பேன் என்பதைத் திருவருளால் கண்டு கொண்டுள்ளேன், இச்சமயம். "இது முதலாக இங்கிருந்து நீங்காமல் இருந்து கொண்டு, சூழுடம்பையும் சுகமேனியாகக் கொண்டு சித்தாடல் புரிவேன். நீங்களும் வந்து கலந்து கொள்வீர்களானால் பேரின்ப சித்திப் பெருவாழ்வில் திகழலாம்" என்று இதில் குறிக்கப்படுகின்றதாம்.

"உன்னியவாறு உற்றிடுவீர்" - கருதிய வண்ணம் அடைந்திடுவீர்கள் என்கின்றார். 'நாம்' என்ற ஆன்ம போதம் போயவிடத்து, நாம் என்ன கருதவிருக்கின்றது. ஆண்டவர் கருத்து எதுவோ, அதுவே நம் கருத்துமாம். அதுதான்,

Koviloor Digital Library

அருட்பெருஞ்ஜோதி உருவொடு தனிப்பெருங்கருணை வாழ்வு வாழ வேண்டும் என்பதுவே, நம் பதி ஆணையாக உள்ளது.

சித்தாடல் புரிகின்ற தருணம் இது என ஓதப்படுகின்றது. யாதெனில் நமது எல்லாம் வல்ல பேரருட் பெரும்பதி இந்த மகா பிரபஞ்சத்தை அனந்தங்கோடி காலமாக, அனந்த வண்ண பேதத்தோடு ஆக்கிக் காத்து மறைத்து வருகின்றார். ஈதெல்லாம் அவர் தம் அருட்பெரும் அற்புதச் சித்தேயாகும். அவர் தம் தொடர்பு கொள்ளும் நம்மிடத்து ஒரு சில அற்புத சித்திகள் நிகழுதல் வியப்பன்றே! அது அவருடைய திருவுள்ளம்; வெளிப்படுத்திக் கொள்ளுவார். அவ்வற்புதச் செயல்கள், அவர்தம் அருட்செயலாகக் கொள்ள வேண்டுமேயன்றி, நம்மதென அகங்கரித்தல் கூடாது. அப்படி செய்தால், தீமையும் துன்பமுமே முடிவில் உண்டாகும். ஆகவே, ஆண்டவர் அருட்செயல் வெளிப்பட, நாம் அவருடன் கலந்திருந்து தயானந்தத்தோடு விளங்குவதற்கு இது நல்ல தருணமாம்.

ஞான சரியை - செய்யுள் : 8

விரைந்துவிரைந் தடைந்திடுமின்
மேதினியீர் இங்கே
மெய்ம்மையுரைக் கின்றேன்நீர்
வேறுநினை யாதீர்

திரைந்துதிரைந் துளுத்தவரும்
இளமையடைந் திடவும்
செத்தவர்கள் எழுந்திடவும்
சித்தாடல் புரிய

Koviloor Digital Library

வரைந்துவரைந் தெல்லாஞ்செய்
வல்லசித்தன் தானே
வருகின்ற தருணமிது
வரம்பெறலாம் நீவிர்

கரைந்துகரைந் துளமுருகிக்
கண்களினீர் பெருகிக்
கருணைநடக் கடவுளைஉட்
கருதுமினோ களித்தே.

உரை : அக அம்பலத்தில் இருந்து கொண்டு இவ்வுலகிலுள்ள எல்லோரையும் அழைக்கின்றார், நம் அருட்பிரகாச வள்ளற் பெருமான். வீண் பொழுது போக்காமல், காலதாமதம் செய்யாமல், விரைவில் வந்து சேரும்படியாக உள்ளம் நிறை அன்போடு வரவேற்கின்றார். மெய் என்பது சத்தாக உள்ளது. ஆதலின் மெய்மை என்னும் போது, அந்தச் சத்தாக உள்ளதின் தன்மையாகிய சத்தியத்தைக் குறிக்கின்றதாம். "சத்தான பரம் பொருளின் நித்தியத் தன்மையை சத்தியம் என்றும், அதுவே நமது உள்(ளத்தின்) தன்மையாக விளங்கும் போது, உண்மையென்றும், அதுவே சொல்லுருவாகி வெளிப்படுகின்றபோது வாய்மை யென்றும் மொழியப் படுகின்றதாம்." இங்கு, நம் வள்ளலார், மெய்மையை, உண்மையிற் கண்டு, வாய்மையாய் விண்டுள்ளார். கடவுளைச் செய்யுள் வடிவில் செய்து காட்டுதல் போல, உரைத்தற்கரிய மெய்மையை இந்தப்பா வடிவில் உரைத்தருளியுள்ளார். இதனை அறிந்து கொள்ளாமல் வேறு விதமாக நினைத்துவிடாதீர்கள் என்றும் கேட்டுக்கொள்ளுகின்றார்.

தயவாகிய நீர் பெருகிப் பொழிந்திட, கல் நெஞ்சமாகிய வன்மனம் நனைகின்றது, நெகிழ்கின்றது, கரைகின்றது. தயாவுணர்ச்சி மிகுதியால் கண்ணீர்

Koviloor Digital Library

பெருகுகின்றது. அப்பொழுது அந்த உணர்வோடு, திருக்கருணைப் பெருநடனம் புரிகின்ற கடவுளை நினைந்து நினைந்து, வியப்பரும் ஆனந்தத்தில் நிலவுவோம். அப்படி நிலவிடும் போது, நம் பதி அவ்வெல்லையில் தவறாது எழுந்தருளி, நித்திய தேக வாழ்வு பெற்று இலங்கும் வரம் தருகின்றார் என ஓதப்படுகின்றது. அவ்வரத்தால் பெறவுள்ளது, "சுத்த சுகானந்தப் பிறவா இறவாத் திருவடிவமாகும்". அதுதான், திரைந்து, திரைந்து உளுத்தவரும் இளமை அடைந்திட வரம் தருகின்றார். செத்தவர்கள் எழுந்திட, எழுந்து என்றென்றும் விளங்கிட வரம் தருகின்றார் என்று குறிக்கப்பட்டுள்ளன. இவற்றிலிருந்து கண்டுகொள்ளப்படும் திருவருளின் பேராற்றல் என்னென்ன செய்யவல்லது என்று நன்று தெரிந்து கொள்ளுகின்றோம். இதுவரை நாம், நமது உடம்பை அறியாமையாலும், அலட்சியத்தாலும், விதிமுறையாலும், அசுத்த நிலையில் பெருக்கிக் கொண்டு பிழைத்து வருகின்றோம். நரையும், திரையும், பிணியும், மூப்பும் வளரவிட்டு நலிந்து கொண்டுள்ளோம். இப்படியெல்லாம், ஆகிவிட்டதே இனி என்ன ஆகுமோ? என அச்சமும் ஐயமும் கொண்டு, கவலையில் ஆழ்ந்திட வேண்டியதில்லை என்பதுவே இங்கு உணர்த்தப் படுகின்றதாம். உளமுருகி, கண்ணீர் கசிந்து மல்கி, கருணை வள்ளலை, அருள் அம்பலத்திலே கண்டு அடைந்து, வரம்பெற்று, வாழற்கான சந்தர்ப்பம் நமக்கு ஏற்பட்டுள்ளதாம். இத்தருணத்தில், அப்படி அம்பல வாழ்வு வரும்போது, திரைந்து சுருங்கிய தோலுடம்பு, சுத்த தயா பொன் வடிவாக மாறிடும். நித்திய இளமை வந்திடும் என உறுதி கூறப்படுகின்றது.

இனி, செத்தவர்கள் எழும் வல்லபமும் கூறப்படுகின்றது. நித்தியமாயிருந்தும் கரந்து உரைகின்ற ஆன்மா, தனது உயிர்ச் சக்தியைக் காரியப்படுத்திக் கொண்டு, ஓர் உடம்பில்

Koviloor Digital Library

விளங்கும் காலம், பிறந்து வாழ்கின்றதாகவும், அவ்வுயிரைத் தன்னில் சுருட்டிக் கொண்டு, உடலினின்று பிரிகின்ற காலம் இறப்பு அல்லது மரணம் உண்டாகின்றது என்றும் உலகில் வழங்கப்படுகின்றன. ஆன்மானுபவம் கைவந்த மகான்கள், தமது ஆன்ம சக்தியை ஓரளவு பிரயோகித்து, மற்றொரு ஆன்மாவின் சுருண்ட உயிர்ச்சக்தியை விரித்து விளங்கச் செய்ய முடிகின்றதால், இறந்தவர் எழுகின்ற அற்புதம் நிகழ்கின்றதாம். ஆனால் இது பெரிதல்ல ! அப்படி மாண்டவர் மீண்டும், மீண்டும் இறந்தே போவர் சிறிது காலத்திற்குப் பின்னர்.

அருட்பூரணத்தில் விளங்குவது, நித்திய ஆன்ம நிலை. அது இயற்கையில், மறைந்து புதைந்து கிடக்கின்றதே, அதற்கு இறப்பு நிலையாக, அல்லது இன்னும் பிறந்து வெளிப்படாத கருநிலையாகவே கொள்ளப்படும். இந்த நிலையினின்று, அருட்பெருஞ்சக்தியோடு, அக அனுபவத்தில் வெளிப்பட்டு, அனகவாழ்வில் விளங்குவதே உண்மையான "இறந்தார் எழும் நிலை"யாம். "இதுவே உண்மையான பிறப்புமாகும்." இப்படி எழுகின்றவர்கள், பிறக்கின்றவர்கள் மறுபடியும் ஒருக்காலும் இறவார்கள். இந்த உண்மையைத்தான் நம் வள்ளலார், ஒரு வெண்பாவில் குறித்துள்ளார். அது இதுவாம்,

"என்னே யுலகில் இறந்தார் எழுதல் மிக
அன்னே அதிசயமென் றாடுகின்றார் - இன்னே
திருஅம்பலவன் திருநோக்கம் பெற்றார்க்கு
உருஅம் பலத்தேயென் றுன்"

என்பதில், உயிர்பெற்று எழுகின்றவர் தம் உருவம், திருவம்பலத்திலே இருக்கின்றதாக அறிய வேண்டும், என்கின்றார். அருள் அம்பலத்தில் வாழ்கின்றவர்களே இறவாத, உயிர்பெற்று எழுந்த உண்மை அம்பலவாணர்களாவார்கள்.

Koviloor Digital Library

ஞான சரியை - செய்யுள் : 9

களித்துலகில் அளவிகந்த
காலமுல கெல்லாம்
களிப்படைய அருட்ஜோதிக்
கடவுள்வரு தருணம்

தெளிந்திடுமெத் தருணமதோ
வென்னாதீர் இதுவே
செத்தாரை யெழுப்புகின்ற
திகழ்தருணம் உலகீர்

ஒளித்துரைக்கின்றேன் அலன்நான்
வாய்ப்பறையார்க் கின்றேன்
ஒருசிறிதும் அச்சமுறேன்
உள்ளபடி உணர்ந்தேன்

அளித்திடுசிற் றம்பலத்தென்
அப்பனருள் பெறவே
ஆசையுண்டேல் வம்மினிங்கே
நேசமுடை யீரே.

உரை : உள்ளதை உள்ளபடி உணர்ந்து கொண்டதால், ஐயமில்லை, அச்சமில்லை எனத் தெளிவோடு நின்று, வெளிப்படையாக உறுதியாக வம்மின் என்று அழைக்கின்றார், நமது வள்ளலார், அவர் கண்டு கொண்ட உண்மைதான் யாதோ எனின் "நமது அருட்பெருஞ்ஜோதி பதி, உலகெல்லாம் பேரானந்தம் எய்துதற்காக, இவண் எழுந்தருளி, அற்புதத் திருநடனம் அளவு கடந்த நெடுங்காலம் வரையும், புரிந்து கொண்டேயிருக்க திருவுளங் கொண்டுள்ளார்", என்பதாம். மேலும், இதுவே இறந்தவர்கள் எழுந்து வருகின்ற, உற்ற தருணமாகவும் இருக்கின்றதாம்.

Koviloor Digital Library

ஆகையால், அவருடைய திருவருளைப் பூரணமாகப் பெற்று, நிறைவாழ்வு மேற்கொள்ள, உங்களுக்கெல்லாம் விருப்பம் இருக்குமாயின், இப்பொழுதே வந்து சேருங்கள் என்று அழைக்கின்றார்.

முன்னோர், நமது ஆண்டவர் வருகை குறித்து, எதிர்பார்த்து இருந்த தருணம், இதுவாகயிருப்பதால், சந்தேகம் சிறிதுமில்லாமல் திட நம்பிக்கையோடு இங்கு வாருங்கள். வந்து திருவருளைப் பெற்றுக் கொள்ளுங்கள் உய்யலாம், உய்யலாம் இப்பொழுதே, என்பது உறுதி மொழியாகும்.

"ஒளித்துரைக்கின்றேனல்ல நான் வாய்ப்பறை யார்க்கின்றேன்"

என்று குறிக்கப்பட்டிருக்கின்றது இச் செய்யுளில். இந்த ஞானசரியையின் உள்ள நிலை இதுவாகக் கொள்ளவேண்டும். வாய்ப்பறையார்த்தல் என்ற தலைப்புக்கு ஒரு விளக்க நிலையாக இப்பாமொழி அமைந்திலங்குகின்றதாம். "கற்பனை இல்லை, கட்டுரை இல்லை, இரகசியமோ, தடுமாற்ற நிலையோ, திரிபோ ஒன்றுமில்லை, வெளிப்படையாகவே சொல்லுகின்றேன். இதுவே வாய்ப்பான ஒரு நல்ல சமயம் என்று தெரிந்து கொள்ளுங்கள்" என்கின்றார்.

இப்படியெல்லாம் சொன்ன அவ் வள்ளலாரும், அவர் குறிப்பிட்ட அந்த அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரும் எங்கே? உறுதி வாசகத்தின் வண்ணம் எழுந்து வந்து அம்பலத்தில் இருந்து கொண்டு அருள் பாலிக்கின்றார்களா? என்றால்; "**ஆமாம், என்றே மறுமொழி கொடுக்க முடிகின்றது**". எங்ஙனம் எனில், இந்த வாசகம் எந்த க்ஷணத்தில் வாய்ப்பறையாக வெளிப்பட்டதோ, அந்த க்ஷணமுதலே அருட்பெருஞ்ஜோதியே அருட் பிரகாசமாகவும் ஆன்மச்சபை தொறும் எழுந்தருளி விளங்குகின்றார். செயலற (இறந்து) கிடந்த ஆன்மாக்கள்

Koviloor Digital Library

எழுப்பப்படுகின்றார்கள். எந்த ஒரு ஆன்மா அருள் உணர்வொடு, உள் விழித்துக் கொள்ளுகின்றதோ, அந்த ஆன்மா, அந்த க்ஷணத்திலே உயிர்த்தெழுகின்றதாகும். அப்படி, அருள்நிலை பெறாதவரை இறந்த நிலையில்தான் கிடக்கின்றதாம். இறந்தாரை எழுப்புகின்ற நல்தருணம் 'இது' என்றதின் உண்மை யாதெனில் "சுத்த நிலையில், இராப் பகலற்ற இடத்தில் நம் பதி நித்தியமாக உள்ளார். அவ்விடம் நித்த நிகழ்வாய் (Ever Present) இறந்த காலம், எதிர்காலம் என்பதொன்றும் இல்லாததாய் இருக்கின்றதாகும்." அந்நிலையுற்ற ஆன்மாதான், இந்த வாய்ப்பறை ஆர்ப்பைக் கேட்கின்றது, இதுவே தருணம் என்பதையும் காண்கின்றது, திருவருளையும் பெறுகின்றது. அவ்வருள் அடைவால், பேருறக்கத்திலிருந்து, அக மரண நிலையினின்று, எழுந்து விடுகின்றதாம். எழுந்து பதியோடு ஒன்றாக விளங்கிக் கொண்டு, அருட்பெருஞ்சித்தெலாம் புரிய உள்ளதாம்.

ஆன்மநேய ஒருரிமை காரணமாக எல்லோரும் இருக்கின்றதால், இந்த வாய்ப்பறை மொழியைக் கேட்பது உண்மையாகும். கேட்டு, அவ்வருட் பெருநிலையைப் பெற வேண்டுமென்று, குற்றமற்ற ஆசைப்படுவதும் யாவருக்கும் பொருந்துவதேயாம். ஆகையால், அந்த, நல்ல ஆசை உண்டாகி இருக்கின்றது ஒவ்வொருவர் உள்ளத்திலும். அபக்குவ வசத்தால், அது மனோ நிலைக்கு இறங்காததால், அவ்விருப்பம் ஏற்படாது இருக்கலாம். எனின், பக்குவம் உண்டாகும்போது அது விளங்கும். அந்த ஆசை, கடவுள் ஆணை என்றே அறிந்து கொள்ள வேண்டும். கொண்டால்தான் அருட்பெரு நிலையுற்று ஆனந்திக்கலாம்.

Koviloor Digital Library

ஞான சரியை - செய்யுள் : 10

ஆசையுண்டேல் வம்மினிங்கே
அருட்ஜோதிப் பெருமான்
அம்மையுமா யப்பனுமாய்
அருளும்அரு ளாளன்

ஏசறநீத் தெனையாட்கொண்
டெண்ணியவா றளித்தான்
எல்லாஞ்செய் வல்லசித்தன்
என்னுயிரிற் கலந்தான்

தேசுடைய பொதுவிலருட்
டிருநடனம் புரியத்
திருவுளங்கொண் டெழுந்தருளும்
திருநாளிங் கிதுவே

மோசவுரை எனநினைத்து
மயங்காதீர் உலகீர்
முக்காலத்தினு மழியா
மூர்த்தமடைந் திடவே.

உரை : அவரது ஆணையும், நமது ஆசையும் பேரின்ப சித்திப் பெருவாழ்வு எய்த வேண்டும் என்பதே ஆகும். ஆகையால், இவ்விடம் வந்து பாருங்கள். நமது அருட்பெரும்ஜோதிப் பெருமான், அம்மை அப்பனாகி விளங்குகின்றார். எனது சோர்வையெலாம் போக்கி, ஆட்கொண்டு திண்ணியன் ஆக்கி, எண்ணியதை எண்ணியாங்கு அளிக்கின்றார். எல்லாம் வல்ல சித்தன் என்னுயிரில் கலந்து பொது நடம் புரிகின்றார். இத் தேசுடைய பொது நடனம் அதாவது, அருளறிவில் விளங்கும் செயலொடு கூடிய காட்சி, திருவருளால் என்றும் விளங்கிக்

Koviloor Digital Library

கொண்டுதான் இருக்கின்றது. எனினும், இது சாதாரண மனிதர்களின் புலனுக்குத் தெரிகின்றதில்லை.· இப்படி "உண்மை விளங்காத காரணத்தால், அது உண்மையல்ல, பொய், ஏமாற்றுச் சொல் என்றெல்லாம் கருதிவிடக்கூடாது" என்று எச்சரிக்கின்றார். மேலும் மேலும் அறியாமையால், உண்மையைப் பொய்யென்றும், பொய்யை மெய் என்றும் நினைந்து மோசம் போக நேரும். ஆகையால், நல்லொழுக்க சத்விசாரத்தில் இருந்து கொண்டிருந்தால், இது உண்மை, அது பொய் என்று உள்ளவாறு அறிந்து கொள்ள முடியும். மயக்கம் ஒன்றுமில்லாது, தெளிவோடு இருந்து, உண்மை நெறியில் நடக்கக்கூடும். இச்சுத்த சன்மார்க்கத்தில் நடந்து சென்றால் முடிந்த குறிக்கோளை அடையலாம். அந்தக் குறிக்கோள் தான் யாதோ? எனில் முக்காலத்திலும் அழியா மூர்த்தம் அடைதலாம். அதாவது, அகமிருக்கும் கடவுள் வடிவத்தை உள்ளத்துணர்வில் கண்டு, அடைந்து, அனகமாக (உலகில்) நிலைத்து வாழற்கான முறை அதுவாகும். அந்தக் கடவுள் வடிவம் எக்காலத்தும் இருக்கின்ற ஒன்றாகும். அப்படி இருக்கின்ற அக்கடவுளை, இப்பொழுதே உண்மையாகக் காண்கின்றோம். "கண்டு அதுவாக நிலைக்கும் அனுபவம் உண்டாகின்ற போது, நாமே, அந்த எக்காலத்தும் இருக்கின்ற பரம்பொருளோடு, எக்காலத்திலும் பிரிவற இருக்கின்றதாகவே, உள்ளபடி அறிகின்றோம்." இந்நிலை நின்று நோக்கும் போதுதான், நாம் இப்பொழுது இருக்கின்றோம், இதுவரையும் தெரிந்து கொள்ளாத போதும் இருந்து கொண்டுதான் இருந்தோம், இனியும் இருந்து கொண்டே இருப்போம் என்பது உறுதியாம். ஆகவே, முக்காலத்தினும் அழியாத் திருவுருவம் அடைய இதுவே சமயம் என்று திண்ணமாய் அறிந்து கொள்ளுவோமாக.

"நமது அருட்ஜோதிபதியே, நமக்கு அம்மையுமாய்

Koviloor Digital Library

அப்பனுமாய் அருள்கின்றார்" என்பதின் விளக்கம் ஈண்டு காண்போம். மனிதப்பிறவி கொண்டு விளங்குகின்ற நமக்கு இத்தேகம் எப்படி கிடைக்கப் பெற்றுள்ளது என்றால், கடவுள்நியதி ஆகிய விதிப்படி சூழப் பெற்றுள்ளதாம். அந்த அருள் நியதியால், ஓர் ஆணின் சுக்கிலத் துளியில் ஒரு குறிப்பிட்ட காலம் தங்கியிருந்தோம். பின்னர் ஒரு பெண்ணின் சுரோணிதத்தோடு கலந்து, கருப்பிண்ட வடிவம் சூழ, வளர்ந்து வந்தோம். அக்கரு உயிர்த்த காலத்தே இவ்வுலகில் வெளிப்பட்டு இது காலம்வரை வளர்ந்து கொண்டுள்ளோம். ஆகவே, அகவடிவில், அருட்பதியோடு கூடி இருக்கின்ற நாம், என்றும் இருக்கின்றோம். அந்தப் பதி அருளே முதலில் ஒரு தந்தை என்பானது சுக்கிலத் துளியில் இருத்தியதாயும், ஒரு தாயின் வண்ணமாக வந்து கூடி கரு வடிவேற்றதாயும் அறிகின்றோம். ஆகவே, நம் பதியே, திருவருட் சக்தியால் ஒரு தந்தை வடிவம் கொண்டு சூழ்ந்ததும், பின்னர் ஒரு தாய் வடிவம் கொண்டு கூடினதும் உண்மையாகவே உணர்கின்றோம். இதனால்தான், **அம்மையுமாய், அப்பனுமாய் அருளும் அருளாளன்** நமது ஆண்டவர் ஒருவரே என்பது தெளிவாம்.

"எல்லாஞ்செய் வல்ல சித்தன் என்னுயிரிற் கலந்தான்" என்பதன் உண்மையையும் சற்று உற்று நோக்குவோம். உயிர் என்பது, உயிர்ப்புக் காற்று வடிவாகிய ஜீவன் என்பது இந்நாள் வழக்கு. உண்மையில் உயிர், "உயிர்க் காற்றுக்கு ஆதாரமாகிய ஆன்மாவையே கொண்டிருத்தலால், **உயிர் என்றால் ஆன்மாவேயாம்.**" இந்த ஆன்மா கடவுட் கலப்புடையது தானே ! ஆகையால் தான், அந்தக் கடவுளாகிய எல்லாம் வல்ல சித்தன் என்னுயிரில் கலந்தான் என்ற உண்மை இப்போது கண்டுகொள்ளப்படுகின்றதாம். **"அனாதியே உயிரிற் கலந்திருக்கும் அவன், மெய்யருள் அனுபவம் உண்டாகின்ற போது, ஜீவதேகத்திலும் நிறைந்து**

Koviloor Digital Library

கொள்ளுகின்ற அனுபவமும் ஏற்படுவதாம்."

ஞான சரியை - செய்யுள் : 11

அடைந்திடுமின் உலகீரிங்
கிதுதருணங் கண்டீர்
அருட்ஜோதிப் பெரும்பதியென்
அப்பன்வரு தருணம்

கடைந்ததனித் திருவமுதம்
களித்தருத்தி எனக்கே
காணாத காட்சியெலாங்
காட்டுகின்ற தருணம்

இடைந்தொருசா ரலையாதீர்
சுகமெனைப்போல் பெறுவீர்
யான்வேறு நீர்வேறென்
றெண்ணுகிலே னுரைத்தேன்

உடைந்தசம யக்குழிநின்
றெழுந்துணர்மி னழியா
ஒருநெறியாம் சன்மார்க்கத்
திருநெறிபெற் றுவந்தே.

உரை : "அருட்ஜோதிப் பெரும்பதி என் அப்பன் வருகின்ற தருணம் இதுவே" என நன்கு அறிந்து கொள்ளுங்கள். அறிந்து உடன் வந்து சேருங்கள் இங்கு, என அழைக்கின்றார் நம் வள்ளல். அந்த அருளப்பன் இச்சமயம் இங்கு எழுந்தருளி திருவருள் பாலிப்பது உண்மையாகும்.

அருட்ஜோதி ஆகிய பால், பிரையிடப்பட்டுள்ளது நமது அகத்தே. "தயா விசாரத்தால் கடைதல் செய்து, கருணை அமுதம் பெறற்கு உதவுகின்றார் சுத்த தயவை".

Koviloor Digital Library

அவ்வமுதத்தை உவந்து அளித்து உண்பிக்கின்றார். அவ்வுணவால் காணாத காட்சியெல்லாம் காண்கின்றேன். ஆம், சுத்த சத்துவ உணவினால், நல்ல காட்சியும் அனுபவமும் உண்டாகும். அசுத்த ஆகாரத்தால் கொடிய காட்சிச் சூழலும் நோயும் துன்பமுமே உண்டாகும். **"காணற்கரிய கடவுட் காட்சியைக் காணவேண்டின், கருணை அமுதமே உண்டு களித்திருத்தல் வேண்டும்."** உண்மையில், நானே நீங்கள் யாவருமாயிருக்கின்றதால், என்போன்றே இன்பநிலையை, நீங்களும் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும் என்று அவாவுகின்றேன். நீங்கள் உங்களையே அறியாமல் இவ்வுலகிடை சார்ந்து உழன்று கொண்டிருக்கின்றீர்கள். நீங்கள் பலப்பலவாகிய சமயங்களைப் போற்றிக் கொண்டு, காலத்தைப் போக்குகின்றீர்கள். உண்மையில், இந்த இடத்தில், இந்த தருணமே, அருள் உண்மை விளங்க, அனுபவப்படுவதாய் உள்ளதால், இதுவே தக்க சமயம் எனக் கொண்டு உய்யுங்கள். மற்ற மற்ற சமய மதங்கள் எல்லாம் புறப் பிழைப்பில் ஏகதேச பலனீந்து ஒழிவனவேயாம்.

பழஞ் சமயநெறிகள் யாவும் உடைந்த நிலவறைகளாகக் குழியிடத்து உள்ளன. அந்தக் குழியறையில் உண்மை விழிப்படையாது மாயப் பெருந்துயிலில் பொய்க் கனவு கண்டு கொண்டே இருக்கின்றீர்கள். அந்நிலையில் காண்கின்றனவும், அனுபவிக்கின்றன யாவும் பொய்த்துப் போகும். ஆதலின், "முதலில் விழித்தெழுமின்; விழித்துக் கொண்டு உண்மையை உணர்மின்; உணர்ந்து இந்த அருட் சமயமாகிய சுத்த சன்மார்க்கத்தை சார்மின்." இந்த சன்மார்க்கமே, அருட்பெரு நெறியாம், திருநெறியாகும். இந்நெறியை உவந்து சேர்ந்து கொண்டால் உய்வது திண்ணம். **விழிப்பு உண்டாகிய போதுதான், "நீங்கள் இதுவரை உறங்கிக் கொண்டு கிடந்த இடம் உடைந்த சமயக்குழி"**

Koviloor Digital Library

என்பதை நேரடியாகக் கண்டு, அதனிடத்து அருவருப்பு கொள்வீர்கள். அவ்விடத்தினின்றே உள்ளூறத் திருவருளை வேண்டினால், உடனே "அவ்வருள் வந்து அரைக்கணத்தில் உங்களை, சன்மார்க்கப் பெருநெறியாகிய ராஜபாட்டையில் செலுத்திவிடும். அதில் மகிழ்வோடு நடந்து சென்று ராஜகிருகம் என்னும் அருளம்பலத்தை அடைந்து ஆனந்திக்கலாம்."

ஞான சரியை - செய்யுள் : 12

திருநெறியொன் றேஅதுதான்
சமரசசன் மார்க்கச்
சிவநெறியென் றுணர்ந்துலகீர்
சேர்ந்திடுமின் ஈண்டு

வருநெறியி லெனையாட் கொண்
டருளமுத மளித்து
வல்லபசத் திகளெல்லாம்
வழங்கியவோர் வள்ளல்

பெருநெறியிற் சித்தாடத்
திருவுளங்கொண் டருளிப்
பெருங்கருணை வடிவினொடு
வருதருண மிதுவே

கருநெறிவீழ்ந் துழலாதீர்
கலக்கமடை யாதீர்
கண்மையினாற் கருத்தொருமித்
துண்மையுரைத் தேனே.

உரை : பழையனவாகிய கற்பனா நெறிகள் எல்லாம் கருநெறிகளேயாம். அவற்றில் கிடந்து உழன்று கொண்டிருக்க வேண்டாம். சுழன்று திரிந்து கலக்கமடைய வேண்டாம்.

Koviloor Digital Library

"கண்மை எனும் தயா ஒருமையோடு இரக்கங் கொண்டு உங்களை வர வேண்டுகின்றேன். உவப்புடன் வரவேற்கின்றேன். வாருங்கள்! வாருங்கள்!" சுத்த சன்மார்க்கத் திருநெறி ஒன்றே நெறி என்று அறிந்து கொள்ளுங்கள். அதுவே சுத்த சிவ நெறியாகத் தேர்ந்து, தெரிந்து கொள்ளக் கடவீர்கள். சத்து, சித்து, ஆனந்தமாய்த் திகழ்கின்ற மெய்ப்பொருளை திருவருளால் கண்ட பெருஞ்சித்தர்கள், யோகானுபவ சித்தி பெறும் பொருட்டு, அந்தக் கடவுள் உண்மையைச் சுட்ட, 'சிவம்' என்ற ஓர் அற்புதச் சொல்லைக் கற்பனையால் ஆக்கித் தந்தார்கள். **"அந்தச் சொல் ஓர் உபாயக் கருவியே. அது கொண்டு உண்மையை அறிய வேண்டுவதே முக்கியம். உண்மையை அறிந்து, அந்த முடிவான சச்சிதானந்த அனுபவம் பெறுதலே முக்கியத்திலும் முக்கியமாகும்."** அடைய வேண்டிய இக்குறிக்கோளை மறந்துவிட்டுச் சிவம் என்றதைச் சொல் வடிவிலும், மந்திர ரூப ஆற்றல் வடிவிலும், விக்கிரக மூர்த்தி வடிவிலும், குரு மகா சந்நிதானமாகிய வேஷக் கோலத்திலும் கண்டு போற்றிக் கொள்ளும் போது, உலகோடு சமரச சகோதரத்துவ பாவத்தோடு பழகமுடியாமலும் சுத்த சிவானுபவத்தின் இலட்சியமாகிய சச்சிதானந்த வாழ்வு பெறக்கூடாமலும் போவதாயிருக்கின்றதாம். ஆகையால், உண்மையும் அனுபவ இலட்சியமும் அறியப்படாது, சிவத்தைப் புல்லறிவால் புல்லி நின்று *(தழுவி நின்று)* அழிவுபடுதல் திருவருளாணை அன்றாம். எனவே, சிவம் என்ற கற்பனைச் சொல்லை, ஒன்று, பூரணப் பொருளறிந்து ஏற்க வேண்டும். அல்லது அந்தப் பொருளையே நேரடியாகக் காட்டிக் கூட்டி வைக்கும் ஒரு சொல்லை ஏற்றுக் கொள்ளுதல் பொருந்தும்.

"கடவுள் தயவால் ஒரு சொல் வழங்கப்படுகின்றோம். அது 'தயவு' ஆகவே கண்டு கொண்டுள்ளோம். இந்தத்

Koviloor Digital Library

தயவே, சத்து, சித்து, ஆனந்தமாம்." தயவுடன் கூடிய ஒழுக்கத்தினாலும், தயவு மயமான சுத்த சத்விசாரத்தாலும், தயவினால் சாருகின்ற சுத்த தயா இன்ப வாழ்வினாலும் முடிந்த சச்சிதானந்த அனுபவத்தைக் கொண்டு இவ்வுலகில் நிலவக் கூடியதாய் இருக்கின்றதாம். ஆதலின், சிவத்தை இப்பொழுது தயவாகக் கொள்ளுதலின், நஷ்டமொன்றும் ஏற்படுவதாயில்லை. நமக்கு வேண்டுவது மெய்ப் பொருளும் அனுபவமுமே அல்லாது வெற்றுச் சொல்லானந்தம் அல்லவே! கற்பனை கடந்த மெய்ப்பொருளை உலகம் எல்லாம் ஏற்று, பயன்பெற வேண்டும், என்பதுவே திருவருள் ஆணையாகும். சிவ சன்மார்க்கம் தயா நெறியாக எங்கணும் பரப்பப்படல் வேண்டும். எவரும் தடையின்றி ஏற்பர். இத்தயா பெரு நெறியே, சிவ நெறியாம் திருநெறியாகக் கொண்டு வம்மின் உலகீரே என அழைக்கின்றார் நமது வள்ளல்.

வருநெறியில் எனை ஆட்கொண்டு அருளமுதம் அளித்தார், எனப்படுகின்றது. இதன் விளக்கம் யாதெனில், இதுவரை இருந்த மார்க்கமெல்லாம் பயன்தராது போயின. இத்தருணம் வெளிப்படுகின்ற இச் சுத்த சன்மார்க்கம் ஒன்றே மெய்ப்பயன் வழங்க வருகின்றது. ஆதலின், "இதுவே எதிர் காலத்தில் எங்கும் ஏற்கப்படும் ஒரு பொது நெறியாக விளங்கவல்லதாம்." இனியே, இது உலகமெல்லாம் காண வரப் போகின்றதால் "வருநெறி" என்று குறிக்கப்படுகின்றதாம். இனிமேல் பரவப்போகின்ற இந்த சுத்த நெறி நமது வள்ளலார் உள்ளத்தில் வெளிப்பட்டது. அங்ஙனம் வெளிப்பட்டதும், அவர்க்கு அருள்அமுதம் அளித்து அருள் வல்லப சித்திகள் பலவும் வழங்கி விட்டதாம். சச்சிதானந்த பதியாகிய தனிப்பெருங்கருணை வள்ளல்தானே, அருள்அம்பலத்தே அருட்பெருஞ்ஜோதித் திருவுருவங்கொண்டு எழுந்தருளுகின்றார். எதற்காக

Koviloor Digital Library

வெனில், அருட்பெருநெறியை உலகில் வெளிப்படுத்தற்காம். அந்த சுத்த நெறியை உலகெங்கும் ஏற்கச் செய்கின்றதே பெருஞ்சித்தாகும். அவர் செயலாக அற்புதம் பல நிகழும். பழையனவற்றில் பற்றொழிந்து, உள் மலரும் உண்மை நெறியில் பற்றுக் கொண்டு ஓங்க, எல்லோருக்கும் கருணை பாலிக்கின்ற தருணம் இதுவாக இருக்கின்றதாம்.

"கரு நெறி" என்பதற்கு விளக்கம் அறியாமை இருள்மய நெறியென ஒருவாறு கொள்ளலாம். பழைய புலனெறிகளால் உண்மை விளங்கவில்லை. அறியாமை இருள் நீங்கவில்லை. சுத்த, நித்த இன்பம் தோன்றவில்லை. அக்கருமை தூய வெண்மையாக அருள்ஒளியால் மாறவேண்டிய தருணம் இதுவாகச் சூழ்கின்றதாம். மேலும், கருநெறி என்றது, அபக்குவ வினை வசத்தால் மேலும் மேலும், சராயு என்னும் கருப்பையிற் சென்று சென்று, பல்வேறு அவத்தைகள் பட்டுப்பட்டு, பிறப்பதும் இறப்பதுமாய் உள்ள சகமார்க்கமே கருநெறியாகக் கொள்ளப்படும். அன்றியும், பிறவாகிய, யோனி பேதங்களில் அனந்தம் பிறவிகளில் தோன்றி, அவத்தை உறுவதும் கருநெறி வாழ்வேயாகும். அன்றியும், ஆன்மாவாகிய கருவின் உண்மையைக் கண்டு, அந்நிலைக் கண்ணுற்று ஒடுங்கச் செய்யும் பழமையான யோக ஞான மார்க்கங்கள் கூட இன்று கருநெறியாகவே உள்ளனவாய்க் காண்கின்றோம். இதில், ஆன்ம சக்தியால், அற்புத சித்தி கொண்டு சிறிது காலம் உலகத்தில் உலவி விட்டு, முடிவில் அவ்வான்மாணுக் கருவில் ஒடுங்கி மறைந்து போகவே நேர்ந்தனவாம். ஆகையால், அக்கருநெறியிற் சென்று அடையப் பெறுகின்ற முடிவு நிலையில் ஆனந்தானுபவம் சிறிதும் விளங்காது, ஒரு பயனுமின்றிக் கெடுகின்றதாம். எனவே இக் கருநெறியிலும் இடறி விழுந்து விடாதீர்கள் என எச்சரிக்கப்படுகின்றோம்.

Koviloor Digital Library

இப்படியான கருநெறிகளை எல்லாம் விடுத்து, சுத்த தயா மயமான கருணைநெறியிற் செலுத்தவேண்டி, நமது பதியே அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை வடிவினராய், உள் ஞான சபையில் எழுந்தருளிப் பெருங்கருணை பாலிக்கின்ற தருணம் இதுவாக உணர்த்தப்படுகின்றோம். ஆதலின், உடனே இவ்விடத்திற்கு வந்து திருவருளைப் பெற்றுக் கொள்ளுங்கள். காரிருள் சேராக் கருணைநெறியால் நன்மையெல்லாம் பெற்று நனி மகிழ்ந்து வாழலாம்.

ஞான சரியை - செய்யுள் : 13

உண்மையுரைக் கின்றேனிங்
குவந்தடைமின் உலகீர்
உரையிதனில் சந்தேகித்
துளறிவழி யாதீர்

எண்மையினா னெனநினையீர்
எல்லாஞ்செய் வல்லான்
என்னுளமர்ந் திசைக்கின்றான்
இதுகேண்மின் நீவிர்

தண்மையொடு சுத்தசிவ
சன்மார்க்க நெறியில்
சார்ந்துவிரைந் தேறுமினோ
சத்தியவாழ் வளிக்கக்

கண்மைதரு மொருபெருஞ்சீர்க்
கடவுளெனப் புகலும்
கருணைநிதி வருகின்ற
தருணமிது தானே.

Koviloor Digital Library

உரை : தயா வள்ளலென்றும், கருணா மூர்த்தி என்றும் கருணை நிதி என்றும் கூறப்படுகின்ற நமது ஆண்டவர் வருகின்ற தருணம் இதுவாக உள்ளதாம். அவர், நமக்குக் கண்மை (தயவு) வழங்கப் போவது உண்மையாம், அந்தத் தயவு நமக்குச் சத்திய வாழ்வு என்னும், சுத்த சுகானந்தப் பெருவாழ்வு நல்கப் போகின்றதும் உண்மையாம்.

நான் உண்மையே சொல்லுகின்றேன், ஏமாற்று மொழியல்ல. மோசக் கருத்துடைய உலகிகள், ஒருகால், உண்மை போல பொய்யையே மிக அழுத்தமாய் உரைப்பார்கள். (அ) சத்தியமாய்ச் சொல்லுகின்றேன் என, 'அ'கர ஒலியை வாயில் நிறுத்திக் கொண்டு, உச்சரித்து, ஏமாற்றி விடுவார்கள். அப்படியல்ல, எனது உரை, உண்மையேயாகும். இதில் சிறிதளவும் ஐயம் கொண்டு முரண் சொல்லித் திரியாதீர்கள். உள்ளத்தில் தெளிவு இல்லாமல், பலர் கூறும் உரைகளை நிறைத்துக் கொண்டு, அவற்றையே திரும்பத் திரும்ப, நினைவு கூர்ந்து கொண்டிருந்தால், அவையே அடிக்கடி வெளிப்படும். உண்மை அல்லாத உள்ளத்தின் அலறலாக, உளறலாகத்தான் வெளியாம். ஆகையால், பிறவற்றை உளங் கொண்டு, உளறிக் கொண்டு அலையாதீர்கள், என அறிவுறுத்துகின்றார், நம் வள்ளல். எனது உள்ளத்திலிருந்து உரை தருகின்ற வள்ளல் எப்பேர்ப்பட்டவரென்று அறிவீர்களா? எண்மையினான் (எளிமையானவன், இலேசானவன்) என்று கருதி விடாதீர்கள். அவன் எல்லாம் செய்ய வல்லவனாவான். அப்பெருமையன் தான், என்னுள் இருந்து இசைக்கின்றான்.

"அவன் சொல்லுகின்றதைக் கேளுங்கள்" என்றால் இது வாயினால் சொல்லுவதைக் காதினால் கேட்டுவிட்டால் போதும், என்பது மட்டும் பொருள் அல்ல. கேட்டு அதன்படி நடத்தல் வேண்டும் என்பதுவே கருத்தாம். "தண்மை"

Koviloor Digital Library

என்பது குளிர்ந்த அன்பு நிலையாம். அந்த அன்பின் குளிர்ச்சி, இரத்தம் குளிர்ந்தும், உடல் குளிர்ந்தும் இருக்க உதவும். அப்படி இருந்தால்தான் "சத்துவ குண சம்பந்த கடவுள் விளக்கம்" உண்டாகும். இல்லாத பட்சத்தில், வன்பு வளரும் நெஞ்சில் வெம்மையே ஓங்கலின், தேகமுற்றுமே தகித்துக் கொண்டிருக்கும். தாமச குணமும், ராசத குணமும் அதிகரித்து கடவுள் விளக்கம் மறைந்து கிடக்கும். ஆகையால், தயவுத் தன்மையுடன் சுத்த சன்மார்க்கத்திற்கு வாருங்கள். இந்நெறியில் விரைந்து மேலேறலாம். ஏறி மேனிலைக்கு வந்தால், மேற்குறித்த சத்திய வாழ்வு வழங்கப் பெறுவீர்கள். ஆதலால், இங்கு நீங்கள் எல்லோரும் ஆர்வத்தோடும், உள்ள விருப்பத்தோடும் வர வேண்டுகின்றனன். சும்மா மேலும் மேலும், அழைத்து அழைத்து சதா நச்சுகின்றானே என்று, வேண்டா வெறுப்போடு, போய்த்தான் பார்க்கலாமே என்று அசட்டையாக வரக்கூடாது. நல்ல முழு நம்பிக்கையோடு, உளமகிழ் விருப்பத்தோடு வரவே வேண்டுகின்றனன். அப்படி வந்து சுத்த சன்மார்க்கத்தில் நடந்தால், நிச்சயம் பெருநலம் பெறுவீர்கள்.

எண்மையினான் என்பதற்கு, எளிய இழிநிலை யுடையவன் என்பது ஒரு பொருளாய் மேலே குறிக்கப்பட்டது. அத்தோடு, எண்ணுந் தன்மையான் என்றுங் கொள்ளலாம். அப்படிக் கொள்ளும் போது, "நினைப்பார் நினைக்கின்ற வண்ணம் தோன்றக் கூடியவன்" என்றும் பொருளாம். அன்றியும், எண்மை என்பது எண்ணிக்கை அளவையும் குறிக்கும். ஆகவே, ஈண்டு குறிப்பிட்டபடி, நம் பதியை எண்மையினான் என நினையீர் என்பதற்கு, எளியன் என்றும், இழிவுடையவன் என்றும் எண்ணியபடியெல்லாம் தோன்றும் வடிவுடையவன் என்றும், இவ்வளவு என்ற கணக்கில் அடங்குபவன் என்றும் கூறப்படாதாம். அவன்

Koviloor Digital Library

எல்லாம் வல்லவன். எனினும் பிறர்படுந் துன்பநிலை கண்டும் ஒன்றுஞ் செய்யமாட்டாதவன் போல் எளிய அசக்தன் போல் இருக்கின்றதும் காண்கின்றோம். பெருமைகட்கு இருப்பிடமாய் பெருமானாய் இருந்தும், இழி செயல் புரிகின்றோனின் உள்ளிருந்து அவனாயும் விளங்கலின் அவன் இழிவுடையன் தானோ! கருதுவார் கருத்தில் தோன்றுவதெல்லாம் நிலைக்காது ஒழிகின்ற வடிவமாயுள்ளதே, ஆதலின் எந்த வடிவத்தை அவனுடைய உண்மையான வடிவமாகக் கொள்வது? எண்மையுரு அவனுக்கெதுவோ? மேலும், எண்ணளவையில் அடங்கானேனும், அணுத்துவமான சிற்றம்பலத்தே அடங்கி நின்றாடுகின்றதாக கூறப்படுகின்றதே! ஆட்டுக்கு வால் அளந்து வைத்துள்ளதாகச் சொல்லப்படுகின்றதே! ஆன்ம அணுவில் அகிலாண்ட நாயகன் அடங்கி நின்றாடும் அளவை என்னென்பதோ!

ஆகவே, எண்மையினான் என நினையீர் என்றதற்கு உடன்பாட்டுப் பொருளாகவும் கொள்ளலாம், எதிர்மறைப் பொருளாகவும் கொள்ளலாம். இரண்டு வகையினும் பொருத்தமாகவே திகழ்வதாகும். இதுதான் எல்லாம் வல்ல கடவுளின் அற்புதத் தன்மையாம். இக் குணத்தால்தான், ஆண்டவரைக் குறித்துச் சொல்லும்போது, "எல்லாமானவர் என்றும்; ஒன்றும் அல்லாதவர் என்றும், ஏகர் என்றும்; அநேகர் என்றும்; சிற்றணுவினுஞ் சிறியன் என்றும்; பெருமகத்தினும் பெரியோன் என்றும், பித்தன் என்றும்; எல்லாம் வல்ல சித்தன் என்றும்," இன்னும் பலவாகக் கூறப்படுகின்றார்.

இப்படியாக உள்ள ஆண்டவர் ஒருவரேயாவர். இவரைப்பற்றி இந்த சுத்த சன்மார்க்கத்தில்தான் உண்மையாகக் கண்டு கொள்ளலாம். திருவருளாலே அந்த

Koviloor Digital Library

ஒன்றான கடவுளையே கண்டு, உரைக்கின்றார் திருவருட் பிரகாசப் பெருமான். "அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் தானே, அவ்வருட் பிரகாச வள்ளலுருவம் கொண்டு, நின்று, உரைக்கின்றார்." இவ்வுண்மையை தீர்க்கமாகத் தெளிவுறக் கண்டுகொண்டால், இந்த ஞானசரியையின் குறிக்கோள் சித்திக்கும். எந்த ஒன்றான அருட்பெருஞ்ஜோதி பதியைத் தன்னகத்தில் தானாய் நம் வள்ளற் பெருமான் கண்டு கொண்டுள்ளாரோ, அந்தப் பதி ஒருவர்தானே, நம்மிலும் நாமாய்த் தனித்தனி விளங்குகின்றது, அருட் பேரற்புதத்திலும் அற்புதமாக உள்ளதாம். அப்பதி ஒருவரே, தம் அருளையே நம் அறிவாக்கி, இவ்வறிவால் அவ்வருட் பதியையே கண்டு கொள்ளச் செய்கின்றார். ஆகவே, நாம், நாம் எனத் தனித்தனி புறத்தே விளங்குவதெல்லாம் அந்த ஒருவரின் அருளற்புத நிலையே ஆகும். அத்திருவருள் அனுபவத்தால் நாம் என்ற ஆணவ நிலை போகின்ற போது, நாம் என்றதே அந்த அருட்பெருஞ்ஜோதிபதி வடிவாய்த் திகழ்வதாம். அந்நிலையில் நாம் என்றும், அதுவென்றும் பிரித்தறியக் கூடாத கடவுள் அனுபவம் விளங்குவதாம். இந்நிலைக் கண் ஏற்றி வைத்தற்கு, வாழ்வில் விளங்குவதற்கு என்றே, வள்ளல் வாய்ப்பறை ஆர்த்து, அருள்முரசு அறைந்து, அழைத்துக் கொண்டிருக்கின்றார். அவர் உரையே, ஆண்டவர் உரையாக, ஐயம் திரிபறக் கொண்டு அம்பலம் அடைதல் வேண்டும். அடைந்தால், அருள் சேரும்; அம்பலப் பெருவாழ்வு நேரும்.

ஞான சரியை - செய்யுள் : 14

தானேதா னாகியெல்லாந்
தானாகி யலனாய்த்
தனிப்பதியாய் விளங்கிடுமென்
தந்தையையென் தாயை

Koviloor Digital Library

வானேஅவ் வான்கருவே
வான்கருவின் முதலே
வள்ளாலென் றன்பரெலாம்
உள்ளாநின் றவனைத்

தேனேசெம் பாகேஎன்
றினித்திடுந்தென் னமுதைச்
சிற்சபையில் பெருவாழ்வைச்
சிந்தைசெய்மின் உலகீர்

ஊனேயும் உடலழியா
தூழிதொறு மோங்கும்
உத்தமசித் தியைப்பெறுவீர்
சத்தியஞ்சொன் னேனே.

உரை : "உண்மையில் இருக்கின்ற அருட்ஜோதிப் பெரும்பதி ஒருவரே" என்று அறிந்து கொண்டுள்ளோம். ஆனால், அந்த ஒருவர், ஒரு வடிவில், ஓர் இடத்தில், ஒரு காலத்தில் மட்டும் இருக்கின்றவர் அல்லவாம். "எல்லா வடிவங்களிலும், எல்லா இடங்களிலும், எல்லாக் காலங்களிலும் இருப்பவரேயாவர்." இப்படி இருத்தலே அவர்தம் அருட் பெருமையாகும். ஒன்றான அவர் எல்லாந்தானாகி, ஒன்றுந்தான் அலனாய் இருக்கும் தன்மையை சற்று ஓர்ந்து அறிதல் வேண்டும்.

நம் சத்திய ஞான சபையிலே, அருட்பெருஞ்ஜோதியாய் விளங்குகின்ற கடவுள் ஒருவரே உண்மையில் இருக்கின்றார். அவர்தம் அருட் பெருமையை நமக்கு அனுபவத்தில் வழங்குதற் பொருட்டு, அகமாகிய அனந்தங்கோடி ஆன்மாவாய் உலகெங்கும் நிறைந்து நின்று அனந்த வண்ண பேதப் புற வடிவங்கள் கொண்டு சூழ்கின்றார். இதுதான் "தானே தானாகி இருக்கும் அக நிலையும், உலகிலுள்ள எல்லாம் தானாகி உள்ள தோற்ற நிலையும்," தோன்றிய

Koviloor Digital Library

வடிவங்களில் எல்லாம் உள் மறைந்து இருத்தலின், தான் எதுவும் அல்லனாயும் இருக்கின்ற நிலையுமாக அறியவுள்ளனவாம். எனவே, நம்மில் நாமாய் விளங்கும் பதி ஒருவரே, எல்லா வடிவத்தும், எல்லா இடத்தும், எல்லாக் காலத்தும் இருப்பதாக, சத்திய ஞானத்தால் காண்கின்றோம். இந்த ஞானம் வராதபோது ஒன்றான கடவுள் உண்மை சற்றும் விளங்காது.

இந்த ஒன்றான கடவுளே, ஒப்பற்ற தனித் தலைமைப் பெரும் பதியாய் விளங்கிக் கொண்டுள்ளார். தானே நானான நிலையில் விளங்க நேரும்போது, தனது அருட்சக்தியால், எனக்கொரு தந்தையுருவாயும், தாயுருவாகியும் தோற்றிப் புணர்ந்து, இந்த மனித தேகம் கொண்டு விளங்கச் செய்துள்ளான், இப்பொழுது. இத்தருணத்தில் இத்தேகச் சூழலில் "தானே நானான" உண்மையைக் காட்டிக் கொடுத்திருக்கின்றதாம்.

அவன், வானாய் இருக்கின்றான். வான் கருவாய் இருக்கின்றான்; அவ்வான் கருவுக்கு ஆதாரமாயும் இருக்கின்றான் எனப்படுகின்றது. அதாவது நம் அருட்ஜோதிபதியே ஆன்மக் கருவாய் எல்லா அணுக்களிலும் ஆதாரமாயுள்ளார். அவ்வான்ம சிற்றணுவில் இருக்கும் நம் அருட்பெரும்பதி ஆன்மாகாச வெளிக்குக் காரணமாயுள்ளார். இந்த ஆன்மாகாசத்தில், பூதாகாசம் எல்லாம் அடங்கி உள்ளதால் இவ்வான்மாகாசம், அப் பூதாகாசத்திற்குக் கருவாயிருக்கின்றது. ஆகவே, கடவுள் தானே பரமாகாச வண்ணராய், ஆன்மாவுக்குக் கருவாய் அமைந்துள்ளதும் அவ்வான்மக் கரு, புற ஆகாசத்தைத் தன்னுட் கொண்டுள்ளதும் அறியலாகின்றன. முடிவாக, வானாகியுள்ளதும், அவ்வான் அடங்கிய ஆன்மக் கருவாகியுள்ளதும், அக் கருவுக்கு முதலாகி உள்ளதும் நம்

Koviloor Digital Library

பதியே என்று தெளிவுறலாம்.

இந்த நம் பதியே ஒப்பற்ற பெரு வள்ளலாவர். எல்லோருக்கும், எக்காலத்தும், வேண்டியவை எல்லாம் இல்லை என்னாது, சற்றும் தடைபடாது, வழங்குவதுதான் கடவுட் பெரு வள்ளன்மை ஆகும். இப்பெற்றி சிற்றணு அளவே உடையவனாய், சிறிது காலம், சில பலருக்குத் தன் பொருள்களை வழங்குகின்ற ஒருவனை வள்ளல் என்று உபசரித்துக் கூறுவது உலக வழக்கம். "நமது அருட்ஜோதி வள்ளலே தனிப் பெருமை கொண்டு, என்றும் விளங்கித் தன் வள்ளன்மையைப் போற்றிக் கொள்வோர்க்கு மிகுதியாகக் காட்டுகின்றார்." அருள்வள்ளல், நமது உள்ளத்தை நன்கு அறிவார். நம் உண்மைத் தேவையை உடனுக்குடன் அளித்து வாழ்விக்கின்றார். உலக வள்ளல்கள் போன்று, அறியாமைச் செருக்காலும், சிற்றுடைமையாலும், மற்றபல குறைபாடுகளாலும், பிறர்க்கு, ஏதோ வேண்டுவதை ஏகதேசம் கொடுத்து மகிழ்விப்பவர் அல்ல நம் வள்ளல். எல்லாம் வல்லவராய், எல்லாம் நிரம்பியவராய் இருக்கின்ற நம் கருணை வள்ளல், அன்பு உள்ளம் படைத்தவர்க்கு வேண்டுவன எல்லாம் வழங்குதலின்றி, வேண்டாதவர்கட்கும், ஏனைய பிற உயிர்கட்கும் தேவைகளை அறிந்து வழங்கிக் கொண்டே இருக்கின்றார். அன்றியும், தன்னை மதியாது, மாறுபட்டுச் செல்லுகின்றவர்களுக்கும், மறக்கருணை காட்டி அதற்குத் தேவையானவற்றைப் புரிந்து நலமே செய்கின்றார்.

அவர் தெளிந்த அமுதமாக உள்ளவர் ஆம். அதன் தெளிவும், சுவையும் எதற்கு ஒப்பிடுவதோ? உலகம் கண்ட நல்ல தேனிலும், செம்பாகிலும், கோடியில் ஒரு பங்காவது அத் தெளிவும் சுவையும் காணமுடியுமோ?

சிற்சபையிற் பெருவாழ்வைச் சிந்தை செய்மின்

Koviloor Digital Library

என்கின்றார். அணுவினுள் அணுவாய் அருகி இருக்கின்ற சிற்சபையில் ஓங்குகின்றவர் நமது அருட்பெருஞ்ஜோதிபதி. இச்சிற்றணு விடத்திருந்து கொண்டு, தனிப்பெருங் கருணையால் அகில உலகத்து அனைத்து உயிர்களையும், பொருள்களையும் தவறாது நன்கு ஆண்டு கொண்டுள்ளார். "இந்த பதியைச் சிந்தை செய்து, வாழ்த்தி, வணங்கி, இரண்டறக் கலந்து கொள்ள ஆணை செய்யப்படுகிறோம். இச்சிற்றம்பலத்தில் பொருந்தி இருந்து கொண்டு, பொன்னம்பலமாம் அகண்ட பெரு வெளியிற் பெருவாழ்வு வாழ வேண்டியுள்ளதாம்." இக்கருத்தே, நமது ஆன்றோர் வழங்கிய ஒரு பழமொழியிலும் காண்கின்றோம். "சிறுகக் கட்டிப் பெருக வாழ்" என்பதுவே அப்பழமொழியாம்.

மேற்படி அம்பலவாழ்வு மேற்கொள்ளும் போது, ஊன் ஏயும் உடல் (அதாவது, அசுத்த புன்புலால் பொருந்திய தேகம்) நித்திய சுத்த அருட்ஜோதிக்கு இடம் கொடுத்து, அதுவாகி மாறி விடுகின்றதாம். இப்படி மாற்றமுறுவதாலே நமக்கு அருட்ஜோதி தேகம் சித்தித்ததாகும். இதுவே உத்தம சித்தியாம். அருட்பூரணத்தால் பெறப்படுவது இச்சித்தி. மற்ற அருளேகதேசத்தால், மனோகரண, தேகேந்திரிய, ஜீவ முயற்சிகளாலும், தந்திர, மந்திர, யந்திர விஞ்ஞான சாதனைகளாலும் அடைகின்ற எல்லா விதமான சித்திகளும் "மத்திம சித்தி"களாகவே கொள்ளப்படும். இவையன்றி, காம குரோதாதிகளுடன் அசுர சாதனா தவ முயற்சிகளால் பெறப்படுகின்ற "அதம சித்தி"களால், நன்மையை விடத் தீமையே அதிகமாய் விளையக் காண்போம். "மனிதன் பக்குவப்படாத கீழ்நிலையில் கிடந்து துன்பப்படுவதற்கு உண்மை அறியாமை, அன்பு இல்லாமையே காரணமாம்." ஆகையால், ஜீவ தயாவொழுக்கம் பூண்டு, அன்புப் பணியில் இறங்க வேண்டுவது, மனிதனின் முதற்கடமையாம்.

Koviloor Digital Library

அன்புப்பணியில் ஈடுபட்டு, பரோபகாரம் ஓங்கும்போது, தன்னை மதியாமை, தான் என்ற அகங்காரம் கொள்ளாமை, நிராசையோடு கூடிய தயை உடைமை எல்லாம் உண்டாம்.

அப்போதுதான், அதம சித்திகளை அறவே வெறுப்போம். மத்திம சித்திகளை மறந்தும் மதியோம். உத்தம சித்தி ஒன்றையே உளங்கொண்டு உய்வோம். திருவருளும் அதனை உவந்தருளும். இது சத்தியம் என்று அறிந்து கொள்ள வேண்டும். அறிவது மட்டுமல்ல, "சுத்த சத்விசாரத்தால் உள்ளூறக் கண்டு கொள்ளவும், கண்டதை நித்திய வாழ்வில் பெற்றுக் கொள்ளவும் வேண்டுமென்பதே திருவுள்ளத்தின் ஆணையுமாம்." இனி அடுத்த செய்யுளை எடுத்துக் கொள்ளுவாம்.

ஞான சரியை - செய்யுள் : 15

சத்தியவே தாந்தமெலாம்
சித்தாந்த மெல்லாம்
தனித்தனிமேல் உணர்ந்துணர்ந்தும்
தனையுணர்தற் கரிதாய்

நித்தியசிற் சபைநடுவே
நிறைந்துநடம் புரியும்
நித்தபரி பூரணனைச்
சித்தசிகா மணியை

அத்தகையோர் பெரும்பதியை
அருமருந்தை அடியேன்
ஆவியையென் ஆவியிலே
அமர்ந்ததயா நிதியைச்

Koviloor Digital Library

சித்தியெலாம் எனக்களித்த
சிவகதியை உலகீர்
சிந்தைசெய்து வாழ்த்துமினோ
நிந்தையெலாம் தவிர்ந்தே.

உரை : சிற்சபை ஒன்றே நமது ஆண்டவர்க்கு, உண்மையான, என்றென்றும் விளங்குகின்ற கோயிலாய் இருக்கின்றதாம். இவ்வம்பலத்தின் நடுவிலே இருந்து கொண்டு, எங்கும் நிரம்பிய தன்னிலை காட்டும், தனிப்பெரு நடனம் புரிந்து கொண்டுள்ளார். அவர் நித்த பரிபூரணராக உள்ளாராம். "நித்தியராகவும், நிறைவுடையவராகவும் இருக்கின்றவர், ஒருவரே ஒருவர்தான் என்பது அந்த அருள் அம்பலத்திலிருந்து, அருளாலே காண்கின்ற போதுதான் உண்மையாக விளங்கும்" மற்றபடி சொல்லித் தெரிந்து கொள்ள முடியாதாம். அவர், சித்தசிகாமணி ஆவார். அவர், அற்புத சித்தர்களுக்கு எல்லாம், தனித் தலைமைப் பெரும்பதி என்பது குறிப்பு. அன்றியும், சித்தம் என்பது சலனமற்ற மனத்தின் தெளிவு நிலையாக இருக்கின்றதால், அத்தெளிவோடு நிலைத்துத் திருவருளை வேண்டி நின்றால் முடிவில் அருட்ஜோதி மணியாய் நமது ஆண்டவர் வெளிப்படுகின்றார். ஆதலின், இந்த அருளொளி மணியைச் சித்தசிகாமணி என்று கூறலாம்.

அன்றியும், நல்ல யோகியரிடத்தில் விளைவு கொள்ளுகின்ற சித்த நாடியின் அந்தத்தில், தேஜோமயமாய் வெளிப்படுகின்ற சிவஜோதிமணியே சித்தசிகாமணியென உள்ளதாம். இந்த மணியை அனுபவத்தில் பெற்றுக் கொள்கின்றவர்கள், யோக ஞான சித்திகள் பலவும் புரிவார்கள் என்ப. இந்த சித்தசிகாமணியை யுற்று சித்தர்களுக்கெல்லாம் சிகாமணியாய் விளங்குகின்ற பலரும் போற்றும் படியாய் விளங்குகின்ற பெருமை உடையவர்,

Koviloor Digital Library

நமது அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர். இந்த பதியை, சத்தியமாயுள்ள வேத வேதாந்தங்கள், சித்தாந்தங்கள் எல்லாம் விளக்கிக் கூறி, சுட்டிக் காட்ட எவ்வளவோ காலமாக முயன்று கொண்டுதான் இருக்கின்றன. அவைகளில் எல்லாம் தன்னைச் சிறிதும் வழங்கிவிடவில்லை, நமது அருட்பெரும்பதி. வேதாந்தமும், சித்தாந்தமும் மனிதனைப் பகுத்தறிவின் எல்லையில் நிறுத்திப் பாவனை செய்ய விட்டு விட்டுத் தயங்கி நிற்கின்றன. அதற்குமேல் அவற்றால் என்ன செய்ய முடியும்! அந்தப் பாவனா சமாதிப் பழக்கத்தாலும் ஆகம தந்திர முறைகளாலும், நித்த பரம்பொருளை ஓரளவு உணர்ந்து அடைந்து, ஓரளவு சித்தி கொண்டும், ஒரு குறிப்பிட்ட காலம் வரைதான் வாழ்ந்தொழிய முடிந்ததாம்.

அருட்பூரணம் என்னும் சுத்த சன்மார்க்கம் ஒன்றினால்தான் நிலையான நித்தியானந்த வாழ்வு பெற முடியும் என இந்நாள் திருவருளால் உணர்த்தப்படுகின்றோம். அப்பேர்ப்பட்ட அருட்பெரும் பதியை, அருமருந்து என்றும், அருள்அமுதமாக உள்ள ஒன்றையே, என்னுடைய உயிராகக் கொண்டுள்ளதாய்த் திருவருளால் அறிவிக்கப்படுகின்றனன். மேலும் எனது ஆன்மாவாயிருக்கும் அது, எல்லாம் வல்ல தயாநிதியாகவும் இருக்கக் காண்கின்றேன். அதுவே என்றன் தயா ஜோதி நிதியாய் விளங்கி, சித்தி எல்லாம் வழங்குகின்ற சிவநிலையாகவும் கண்டுகொள்கின்றேன். நீங்களும் இந்த பதி அருளைப் பெற்று, பரமானந்த வாழ்வு அடைந்திடலாம் வாருங்கள். உலகில் பிறரை நிந்தித்தலை விட்டுவிடுங்கள், எங்கும் விளங்கும் இறைவனையும் அவனது அருட்சக்திச் செயலையும் கண்டு கண்டு வந்தனையே புரியுங்கள். "முதலில் அம்பல முன் வந்து நின்று ஆண்டவர் பெருமையை நினைவு கூறுங்கள், சிந்தனை செய்யுங்கள். செய்து கொண்டேயிருங்கள். அன்பினால் கன்மனம் கரைந்து நெகிழும்போது, ஆண்டவர் உண்மை வெளிப்படுவது

Koviloor Digital Library

சத்தியம்." வேதாகமங்களாலும், காண்டற்கும் கண்டு காட்டற்கும், அரிதாகிய கருணை வள்ளலை அருட் கண்ணாரக் கண்டு கொள்வீர்கள். கண்டு, உள்ளூறக் கொண்டு வாழ்விலே அமைத்துக் கொண்டு சச்சிதானந்தமாய்த் திகழலாம். சிந்தித்திருப்பார்க்கு அபாயம் ஒரு நாளும் இல்லை என்பார்கள். எப்படியிருக்க முடியும்?

"வெறுஞ்சிந்தனை செய்து கொண்டிருந்தால் அருட்செயல் புரிய முடியாதுபோம். கடவுள், இடையறாது ஐந்தொழில் புரிந்து கொண்டேயிருப்பவராவார்," அவரை உளத்திற் கொண்டு மறவாது இருப்பதோடு, ஜீவ கருணைச் செயலும் புரிந்து கொண்டே இருப்பதுதான், உடல் உயிரோடு விளங்குவதற்கும் உணர்வில் கடவுட் சிந்தனை ஓங்குவதற்கும் உற்ற உபாயமாகும். ஆகையால், சித்தத்தில் செம்பொருட் சிந்தனை மாறாதிருக்க வேண்டும் என்றால் சுத்த சத்விசாரத்தால் அகநிலையிற் பிறழாதிருந்து கொண்டு, அருட்செயலில் ஈடுபட்டுவிட்டால் திருவருள் தடைபடாது அனகத்தே பெருகிக் கொண்டேயிருக்கும். அப்போதுதான் சிந்தித்து இருக்கவும், அபாயம் ஏதும் உண்டாகாது வாழ்ந்திடவும், இன்பிலே என்றென்றும் விளங்கிடவும் கூடும்.

சிவகதி என்றது அருள் அல்லது தயா உண்மையைக் கொண்டதேயாம். கடவுள் தயவே நமக்கு ஜீவ தயவாய் விளங்கி, சுத்த தயா இன்ப நிலைக்கு ஏற்றி வைக்கவுள்ளதாம். கதி என்றால் - வழி, புகலிடம், நிலை, துணை முதலியனவாகப் பொருள்படும். இவை யாவுமாய் இருப்பது கடவுள் தயவு ஒன்றே. ஆதலின் சிவகதியைத் தயா கதியாகக் கொள்ளுதல் பொருந்துவதே. அன்றியும், தயா இன்ப நிலைப் பேறே, எவரும் தயங்காது ஏற்கக் கூடிய ஒன்றாய் இருத்தலின், சைவ சமய மதம் குறிக்காத இச் சச்சிதானந்த தயவை ஏற்போமாக.

Koviloor Digital Library

ஞான சரியை - செய்யுள் : 16

நிந்தையிலார் நெஞ்சகத்தே
நிறைந்த பெரும்தகையை
நிலையனைத்தும் காட்டியருள்
நிலையளித்த குருவை

எந்தையையென் தனித்தாயை
என்னிருகண் மணியை
என்னுயிரை என்னுணர்வை
என்அறிவுள் அறிவை

சிந்தையிலே தனித்தினிக்கும்
தெள்ளமுதை அனைத்தும்
செய்யவல்ல தனித்தலைமைச்
சிவபதியை உலகீர்

முந்தைமல இருட்டொழிய
முன்னுமினோ கரண
முடுக்கொழித்துக் கடைமரண
நடுக்கொழித்து முயன்றே.

உரை : அன்பு முந்து சிந்தையே ஆலயங்கொள் ஆண்டவர், நிந்தையிலா நெஞ்சகத்தில் நிறைந்த பெருந்தகையே ஆவர். அவரே உண்மைக் குருவாய் உள்ளத்தவிசில் எழுந்தருளி உபதேசஞ்செய்து, கண்டுகொள்ள வேண்டியதை எல்லாம் காட்டி, மேனிலையில் கூட்டி வைக்கின்றார். அவரே எனக்கு உண்மைத் தந்தை ஆவார். அவரே எனக்கு ஒப்பற்ற தாயும் ஆவார். அவரே எனது இரண்டு கண்ணினுண் மணியாய் இருந்து, யாவையும் கண்டுகொள்ளச் செய்கின்றார். மேலும்,"அவரே எனது, உயிராய், அவ்வுயிரில் விளைகின்ற மெய்யுணர்வாய், அவ்வுணர்வால் பெறப்படுகின்ற அறிவாய்,

Koviloor Digital Library

அவ்வறிவுக்கறிவான அருள்ஒளியாய் இருக்கின்றார்". அவ்வருள் நிறையுணர்வை ஓர் சிந்தைக் கடலாக்கி, அதினின்று கடைந்தெடுக்கப்பட்ட தெள்ளமுதமாகவும் விளங்குகின்றார். அவ்வமுதம் ஒப்பற்ற அருட்சுவையை ஊட்டுகின்றது எனது சித்தத்திலே. அந்த அருட்ஜோதி வண்ண அமுதமயமான பதியே எல்லாம் செய்யவல்ல தனித்தலைமைச் சிவபதியாக, யான் கண்டு கொண்டுள்ளேன். சிவம் என்றாலே நின்மலமானதாம். அச்சிவபதியே சுத்த நிலையில், தன் அருளையே சூழக் கொண்டுள்ளார். அந்த அருள் உண்மை அபக்குவத்தில் விளங்குவதில்லை. மருளாக, இருளாக மாற்ற தோற்றத்தோடு காணப்படுகின்றதாம். மலபாசச் சார்புடைய பசுவாக தோற்றுகின்ற ஜீவன், உண்மையில் அருளொளி சூழ் சிவமே என்பது சுத்தநிலை அனுபவம்.

மருளாகிய மயக்க நிலையை விட்டு, அருள் முயற்சியில் இருங்கள். மனோகரணம் என்னும் இருண்ட ஒரு மூலையிலே முடுக்கப்பட்டு, முடங்கிக் கிடக்கின்றவர்களே, அருளை முன்னுங்கள் (கருதி எழுந்து முன் வாருங்கள்) அப்படி உள்விழித்து எழுதலாலே, கரண முடுக்கு ஒழியும், கேவலாதிகார மரணமும் நீங்கும். கேவலம் என்பது மறதி, அதற்கு எதிர்ச்சொல் சகலம் - நினைப்பு என்று பொருள்படும். அருட்ஜோதிபதி ஒன்றே உண்மையில் இருக்கின்றது என்பதை சுத்த சத்விசாரத்தால்தான் கண்டு கொள்ளமுடியும் என்று அறிந்து கொண்டுள்ளோம், இந்த உண்மையை மறத்தல் கேவலம். மறந்து, நாம் என்றும் பிறர் என்றும் உலகை நோக்குதல் சகலம். உண்மையை உள்ளபடி அறிந்து, அதனை மறவாது நினையாது நிற்றல் சுத்த நிலையாம். இந்நிலையே கேவலாதிகார மரணமற்ற நிலையாம். இந்நிலையை, முதலில் சத்விசாரத்தில் கண்டு

Koviloor Digital Library

நிற்க வேண்டும். இதுவே இராப்பகலற்ற, பிறப்பு இறப்பு அற்ற இடமாம். இதிலிருந்து கொண்டு அனக தயா நிறைவு பெறும் போது, தேகமும் சுத்த நிலை பெற்று மரணமில்லாப் பெருவாழ்வு சித்திப்பதாம். இதுவே சுத்த சன்மார்க்க சாத்தியானுபவமாம்.

அருட்குருவை அடைந்தால்தான் அருள்நிலை அனுபவம் ஆகிய இறவாப் பேரின்ப வாழ்வு சித்திக்கும். இந்த அருட்குருவை புறவுலகில் எங்கும் கண்டுகொள்ள முடியாதாம். குருவென்றாலே அறியாமையைப் போக்கி, அறிவு உண்மையைக் காட்டுகின்றவர் என்றே பொருள்படும். அப்படிச் செய்கின்றவர்கள் உலகில் பலராக இருக்கின்றார்கள் என்பது உலகியலார் கருத்து. அது ஓரளவு உண்மைதான். அந்த உலக குருக்களால் சில பல உண்மைகளை அறிந்து கொள்கின்றதும் மெய்தான். ஆதலால், அன்னவர்பால் அன்புப் பணிவுடனிருந்து அறிவு விளக்கம் பெறுதலும் நன்றேயாம். ஆனாலும், அவர்கள் ஓர் எல்லை வரைதான் பிறரை ஏற்றிவிட முடியும். அதற்கு மேல் விசார ஞானத்தால் அகவுலகில் அருட்ஜோதியாம் குருவைக் கண்டு கொள்வோமெனில் ஏறாத நிலைமிசை ஏறி, மரணமிலாப் பெருநிலையில் திகழலாம். இந்த அருட்ஜோதி குருவே எல்லோருக்கும் உண்மைக்குரு. என்றும் உடனிருந்து காண்பரியன எல்லாம் காட்டியும், பெறற்கரியன எல்லாம் பெறுவித்து விளங்கிடச் செய்வார். இவ்வண்ணம் பிற எந்தக் குருவால் செய்ய முடியும்? இந்த குருவையே ஒவ்வொருவரும் தம் சொந்த குருவாகக் கண்டு, அடைந்துவிட்டால், அவரே நிலையனைத்தும் காட்டி அருணிலை அளிப்பார். அந்நிலையே சுத்த சுகானந்த நித்திய பூரண நிலையாகும்.

Koviloor Digital Library

ஞான சரியை - செய்யுள் : 17

முயன்றுலகில் பயனடையா
மூடமத மனைத்தும்
முடுகிஅழிந் திடவுமொரு
மோசமும்இல் லாதே

இயன்றவொரு சன்மார்க்கம்
எங்குநிலை பெறவும்
எம்மிறைவன் எழுந்தருளல்
இதுதருணம் கண்டீர்

துயின்றுணர்ந்தே எழுந்தவர்போல்
இறந்தவர்கள் எல்லாம்
தோன்றஎழு கின்றதிது
தொடங்கிநிகழ்ந் திடுநீர்

பயின்றறிய விரைந்துவம்மின்
படியாத படிப்பைப்
படித்திடலாம் உணர்ந்திடலாம்
பற்றிடலாம் சுகமே.

உரை : மதம் என்பதன் உண்மைக் கருத்தை உள்ளவாறு தெரிந்து கொண்டால், எல்லோருக்கும் நல்லதாம். மதி என்றது - சந்திரன், அறிவு என இரு பொருள்படும். வானொளிர் சந்திர சக்தியால் உலகப் பொருள்களில், உயிர்களில் அமுத சத்துக்கள் விளைவு கொள்கின்றன. இந்த சத்துக்களே அகப்புற விளக்கத்திற்கும், இனவிருத்திகளுக்கும் உதவுகின்றனவாம். இவ்வாறாக, மனிதனில் இவை, மதமும் மதியுமாய் விளைந்து பெருகுகின்றனவாம். உடலில் விளை மதசத்து இனவிருத்திக்கும், உயிரில் விளை மதசத்து, மதி என்னும் அறிவு விளக்கம் செய்தற்கும் என்று அறிவோம். ஆகவே "ஆன்ம சத்தென்னும் மெய்யறிவுதான் உண்மை

Koviloor Digital Library

மதமாக உள்ளதாம்". ஆனால், அந்த மெய்யறிவு ஆன்ம அறிவாக மட்டும் இதுவரை இருந்து வந்ததால் அந்த ஆன்மக் காட்சியில் கண்ட பலப்பலவாகிய கற்பனா விளக்க மதங்கள், சமயங்கள் மலிந்துவிட்டன. ஆன்மாவின் உள்ளிருந்த அருட்பெரும் சக்தி வெளிப்படாது இருந்த காரணத்தால், மூடுண்டு பொய்மையே புறந்திகழ்ந்து கொண்டு இருந்ததால், அருள்விளக்கமாம் உண்மை மதம் வெளிப்படாதிருந்ததாம்.

பேரறிவாளர்களால், பெருந்தவ முயற்சிகளால் கண்டு உரைக்கப்பட்ட மதங்கள் யாவும் மூட மதங்களேயாம். அதாவது, கடவுள் உண்மை மூடுண்டு, மறைபட்டுக் கிடந்த கருத்துக் குவியல்களே, மூடமதக் கொள்கைகள் எனக் கூறப்படுகின்றன. அந்த மூட மதங்களால் உலகிற்கு மெய்ப்பயன் உண்டாகவில்லை. அவற்றைக் கொண்டு எவ்வளவோ பாடுபட்டும் முடிவில் பெரும் பயனின்றிக் கெடவே கண்டோம். பழையனவற்றை மூடமுண்டதாகக் கூறினதால், அவற்றை அவமதித்ததாகக் கொள்ளக் கூடாது. அந்தக் காலத்தில் கடவுளான்மா அணுத்துவமாய்த் தன் சக்தியைக் கை மண்ணளவு வெளியில் காட்டி, உலகளவை உள் மறைத்து வைத்துக் கொண்டிருந்தது. அங்ஙனம் வெளிப்பட்டிருந்த சிறிதளவு ஆன்ம சக்தியால் இயற்றப் பெற்ற அற்புதங்களும், மதங்களும் மன்பதையை ஓரளவு ஆட்கொண்டிருந்தன. அவற்றால் நேர்ந்துள்ள பயன், இன்றைய கலக்கம் நிறை உலக நிலையேயாம். இப்பொழுது ஆன்மா அணுத்துவ நிலையினின்று அருட்பூரணத்தால் மலர்ந்து அருளமுத சாரத்தை வழங்குகின்றதாம். இதுவே சுத்த சன்மார்க்கம் என்னும் உண்மை மதமாகி உலவாப் பேரின்பம் நல்க உள்ளதாம். ஆகவேதான், நம் பதி, அம்மூட மதங்கள் அனைத்தும் முடுகி அழிந்திட, விரைந்து ஒழிந்திட, சங்கற்பஞ்செய்து கொண்டுள்ளார். இத்தோடு, இயன்ற ஒரு

Koviloor Digital Library

சன்மார்க்கம், இயற்கை உண்மையாகவும், எவர்க்கும் பொருத்தமானதாகவும் இருக்கும், ஓர் ஒப்பற்ற சுத்த சன்மார்க்கத்தை எங்கும் தோன்றி நிலைபெறச் செய்யவேண்டி இப்பொழுதே இங்கு எழுந்தருளுகின்றார். இது அதற்கு உற்ற தருணமாக அமைந்துள்ளது.

"இவ்விடத்தில், இது முதலாக, இறந்தவர்கள் எழுப்பப் படுவார்கள். அதாவது, இதுகாறும் செயலறக் கிடந்த ஆன்மாக்கள் அருளொளியோடு அகவுலகில் முதலில் எழுப்பப்படுவார்கள்." தூக்கத்திலிருந்து எழுந்தவன், தனது கனவுலகை விட்டு நனவுலகத்திற்கு வந்ததும், முன்னது பொய் என்று கண்டு கொள்கின்றான்; ஜாக்கிர உலகில் நல்ல வாழ்வை அனுபவிக்கின்றான். இதே போல, "ஆன்ம விழிப்படைந்து, அகவுலகில் எழுந்தவன் மாயா உலக நிலை கடந்து, அருட்ஜோதிமயக் காட்சியோடு ஆனந்தச் சூழலில் திகழக் காண்கின்றான்." இந்நிலை வாழ்வு அகமிருந்து மலர்ந்து நுகரப்படுவதால், இத்தருணமே வந்து சேரக் கடவீர்கள். இந்த அருள்மதம் வெற்றுப் படிப்பாலும், பாடம் பண்ணி விரிவுரை செய்து விடுவதாலும், புறவழிபாட்டு முறைகளாலும் பயன் அளித்து விடாது. சத்விசாரத்தால் உள் உணர்ந்து தயா ஒழுக்கத்தோடு இருந்தால்தான் அகத்தே வெளிப்படும். இப்படிச் செய்திருத்தல்தான், "பயின்றறிதல்" என ஈண்டு குறிக்கப்படுகின்றதாம். இப்பயின்ற அறிவால்தான், படியாத படிப்பைப் படித்திடலாம்; கல்லாத கல்வியைக் கற்றிடலாம்; ஓதாதுணரலாம்; உணர்ந்து, சுகநிலைப் பேற்றையும் அடைந்திடலாம் என்று உறுதி கூறப்படுகின்றது.

சுகம் - வாழ்க்கையின் அனுபவப் பயனே, இதனைக் கற்றுப் பெறுதல் கூடாது. ஒரு பொருளின் சுவையை உண்டு காணல் போன்று, சுகத்தை வாழ்ந்து அனுபவிப்பதே

Koviloor Digital Library

முறையாகும்.

ஞான சரியை - செய்யுள் : 18

சுகமறியீர் துன்பமொன்றே
துணிந்தறிந்தீர் உலகீர்
சூதறிந்தீர் வாதறிந்தீர்
தூய்மையறிந் திலிரே

இகமறியீர் பரமறியீர்
என்னேநும் கருத்தீ(து)
என்புரிவீர் மரணம்வரில்
எங்குறுவீர் அந்தோ!

அகமறியீர் அனகமறிந்(து)
அழியாத ஞான
அமுதவடிவம் பெறலாம்
அடைந்திடுமின் ஈண்டே

முகமறியார் போலிருந்தீர்
என்னையறி யீரோ
முத்தரெலாம் போற்றுமருட்
சித்தர்மகன் நானே.

உரை : "உண்மை அறிந்து, உயர் ஒழுக்கம் பூண்டு, நல்ல வாழ்வில் தழைத்துப் பேரின்பமுற வேண்டியது ஒவ்வொருவருடைய கடமையாய் இருக்க, உண்மையைச் சிறிதும் அறிந்து கொள்ளாமல் துன்ப வாழ்வில் தொல்லைப்பட்டுக் கொண்டு கிடத்தல் ஏனோ!" என மிக உருக்கத்தோடு இரங்கிக் கூறுகின்றார் நம் வள்ளல் பெருமான். சுகம் - உண்மையான ஆன்ம சுகம், அதனினும் மிக்கதாய, ஒப்புயர்வற்ற அருட்பெருஞ்சுகம் என்பது யாது என்று

Koviloor Digital Library

தெரிந்து கொள்ளவும், தெரிந்து கொண்டு அடையவும் முயலுகின்றீர் களில்லை. துன்பம் மட்டும் பட்டுக் கொண்டே இருக்கத் துணிந்து விட்டிருக்கின்றீர்கள் போலும். அறியாமையில் விளைகின்ற அற்பசுகம் கூட துன்பமாகத்தான் முடிகின்றது உங்களுக்கு. அன்றியும் நீங்கள் நன்றாகச் சூதறிந்து கொண்டுள்ளீர்கள். அதாவது பொய், ஏமாற்று வித்தையில் தேர்ச்சி பெற்றிருக்கின்றீர்கள். வாதறிவீர்கள்; வம்பு வழக்காகிய வாதமும், வீண் விதண்டாவாதமும், கலைப்போட்டி விவாதமும் அறிந்திருக்கலாம். ஒரு வேளை யோக கர்மவாத சித்தியால் உலகை மயங்கச் செய்யவல்ல ஆற்றலைக் கூட பெற்றிருக்கலாம். இவற்றாலெல்லாம் கடவுளரின் தூய அருள் கிட்டுவதாய் இல்லையே! அன்புப் பெருக்கால், ஆன்ம நெகிழ்ச்சியால், "உள்ளத் தூய்மை உண்டானால் தான்" அருளொளி கிடைக்கும். ஆதலின் அந்தத் தூய்மையை அறிந்திலீரே என்று இரக்கப்படுகின்றார்.

மேலும் இகம் அறியீர் என்கின்றார். இகமாவது இவ்வுலக இயல்பும், வாழ்க்கை முறையும், இவைகளுக்கு ஆதரவாய் இருந்து உதவுகின்ற கடவுட் செயலும் கொண்டதாம். இவ்வளவையும் உள்ளபடி அறிந்து கொண்டால் இம்மையில் எம்மையும் கண்டு இன்புறலாகும். இம்மை உண்மையை அறியாதபோது, இக ரகசியத்தைத் தெரிந்து கொள்ளாதபோது, பரமாகிய மேல்நிலை உண்மையை, கடவுள் தத்துவ இரகசியத்தை எப்படிக் கண்டு கொள்ள முடியும்? ஆகையால் பரம் அறியீர் என்றும் குறிக்கின்றார். இங்ஙனம் அறியாமையிலே உழன்று கொண்டு கிடக்கும் உங்கள் கருத்துதான் யாதோ? உங்கள் எண்ணம் என்ன விபரீதமாய் இருக்கின்றது! என இரக்க வியப்பு எய்துகின்றார். பின்னர், மரணம் வரும் போது என்ன செய்யப் போகிறீர்கள்? பாதுகாப்புக்கு எங்கே போவீர்கள்? அந்தோ

Koviloor Digital Library

பரிதாபம்! என பரிதவிக்கின்றார். நீங்கள் மரணத்தை எதிர்த்துப் போராடினாலும் சரி, சும்மா இருந்தாலும் சரி, அல்லது இன்முகத்தோடு வரவேற்றாலும் சரி, நீங்கள் பெறப்போவது தோல்வியே, மரணமென்னும் எமதர்மனுக்கே வெற்றி உண்டாம். அப்படியானால் வேறு என்ன செய்வோம்? என்ன செய்ய வேண்டும்? எனக் கேட்பீர்களாயின் "நீங்கள் முதலில் அக உண்மையை அறிந்து கொள்ள வேண்டும்." அவ்வக உண்மைதான் யாதோவெனில், அது அருட்பெரும் கடவுள் ஆன்மாவாய் இருக்கின்றது. அந் நிலையில் அது நீங்களாகவே இருக்கின்றீர்கள்.

ஆகையால், நீங்கள் புறநிலைப் பற்றை, தேகப் பற்றை விட்டு விட்டு அகத்தில் அதுவாகிப் பொருந்தி வாழ்தல் வேண்டியுள்ளதாம். அப்படி வாழ்தலே அகமறிந்து அதிலிருந்து, அனகமுற வாழ்வதாகும். அப்படி வாழ்ந்தால், அகமிருக்கும் அருட்ஜோதியே, அருளமுதாய் நிரம்பிப் புறதேக நிலையையே அருள்வண்ணமாய் மாற்றி அமைத்து விடுவதாம். ஆகையால் நானிருக்கும் இவ்விடத்திற்கு வந்து சேருங்கள், நான் வேறு யாரோவென எண்ணிக் கொண்டு, தெரியாத மூன்றாம் மனிதன் போல நினைத்துக் கொண்டு இருந்துவிடாதீர்கள். அப்படித்தான் இருந்தீர்கள், இதுவரை. "நான் உங்களுள் நீங்களாயிருக்கின்றேன். முத்தர்களும் சித்தர்களும் போற்றிக் கொண்டுள்ள, அருட்பெருஞ்ஜோதி பதியோடு உடனாயிருக்கும் ஒருவனே நான். நான் எனது அருட்ஜோதித் தந்தையாரோடு ஒன்றி நிற்கின்றேன்" சுத்த சத்விசாரத்தாலே, உங்களில் என்னை, என் தயாஜோதித் தந்தையாருடன் கண்டு கொள்ளுங்கள். அந்தத் தயவினாலே உபசாந்த நிலை பெறுவீர்கள், இந்த நிலையில் மரணம் என்பதே இல்லையாகும். நித்தியானந்த வாழ்வே விளங்கும்.

Koviloor Digital Library

"பிண்டத்துயிர்கள் பொருந்தும் வகையும், பிண்டம் தன்னையே பிரியும் வகையும், பிரியா வகையும் தெரித்தாய் பின்னையே" என்று மெய்யருள் வியப்பு மொழி பகர்கின்றார், பிறிதோரிடத்தில். அதாவது, அகத்திலிருந்து, உயிர்ச்சக்தி காரியப்படும்போது புறத்தேகம் வந்து சூழ்கின்றதும், அவ்வுயிர்ச்சக்தி அகத்தே சென்று ஒடுங்கும்போது, தேகம் பிரிவதால் மரணமும் உண்டாகின்றதாம். திருவருளாலே அகநிலையுற்று, அவ்வருட் சக்தியையே அனகத்தில் விரித்து நிறைவுறச் செய்யப்படும்போது சூழுற்ற உடம்பும், சுத்த அருட்ஜோதி உருவாகி நிலைத்து விளங்க நேருகின்றதாம். இது தான் தேகம் நீங்கா வகையாம். ஆகையால், நீங்கள் எல்லாம் எங்கும் போய் அலைந்து கொண்டு இருக்காதீர்கள்; அவத்தைகள் பட்டு அழியாதீர்கள்; ஈண்டு இப்பொழுதே வந்து அடைமின்கள்.

ஞான சரியை - செய்யுள் : 19

நான்உரைக்கும் வார்த்தையெல்லாம்
நாயகன்தன் வார்த்தை
நம்புமினோ நமரங்காள்
நற்றருணம் இதுவே

வானுரைத்த மணிமன்றில்
நடம்புரிஎம் பெருமான்
வரவெதிர்கொண் டவனருளால்
வரங்களெலாம் பெறவே

தேனுரைக்கும் உளமினிக்க
எழுகின்றேன் நீவிர்
தெரிந்தடைந்தென் உடன்எழுமின்
சித்திபெற லாகும்

Koviloor Digital Library

ஏனுரைத்தே னிரக்கத்தால்
எடுத்துரைத்தேன் கண்டீர்
யானடையும் சுகத்தினை நீர்
தானடைதல் குறித்தே.

உரை : ஏதேதோ நான் அளந்தளந்து சொல்லிக் கொண்டுள்ளேன் என எண்ணாதீர்கள். நான் உரைக்கின்ற ஒவ்வொரு சொல்லும் எனது தனித் தலைவனுடையதே ஆகும். அவனே, எனக்குள் இருந்து முதலில் உணர்த்துகின்றதும், வெளிப்பட உரைக்கச் செய்கின்றதும் ஆக இருக்கின்றான். ஆகையால், கடவுளையும் அவரது அருட் பெருமையையும் நம்புகின்றீர்களாயின், அவரால் அவரே என்னுள் இருந்து இசைக்கின்ற இதனையும் நம்பக் கடவீர்கள். ஆன்ம உரிமை காரணமாக நாம் ஒவ்வொருவரும் பிணைக்கப்பட்டுள்ளோம். எல்லோரும் நம்மவர்களாக இருக்கின்றார்கள். ஆகையால், நம்புமினோ நமரங்காள் என உரிமையோடு விண்ணப்பித்துக் கொள்ளப்படுகின்றது. நம்மவர் என்ற சொல்லே, நமர் எனக் குறுகியது பின்னர், நமரங்காள் என விளிக்கப்பட்டதாம். நம்மவர்களே என்பதுதான் இதன் பொருள்.

இது ஒரு நல்ல சந்தர்ப்பம். எதற்கெனில்? நம் பெருமான் வரப் போகின்றார். நடனம் புரிந்து கொண்டிருக்கும் நம் பெருமான் வரப்போகின்றார். நவமணிகட்கும் மேலாம் அருட்ஜோதி மணிகள் பதித்து ஒளிருகின்ற மன்றினிடத்தே ஆனந்த நடனம் புரிந்து கொண்டிருக்கும், நம் பெருமான் வரப்போகின்றார். இப்படி எல்லாமான பெருமான் வரப் போகின்றதாக யார், எப்பொழுது சொன்னது என்றா கேட்கின்றீர்கள். ஆம், வான் உரைத்ததுதான். இது, புறத்தே வானொலி அல்லது ஆகாசவாணியிற் கேட்டதன்று. மனம் சுத்த நிலையுற்று, ஆன்மாகாசத்தின் கண்ணின்ற,

Koviloor Digital Library

நிற்கின்றபோது சத்திய வாக்கு என்னும், வானுரை மெய் மொழியாகக் கேட்கப்படுகின்றதாகும். ஆகையால், அவர் வரப்போகின்றது உண்மையேயாம். அவர் வரும்போது நாமும் எதிர்கொண்டு, சுத்த தயா நெகிழ்ச்சியோடு இருந்தால் வரங்கள் எல்லாம் பெறப் போவதும் உண்மையேயாம். வரவேற்று வரம் பெறற்கு உரிய தருணம் இதுவே என குறிக்கப்பட்டுள்ளது. **நாம் நம் பதிபால் பெற வேண்டிய வரம் என்னவென நினைக்கின்றீர்கள்?** அபக்குவ வசத்தால், அவா காரணத்தால், அது வேண்டும் இது வேண்டும் என்று, எதையாவது ஒன்று கிடக்க ஒன்றைக் கேட்டுவிடாதீர்கள். அந்த எதனாலும், நாம் பெற வேண்டிய பெரு நன்மையைப் பெற்று கொள்ள முடியாது. ஆகையால், **"நாம் பெற வேண்டியது; அருட் பூரணப் பரம்பொருளாகிய அவரே என உணர்ந்து கொண்டு அவரையே வரமாக, நமது வரன் (கணவன், பதி) ஆக வேண்டிப் பெற்றுக் கொள்ளவேண்டும்."** இந்த வரனைப் பெற்றுக் கொண்டால், மற்றெல்லாம் பெற்றவர்களாவோம். இந்தச் சமயத்தில் இந்த வரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு என்றே உங்களை அழைக்கின்றேன், இதனைப் புற அழைப்பிதழாகப் பார்த்துவிட்டு வைத்து விடாதீர்கள். புறத்தே இவ்வழைப்பை விடுத்துக் கொண்டே உள்ளத்திலே அருளின்பத் தேனின் இன்சுவையை அனுபவித்துக் கொண்டு உங்களை எல்லாம் வரவேற்க உவகையோடு எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருக்கின்றேன். அகத்தே விழித்து எழுந்து, தூக்கமும், ஏக்கமும் அற்ற சுகப்பெரு நிலையிலிருந்து கொண்டு, உங்களை வரவேற்கின்றேன். ஆகையால், நீங்களும் இவ்வுண்மையைத் தெரிந்து கொண்டு, உள் எழுந்து என்னோடு சேர்ந்து கொள்ளுங்கள். சித்திகளில் பெரிய சித்தியாம் மரணமிலாப் பேரின்ப சித்திப் பெருவாழ்வைப் பெறலாம்.

Koviloor Digital Library

எதற்காக இவ்வளவும் வெளிப்படையாக உரைத்து உரைத்து, உறுதி கூறிக் கொண்டே இருக்கின்றாய் என்று கேட்கின்றீர்களா? நல்லது, நான்வேறு என் செய்வேன், என்பதி தயாபெருஞ்ஜோதி ஆகிய தியாகேசன், என்னொடு இரண்டறக் கலந்துகொண்டு பேரின்பப் பெருநடனம் புரிகின்றார். அவர் பால் என்றும் நான் பெறுகின்ற இன்பம் நீங்களும் பெற்றுப் பெரு மகிழ்வுற வேண்டும் என்ற குற்றமற்ற பேராசை ஒன்றே காரணமாகக் கொண்டுதான் இவ்வளவையும் எடுத்தெடுத்து இயம்பி, உங்களை எல்லாம் இவ்வாறு அழைத்துக் கொண்டிருக்கின்றேன். இந்த என் செயலும், என் பதிச் செயலே எனத் தெளிந்து கொண்டு, ஈது அவருடைய அருளாணையாக ஏற்றுக் கொண்டு உடனே புறப்பட்டு அகம் சேர வாருங்கள். யான் அடையும் சுகத்தினை நீங்களும் அடைய வேண்டும் என்ற ஆவல் பற்றி இதனை எடுத்துக் கூறுகின்றேன், மீண்டும். என்றேனும், அந்த சுகப்பெருநிலை அடையத்தான் போகின்றீர்கள். எனினும், இத்தருணம் வசமாக, வாய்ப்பாக ஏற்பட்டுள்ளது. இதனை நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டியது அறிவுடையார் கடமையாகும். அது குறித்தே இப்பொழுது உங்களை அவசரப் படுத்துகின்றேன். காலத்தை வீணிற் கழித்து விட்டு, நல்ல சந்தர்ப்பத்தைக் கைவிட்டு விட்டு இன்னும் நெடுங்காலம் வரை ஏன் நீங்கள் இவ்வுலகிலே துன்பப்பட்டுக் கொண்டு கிடக்கவேண்டும்! வேண்டாம் அத்துன்ப நிலை. ஆகையால், நல்லின்ப நிலைபெற இப்பொழுதே வாருங்கள்.

Koviloor Digital Library

ஞான சரியை - செய்யுள் : 20

குறித்துரைக்கின் றேன்இதனைக்
கேண்மினிங்கே வம்மின்
கோணுமனக் குரங்காலே
நாணுகின்ற உலகீர்

வெறித்தஉம்மால் ஒருபயனும்
வேண்டுகிலே னெனது
மெய்யுரையைப் பொய்யுரையாய்
வேறுநினை யாதீர்

பொறித்தமதம் சமயமெலாம்
பொய்பொய்யே அவற்றில்
புகுதாதீர் சிவமொன்றே
பொருளெனக்கண் டறிமின்

செறித்திடுசிற் சபைநடத்தைத்
தெரிந்துதுதித் திடுமின்
சித்தியெல்லாம் இத்தினமே
சத்தியஞ்சேர்ந் திடுமே.

உரை : திட்டமாகத் தெளிவாக எடுத்துச் சொல்கின்றேன். பலப் பலவான வீண் கதைகளையும், வெற்று உரைகளையும், விளையாட்டு வேடிக்கை வீண் பேச்சுகளையும் விட்டு, குறிப்பாக அவசியமான, நற்பயனைத் தர வல்லதையே இங்கே எடுத்துக் கூறுகின்றேன். "இதனைக் கேளுங்கள், வேறு விஷயங்களில் மனத்தைச் செலுத்தாது, பலவற்றில் சிந்தனையைச் சிதறவிடாது ஒருமையோடு மிகக் கவனமாகக் கேளுங்கள். காதினால் கேட்டு உள்ளத்தில் பதித்துக் கொள்ளுங்கள். கேட்டு, உள் இருத்திக் கொண்டதை, அவ்விடத்தே புதையுண்டு மறைந்து போகாமல் விளைவு கொள்ள அடிக்கடி சிந்தித்துத்

Koviloor Digital Library

தழைத்தோங்கச் செய்யுங்கள்." "அதன் பயன் வெளிப்பட செயலில் கொண்டு வாருங்கள்". இவ்வளவும், **"கேண்மின் இங்கே வம்மின்"** என்றதில் அடங்கி நின்று விளங்குவதேயாம்.

ஐயா, உலகீரே, நான் உங்களிடத்தில் ஒன்றும் எதிர்பார்க்கவில்லை. எனக்காக பொருளோ, பிற உதவிகளோ, பயனோ ஒன்றும் நீங்கள் எனக்குத் தர வேண்டியதில்லை. நீங்கள் வெறித்த நிலையில் இருக்கின்றீர்கள். அதாவது, உண்மையறியாது, மயக்க நிலையில் இருக்கின்றீர்கள். கூனிக் கொண்டே குறும்புகள் பல செய்தலைகின்ற குரங்கு போன்ற மனத்தால், நீங்கள் எல்லாம் நாணித் தவறு செய்துகொண்டு அலைகின்றீர்கள்.

உங்கள் நன்மைக்காகவே என்னவெல்லாமோ சொல்கின்றேன் நான். ஆனால், எனது சொற்கள் எல்லாம் உண்மையானவை. ஆகையால், என் உரைகளைப் பொய் எனக் கருதிவிடாதீர்கள்; வேறு விதமாக அனர்த்தம் செய்து கொள்ளாதீர்கள். அருள் ஏகதேசத்தைக் கொண்டு கண்ட மதக் கொள்கைகளை எல்லாம், கையும் மெய்யும் வருந்த மிகப் பாடுபட்டு தீட்டி வைத்திருக்கின்றார்கள், ஆன்றோர்கள். ஆனால் அவைகள் யாவும் அருள் உண்மைஒளி கொண்டு சுயம் பிரகாசமாய்த் திகழ்கின்றவை அல்லவே. ஆகையால் அவைகள் பெரும் பயன் அளிக்காப் பொய், பொய், வெற்றுப் பொய்களேயாம். இதனால் அவற்றில் பற்றுவைத்து ஏதோ பயனுறலாம் எனக்கருதி விடாதீர்கள். பற்றத் தகுந்த மெய்ப் பொருள் 'சிவம்' ஒன்றே எனக்கண்டு கொள்ளுங்கள். எனது சிவம் சுத்த சிவம்; சமய மதங்களில் குறிக்கப்படுகின்ற சிவமன்று. **"இயற்கை உண்மையே வடிவாகியும், இயற்கை விளக்கமே உயிராகியும், இயற்கை இன்பமே பயனாகியும் என்றும்**

Koviloor Digital Library

இலங்கிக் கொண்டிருப்பதே எனது சிவமாம்.” இந்த ஒன்றான சிவத்தைக் கண்டு அறிந்து ஏற்றுக் கொள்ளுங்கள். அறிவால் அறிந்த அதனை ஏற்பது எங்ஙனமெனில், துதித்துப் பணிந்து ‘நாம்’ போய் அதுவாதலேயாம். நம்முடன் கலந்து பொருந்தி விளங்கும் பதியைச் சிற்றம்பலத்திலேதான், அருளால் கண்டு கொள்ளக் கூடியதாய் இருக்கின்றது. ஆதலால் அவ்விடத்தில் சென்றடைந்து துதிபாடி அருளடைதல் வேண்டும். அந்த அருள் கிடைக்கப்பெறுகின்ற நாள் என்றோ, அன்றே சித்திகளும் அடையலாம். இது சமயம், இத்தினம்தான் அவ்வருளைப் பெறவும் அதனால் சித்திகளை அடையவும் தக்க தினமாய்ச் சார்ந்துள்ளது. என்றோ எப்பொழுதோ ஒரு நாள், நாம் ஆண்டவர் அருளைப் பெறப்போகின்றோம் என்றும், அந்த அருளைக் கொண்டு பல்வேறு சித்திகளையும் எய்தி ஆனந்திக்கப் போகின்றோம் என்றும் நினைத்துக் கொண்டு, மந்தமாக இருந்து கொண்டு இந்நாளைக் கை நழுவ விட்டு விடாதீர்கள். உண்மையாக சத்தியமாக அருட்பெருஞ் சித்திகளைப் பெறற்குரிய தினம் இதுவாக அறிந்து அடையுங்கள்.

“பொறித்த மதம் சமயமெல்லாம் பொய் பொய்யே” என்று கூறியுள்ளது கண்டு உண்மை அறியாதவர்கள் மருளுகின்றார்கள். பழமை விரும்பிகள் பதறுகிறார்கள், மதத் தலைவர்கள் வெறுத்து வெகுண்டு நோக்குகின்றார்கள். அப்படியெல்லாம் இருத்தல் கூடாது. உண்மை அருளாணையை அறிந்து, நேரடியாக மேனிலைக்கு வரவேண்டும், ஒவ்வொருவரும். அப்படி இருளறையை விட்டுவிட்டு, அருளொளி வெளிக்கு வந்தால்தான் உண்மை எல்லாம் உள்ளவாறு விளங்கும். “சமயம் எல்லாம் பொய் பொய்யே” என்பதும் கண்டு கொள்ளலாகும். அருட்பெருநெறியே சற்சமயமாக விளங்கும். அதுவே உலகிற்கு இத்தருணம் வேண்டிய ஒன்றாகவும் அறிந்து

Koviloor Digital Library

கொள்ளப்படும். எல்லோரும் ஒருமித்து வாழற்கான, அருட்பெருஞ்சமயம் "சுத்த சன்மார்க்கமே" எனவும் கண்டு கொள்ளலாம். திருவருளே இதனைக் கொண்டு வந்திருக்கின்றது. பிறரால், எவ்விதத்தும் தடைசெய்யவோ மறுக்கவோ முடியாது. அப்படிச் செய்ய முயலுபவர்கள் திருவருட் செயலின் முன் படுதோல்வியுற்று ஒழிவார்கள்.

ஞான சரியை - செய்யுள் : 21

சேர்ந்திடவே ஒருப்படுமின்
சமரசசன் மார்க்கத்
திருநெறியே பெருநெறியாம்
சித்தியெலாம் பெறலாம்

ஓர்ந்திடுமின் உண்ணுதற்கும்
உறங்குதற்கும் உணர்ந்தீர்
உலகமெலாங் கண்டிடுமோர்
உளவைஅறிந் திலிரே

வார்ந்தகடல் உலகறிய
மரணமுண்டே அந்தோ
மரணமென்றால் சடமெனும்ஓர்
திரணமும்சம் மதியா

சார்ந்திடுமம் மரணத்தைத்
தடுத்திடலாம் கண்டீர்
தனித்திடுசிற் சபைநடத்தைத்
தரிசனம்செய் வீரே.

உரை : சமரச சன்மார்க்கம் என்னும் திருநெறி ஒன்றே, திருவருளால் வழங்கப்படுகின்ற அருட்பெரு நெறியாகும். மற்ற மத நெறிகளும் கூட திருவருளால் வழங்கப்பட்டவை

Koviloor Digital Library

தாமே என்று நினைக்கக் கூடும். ஆனால், உண்மையில் பெரும் மாறுபாடு இருக்கக் காண்போம். இந்தச் சமயம் வெளிப்பட்டுள்ள அருட்பெருநெறி பூரணத் திருவருளால், அருட்பெருஞ்ஜோதியினின்று நேரடியாகக் காரியப்படுவதை உணர்கின்றோம். இந்நெறியால், அகத்தே அருட்பெரும் பதியோடு ஒன்றி இருந்து கொண்டு அனக அருட் பெரும்வாழ்வு வாழக் கூடியதாய் உள்ளதாம். மற்ற நெறிகள் மனோ கரணத்திலிருந்து புறப்பட்டுப் புறத்தே விஷயாதிகளில் செலுத்துவதாயும், அகத்தே ஆன்மாவில் ஒடுங்குவதாயும் உள்ளனவாம். இவற்றில் நிலையான இன்ப வாழ்வு விளங்குவதில்லையாம். உண்மையான பதி வாழ்வில் அனுபவ பூர்வமாகத் திகழ முடிகின்றதில்லை. எனினும் எது ஒன்றும், அருள் ஏகதேசமின்றி விளங்குவதில்லை; தோன்றுவதில்லை ஆதலின், இப்புற நெறிகள் கூட பொய் மாயா நெறிகள் ஆயினும், அவ்வேகதேச அருளால்தான் தோற்றுவிக்கப் பட்டனவாம். அந்நெறிகள், மறக்கருணை காரணமாய் மக்களை பல வழிகளில் செலுத்தி யொறுத்தித் திருத்திப் பக்குவப் படுத்துவனவாம். இவற்றின் முடிவில், பக்குவம் உண்டாகும் போது இவையெல்லாம் மங்கியொழிய, அருட்பெரு நெறி திறக்கப்படுவதாம். எனவே, பழநெறிகள் பக்குவப்படுத்த வந்த அநித்திய, மாயா அல்லது பொய் நெறிகளே என்றும், அவை தம் காரியத்தை முடித்து விட்டு இது சமயம் மறைய வேண்டியனவே என்றும் அறிகின்றோம். ஆகையால், பொய்ந்நெறி போகவும், மெய்ந்நெறி வரவும் திருவருளே ஆணை செய்கின்றது இந்நாள்.

ஆன்மாவாகிய வித்து விளைந்து பயன்தரப் பழைய சமய மதங்கள் எல்லாம் எருவாக்கிப் போடப்படுகின்றன. இதன்மேல் "அருட்ஜோதியின் அமுத கிரணங்களால்", இதுகாறும் மண்டிக் கிடந்த ஆன்ம வித்திலிருந்து, அருள்முளை கிளம்பிச் செடியாகி, மரமாகி, பூத்துக் காய்த்து

Koviloor Digital Library

அருட்பெருஞ்ஜோதிக் கனியாம், ஆனந்த வாழ்வு வழங்கப் போகின்றதாகும். ஆகையால், இந்த அருட்பெருநெறியைத் தேர்ந்து, தெளிந்து கொள்ளுங்கள்.

ஓர்ந்திடுமின் - ஓர்மையினால், நுணுகி ஆராய்ந்து அறிந்து கொள்ளுங்கள். இதுவரை, உண்டு களித்திருப்பதிலும், உறங்கிக் காலம் கழித்திருப்பதிலும் வீண்போய்க் கொண்டே இருந்தீர்கள். பிரபஞ்ச இரகசியத்தை எல்லாம் கண்டிடும் ஓர் உளவை, ஓர் உபாயத்தை அறிந்து கொள்ளவில்லையே, நீங்கள். கடல் சூழ்ந்த இவ்வுலகில் முடிவான பயன் எது என்று கருதுகின்றீர்கள்? அது மரணம் ஒன்றே என்றுதான் அறிந்திருக்கின்றீர்கள். ஐயோ, அந்த மரணத்தை யார் தான் விரும்புவார்கள்! ஒருக்கால், அறியாமை, துன்பம் காரணமாக ஒரு சிலர் மரணத்தை வருந்தி அழைத்து மேற்கொள்ளலாம். அறிவும், இன்பமும் விளங்கும்போது, அந்நிலையில் இருக்க விரும்புவார்களே அல்லாது, இறந்து ஒழிய மனங்கொள்ளார். மரணமே தவிர்க்க முடியாத முடிவு எனக் கருதி மன நிம்மதியுடன், அம்மரண வாயிலில் நுழைகின்றவர்களும், எல்லாம் இழந்து போக நேருகின்றதே, இனி என்னவெல்லாம் வந்து சூழுமோ என்று வேதனைப் பட்டுக்கொண்டே செல்லுகின்றார்கள்.

உண்மையில் ஆன்மாவுக்கு பிறப்பு இறப்பு இல்லை. அப்படிப்பட்ட ஆன்மா, இந்த தேகத்தில் வந்து தோன்றி, இப்பொழுது ஜீவித்துக் கொண்டிருக்கின்றது. இந்நிலையில் தன் இயல் உண்மையாகிய நித்திய இருப்பையும் உணர்ந்திருக்கின்றது. இந்த நித்தியானுபவம் விளங்க இத்தேகமும் உடனிருக்க வேண்டும் எனவும் அறிந்து கொள்ளப்பட்டுள்ளது. "இதனால், எந்த ஆன்மாவும், தான் பெற்றுள்ள தேகத்தை இழக்கச் சிறிதும் சம்மதிக்காது என அறிய வேண்டும். சம்மதித்தோ, சம்மதியாமலோ இறப்பது

Koviloor Digital Library

அறியாமையே." "சார்ந்திடும் அம்மரணத்தைத் தடுத்திடலாம், கண்டீர்" என்கின்றார். ஆன்மாவுக்கு தேக நீக்கம் உண்டாவதே மரணம். அந்த மரணத்தால், உடலில் நிரம்பி இருந்த உயிர்ச்சக்தி ஆன்மாவில் ஒடுங்கிவிடுகின்றது. ஒடுங்கின உயிர் அடுத்த பிறப்புருவம் ஏற்கின்ற சமயம் துடித்தெழுந்து சூழ்ந்து வளர்கின்றது. "உயிர் உடம்போடு இருக்கும் ஆன்மாவில், உள்ளிருந்து அருட்சக்தி வெளிப்பட்டு, தேகத்தில் நிறைகின்ற போது அத்தேகமே அருட்ஜோதி வண்ணமாக மாறுகின்றதாம்." இப்படி மாறிவிட்டால் தான், பின்னர் அத் தேகம் ஆன்மாவை நீங்குவதில்லை. அது ஆன்மாவின் பகுதியாகவே ஆகி நிலவுகின்றதாம். இது மரணமில்லாப் பெரு வாழ்வாம். இவ்வாழ்வு பெறத் தனித்திலங்கும் சிற்சபையையும், அதிலிருந்து அருட்பெருநடனம் புரிகின்ற ஆண்டவரையும் காண வாரீர். கண்டு அருளாலே கலந்து கொண்டால் மரணமில்லாப் பேரின்ப வாழ்வு ஏற்பட்டுவிடும். ஆகையால், இங்கு வந்து சேர்ந்திட ஒருப்படுங்கள்; சம்மதப்படுங்கள்; திருவருளும் பாலிக்கப்படும்.

ஞான சரியை - செய்யுள் : 22

செய்தாலும் தீமையெலாம்
பொறுத்தருள்வான் பொதுவில்
திருநடஞ்செய் பெருங்கருணைத்
திறத்தானங் கவனை

மெய்தாவ நினைத்திடுக
சமரசசன் மார்க்கம்
மேவுகவென் றுரைக்கின்றேன்
மேதியினீர் எனைத்தான்

Koviloor Digital Library

வைதாலும் வைதிடுமின்
வாழ்த்தெனக்கொண் டிடுவேன்
மனங்கோணேன் மானமெலாம்
போனவழி விடுத்தேன்

பொய்தானோர் சிறிதெனினும்
புகலேன்சத் தியமே
புகல்கின்றேன் நீவிரெலாம்
புனிதமுறும் பொருட்டே.

உரை : "மேதினியீர் எனது உரையைக் கேட்டு சுத்த சன்மார்க்கத்திற்கு வந்து சேருங்கள்" என்கின்றார். உலகத்தவரை 'மேதினியீர்' என்றதன் காரணப் பொருத்தம் நோக்குவாம். மேதம் என்றால் அறிவுடையவர்கள் என்றதாகக் கொள்ளலாம். கொழுப்புடைய கொழுத்தவர்களாகவும் கொள்ளலாம். அன்றியும், மேதி என்றால் எருமை எனப் பொருள்படலால், அவ்வெருமைத் தன்மைகளாகிய மந்தம், தடிப்பு, மூர்க்கம், சோம்பல் முதலிய குணங்கொண்டு, ஜெக மாயைச் சேற்றில் கிடக்கும் அபக்குவிகளே என அழைத்து பக்குவப்படுத்தற்கேயாம் எனவும், கொள்ளலாம்.

எனது பதி இருக்கின்றாரே அவர், என்ன தீமை செய்திட்ட போதிலும் பொறுத்துக் கொள்ளுவார். அது அவரது பெருங்கருணைத் திறனாகும். அக் கருணையோடுதான் அருட் பொதுவில் திருநடனம் புரிந்து கொண்டே இருக்கின்றார். நீங்கள் அவரை மெய்தாவ நினைத்திடல் வேண்டும். அதாவது, சத்தியமாக நினைத்திடல் வேண்டும். மெய்யாகிய புறத் தேகநிலை கடந்து, தேகப் பற்றொழிந்து, பொதுவிடத்தே நினைவு கூற வேண்டும். அவ்விடத்தே சமரச சன்மார்க்கம் அடைவீர்கள். சரீரப் பற்றை விட்டு அம்பலத்திற்கு வாருங்கள் என்று உங்களை

Koviloor Digital Library

அழைக்கின்றதால், நீங்கள் என் மீது வெறுப்பு கொண்டு, வைவதாயிடினும் சரி, நான் லட்சியம் பண்ணமாட்டேன். கவலைப்படவும் மாட்டேன். உங்கள் வசைகளைக் கூட வாழ்த்துகளாகவே கொண்டிடுவேன். கொஞ்சமும் மனம் வாட்டமடைய மாட்டேன். வசைக்கு ஆளானால் மானம் போய் விடுமே என்ற அச்சம் கொள்ளவில்லை நான். மானம் என்பது புறத் தேகப் பற்றினால் உண்டான தன்மதிப்பு, தேகப்பற்று ஒழித்து, ஆன்ம நிலையிலிருந்து கொண்டு தயா உரை பகரும் எனக்குத் "தயவு" ஒன்றே அபிமானமாய் உள்ளது. உலகர் கூறும் அவமானம் ஏதும் எனக்கு ஒரு பொருட்டாக இல்லை. ஆகையால், மானம் எப்படி எங்கு வேண்டுமானாலும் போகட்டுமே. நான் அருட்ஜோதிமய விமானத்தில் ஏறி, எந்த மானமும் சாரமுடியாத மேனிலைக் கண்ணுற்று வாழ்கின்றேன். அங்கு தேவர்களும், மூவர்களும், சித்தர்களும், முத்தர்களும் என்னையே போற்றிக் கொள்கின்றார்கள். இங்கு வந்து பாருங்கள். என் மொழியில் சிறிதளவு பொய்யும் கிடையாது. சத்திய ஜோதியே நிறைந்திலங்கக் காண்பீர்கள்.

எதற்காக உண்மையே உரைக்கின்றேன் எனில், நீங்கள் எல்லோரும் புனிதம் உறும் பொருட்டேயாம். நீங்கள் எல்லோரும் அறியாமையினால் தாழ்ந்த கீழ் நிலையில் இருந்து கொண்டு பலவிதமான கஷ்ட நஷ்டத்திற்கு ஆளாகித் துன்பப்பட்டுக் கொண்டு இருக்கின்றீர்கள். அச்சோ! உங்களுக்கு உண்மை ஒன்றும் தெரியவில்லை. தெரிந்து கொள்ளாமல்தானே இப்படித் துன்பப் பட்டுக் கொண்டிருக்கின்றீர்கள் என்று எண்ணி, எண்ணி, உங்களுக்காக ஏங்குகின்றேன். இறைவனிடத்திலும் வேண்டிக் கொண்டிருக்கின்றேன். நீங்கள் யாவரும் புனிதமுற வேண்டும்; நன்மை பெற வேண்டும்; நல்லின்ப வாழ்வு அடைய வேண்டும் என்பனவே என்னுடைய

Koviloor Digital Library

கோரிக்கைகளாம்.

மானம் இழந்து உயிர் வாழல் கூடாது என்பது பழமொழி.

"மயிர்நீப்பின் வாழாக் கவரிமா வன்னார்
உயிர்நீப்பர் மானம் வரின்"

என்று திருக்குறளும் மேற்கோள் காட்டப்பெறும். இது உலகியற் புறநிலைக்கே ஒவ்வும். உடற் பற்றறாத உலகிகட்கு, உயிரின் (ஆன்மாவின்) கடவுட் சார்பு காணாத மானிடர்க்கு, உயிரைவிட இந்த மானம் பெரிதாகப்படுகின்றது. உயிர் விளங்கும் இவ்வுடல் வாழ்வில், அருள்அனுபவம் பெற வேண்டியதுதான் முக்கியமாக உள்ளது. மற்ற மாயா அனுபவங்களில் மயங்கிடுதல் சரியன்றாம்.

"ஊன் உடம்பின் மாயா அனுபவமே, மானம்" ஆக உள்ளதால், இந்த மானத்தை மதித்துக் கொள்ளல் ஏனோ? அருள்வாழ்வு வாழ்கின்றவர்கள் சுத்த தயவு அடிப்படையில் எதையும் புரிவார்கள். அவற்றில் ஓர் ஒரு காரியம் உலகரின் பழிப்புக்கு உரியதாகத் தோன்றலாம். ஆனால் உண்மையில் அப்படி இருக்காது, கடவுட் சம்மதமாகவே இருக்கும். மானம் பெரிதென மதித்து மாய்வதால், உயிரே போய்விடும் போது, மானம் என்ன ஆகின்றதோ! உயிரைக் காப்பாற்றி வைத்திருந்தால், கடவுள் அருள்ஒளியை அதில் விளங்கச் செய்யப்பெறலாம். மானம் இழந்தவர்களையும், அதனினும் பெரிய குற்றம் புரிந்தவர்களையும் கூட நம் பெருங்கருணை வள்ளல், பொறுத்து மன்னித்து திருவருள் பாலிக்கவென்றே அம்பலத்தே திருநடனம் புரிந்து கொண்டு வரவேற்கின்றார். ஆதலினால் தான் நமது அண்ணலார் "மானமெலாம் போன வழி விடுத்தேன், எனைத்தான் வைதாலும் வைதிடுமின்", மனத்திருப்தியோடு எல்லாம் நல்வாழ்த்தாகக் கொள்ளுகின்றேன் என்கின்றார். உலகத்தில் ஒருவன்

Koviloor Digital Library

மானியாய் வாழ்வதோடு, தயா ஞானியாய் வாழ்வதே திருவருள் ஆணையாகக் கொள்ளல் வேண்டும். இதனால் ஒருவன் மானத்தை விட்டு ஒழுகுதல் வேண்டுமென்பதல்ல, திருவுள்ளம். சுத்த சன்மார்க்கத்தில் ஒழுகினால், மானம் அழிய வேண்டிய சூழ்நிலையும் உண்டாகாது; உயிருக்கும் அழிவு உண்டாகாது.

ஞான சரியை - செய்யுள் : 23

பொருட்டலனும் போகமெலாம்
பொய்யாமிங் கிதுநான்
புகலுவதென் நாடொறுநும்
புந்தியிற்கண் டதுவே

மருட்டுலகீர் இருட்டுலகில்
மடிவதழ கலவே
மரணமிலாப் பெருவாழ்வில்
வாழவம்மின் இங்கே

பொருட்டிறம்சேர் சுத்தசிவ
சன்மார்க்க நிலையில்
பொருந்துமின்சிற் சபையமுதம்
அருந்துமின்அன் புடனே

அருட்டிறம்சேர்ந் தெண்ணியவா(று)
ஆடுமினோ நும்மை
அடுப்பவரே அன்றிநின்று
தடுப்பவர்மற் றிலையே.

உரை : இந்தப் பெரிய உலகில், இயற்கைப் பொருள்களும், சக்திகளும் எத்தனை எத்தனை வழங்கப்பட்டுள்ளீர்கள். அவற்றோடு செயற்கை முறையால், இயந்திர தந்திர

Koviloor Digital Library

சகாயங்களோடு எவ்வளவு போகப் பொருட்களை ஆக்கிக் கொண்டுள்ளீர்கள். இவைகளாலெல்லாம் துய்க்கப்படுகின்ற சுகபோக வாழ்வு பொய்த்துப் போவது தானே! இந்த உண்மை நான் சொல்லித்தானா நீங்கள் தெரிந்து கொள்ளுவது! நீங்களே உங்களுடைய தெளிந்த மனத்தில் கண்டு கொண்டு இருக்கின்றீர்கள். கண்டுகொண்ட பின்னரும் ஏனோ நீங்கள் புலபோகத்தில் இச்சையறாது உழல்கின்றீர்களோ தெரியவில்லை!

அறிவுத் தெளிவில்லாத மருள் நிலையில் வாழ்ந்துவிட்டு முடிவில் அறிவு விளக்கமும், உயிர் விளக்கமும் முற்றும் மறைந்துபட்டு, இருள் உறுகின்ற மரணநிலை அடைவது அழகல்லவே. இதனால் "மரணமில்லாப் பெருவாழ்வில் வாழ்வதுவே அழகு" என்பது குறிப்பு. அந்த நித்திய வாழ்வு வாழ்வதற்கு நீங்கள் இங்கே வந்து சேருங்கள். இந்த இடத்தில் சுத்தசிவ சன்மார்க்கம் வெளிப்பட்டு விளங்குகின்றது. அந்த மார்க்கம், பொருள் திறம் சேர்ந்த ஒன்றாகும். அதாவது, மெய்ப்பொருளின் உண்மைச் சக்தி விளக்கம் பெற்றுள்ளதாகும். அருட்ஜோதி நெறியே, சுத்த சிவ சன்மார்க்கமாய் உள்ளதாம். இம்மார்க்கத்தினால் இவ்விடம் வந்து இந்தச் சிற்சபையை சார்ந்துவிடுங்கள். இந்த சிற்சபையில் அன்பர்கட்கே மிகத் தித்திக்கும் அமுதம் நிரம்பியுள்ளது. நீங்களும் இங்குற்று அன்பால் உருகுவீர்களாயின், அச்சிற்சபை அமுதம் அருந்தியவர்களாவீர்கள். அவ்வமுது உண்டு அம்பல வாழ்வு வாழ வாழ, அன்பு முதிர்ந்து அருட்பெருஞ்சக்தியாகத் தழைக்கும். அவ்வருட் பெருஞ்சக்தியால் தான், திருவுளச் சம்மதம் போல் நீங்களும் இவ்வுலகில் ஆடிடலாம். அப்படி ஆடுகின்ற போது எவரும் குறுக்கிட்டு தடை செய்யவே மாட்டார்கள். எல்லோரும் வந்து வந்து சேர்ந்து கொள்வார்கள். சூழ வருகின்றவர்கள், அவர்களுக்கு

Koviloor Digital Library

தெரிந்தோ தெரியாமலோ கூட உதவுகின்றவர்களே ஆவார்கள்.

"அருட்டிறஞ்சேர்ந்து எண்ணியவாறு ஆடுதல்" - "உலக அரங்கில் வாழ்க்கை நாடகம் ஆட வந்துள்ளவர்களே ஒவ்வொருவருமாவர். ஆகையால், அருள்உண்மை அறிந்து, அகம் அடைந்து, அவ்வருட் சக்தியே அனகமுற்று விளங்க, இவ்வுலகில் வாழ்க்கை நடத்துதல் வேண்டும். இந்த வாழ்வுதானே ஆடுதலாகப் புனைந்து கூறப்பட்டதாம்." அன்றியும் ஆடுதல், நடனம் ஆடுதலைக் குறிப்பதாம். நம் அருட்பெருஞ்ஜோதி நடனபதி, இயற்கை உண்மை வடிவோடு இயற்கை விளக்கம் செய்துகொண்டு, இயற்கை இன்பத்தை வழங்குகின்றதே, ஆண்டவர் நடனமாகக் குறிக்கப்படுகின்றதாம்.

"அந்த அருட்பதி நடனச் செய்கையால் உயிர்கள் எல்லாம் வாழ்கின்றன". இவ்வுண்மையை ஓர்ந்து, அந்தப் பதி அருளைச் சார்ந்து கொள்ளும் போது, அப்படிக் கலந்து கொண்டவனும், சூழுலகில் அருளின்பம் தழைப்பிக்க தயவுத் திருப்பணியே புரிகின்றவனாவான். அப்பணிச் செயலே அவனது ஆட்டமாகக் குறிக்கப்படும். அவ்வாட்டத்திற்கு, திருவருளே அகத்தும் புறத்தும் இருந்து உதவுகின்றதாம். புறத்தே சூழவருகின்றவர்களின் உள்ளத்திருந்தும் உதவுகின்றவர் நம் பதியே. ஆதலின், அவ் ஆட்டத்திற்குத் தடை ஏதும் உண்டாகாது எனத் தெளிந்து கொள்ளலாம். அருட்டிறம் சேர்ந்தாடுவதால் அமுதானந்த மயமாய் விளங்கலாம்.

Koviloor Digital Library

ஞான சரியை - செய்யுள் : 24

மற்றறிவோ மெனச்சிறிது
தாழ்ந்திருப்பீ ரானால்
மரணமெனும் பெரும்பாவி
வந்திடுமே அந்தோ

சற்றுமதை நும்மாலே
தடுக்கமுடி யாதே
சமரசசன் மார்க்கசங்கத்
தவர்களல்லா(து) அதனை

எற்றிநின்று தடுக்கவல்லார்
எவ்வுலகில் எவரும்
இல்லைகண்டீர் சத்தியம் ஈ(து)
என்மொழிகொண் டுலகீர்

பற்றியபற் றனைத்தினையும்
பற்றறவிட் டருளம்
பலப்பற்றே பற்றுமினோ
என்றுமிற வீரே.

உரை : இப்பொழுது கிடைத்துள்ள நல்ல சந்தர்ப்பம் அருளடைந்து உய்வு பெறற்கு, உரிய ஒன்றாகும். இதனை அசட்டையாக விட்டுவிடக்கூடாது. பார்க்கலாம்; சற்று பொறுப்போம்; என்ன அவசரம் என்று காலத்தை வீண்போக்கிக் கொண்டிருக்கக் கூடாது. எல்லாம் தெரிந்து கொண்டுதான் இருக்கின்றோம். நேரமும் காலமும், சூழ்நிலையும், சற்று பொருந்தி வரும்போது இந்த சன்மார்க்க விஷயத்தைப் பார்த்துக் கொண்டால் போகிறது, என்றெல்லாம் தாமதித்துக் கொண்டிருத்தல் கூடாது. அப்படிக் கொஞ்சம் கால விரயஞ்செய்து கொண்டே

Koviloor Digital Library

இருப்பீர்களானால், முன் அறிவிப்பு ஏதுமில்லாமல் எந்த ஒரு நொடியிலும், மரணம் என்னும் பெரும்பாவி வந்து விடும்! அப்படி எதிர்பார்த்திராத ஒரு சந்தர்ப்பத்திலே அம்மரணம் நெருங்கிவிட்டால், அப்பொழுது உங்களால் ஒன்றும் செய்யமுடியாது. பயமும், கலக்கமும், அசக்தமும் வந்து முடக்கி ஒடுக்கி விடும். அதனை உங்களால் சிறிதும் தடுத்து நிறுத்தும் அருள் ஆற்றல் படைத்தவர்கள் எவரேனும் உண்டெனில், சன்மார்க்க சங்கத்தைச் சார்ந்த சுத்த சன்மார்க்கிகளே ஆவார்கள் அவர்கள்.

சுத்த சன்மார்க்கி ஒருவனே, அனக அருள் அடைவால், அகவுண்மை இயல்பைப் புறவடிவில் ஏற்றுக் கொண்டு, அருள் திருமேனியோடு திகழ்வான். ஆதலின் அவன் ஒருவனே மரணத்தை எற்றி நின்று தடுத்து ஒழித்து விடுகின்றான். இந்தச் சன்மார்க்கியே அல்லாது, இங்ஙனம் இறப்பை ஒழித்து இயலின்ப உருவொடு விளங்கவல்லவர்கள் எவரும், எவ்வுலகத்தும் இல்லை என்று அறிமின்கள். அது எப்படி? எவரும் எந்த உலகத்தும் மரணத்தை வென்று வாழ்பவர்கள் இல்லை என்று அவ்வளவு நிச்சயமாக கூறுகின்றாய், என்றா சந்தேகிக்கின்றீர்கள்? சந்தேகப்பட வேண்டியதில்லை. எவ்வுலகத்து எவ்வுயிராயும், எக்காலத்தும் இருக்கின்றவர் நமது அருட்பெருஞ்ஜோதி பதி ஒருவரேயாவார். திருவருளாலே இவ்வுண்மையை உணர்த்தப்பட்டுள்ளோம், இது சமயம். ஆகையால், அந்த ஒருவராகிய நம் அகமுடையான் தானே, நம் ஒவ்வொருவராயும் இருக்கின்றார் என்பது உண்மையாம். அந்த அகமிருக்கும் ஒருவரே அனக அனுபவத்தில் விளங்குவதுதான் சுத்த சன்மார்க்க நிலையாகும். ஆகையால், சுத்த சன்மார்க்கியும், அனக பதியும் ஒன்றேயாம். இந்த சன்மார்க்கிகள் உலகில் பலராக விளங்கினாலும் கடவுள்மய அனுபவத்தில் ஒன்றேயாம். எனவே, இச் சன்மார்க்கி

Koviloor Digital Library

ஒருவனே, அனக கனக வடிவொடு வாழ்பவன் ஆகின்றான். மரணத்தையே மரணமடையச் செய்தவனாகின்றான். இதனாலே தான், இந்தச் சுத்த சன்மார்க்கியைத் தவிர (அனக அருட்ஜோதிபதியைத் தவிர) வேறு எவரும், எவ்வுலகத்தும், எக்காலத்தும் இல்லை எனத் தீர்மானமாக கூறிவிட முடிகின்றதாம். இதனால் இக்கூற்று முக்காலும் முழு உண்மை, சத்தியம் என்று உறுதிதொனிக்கக் கூறப்பட்டுள்ளதாகும்.

இந்தச் சத்திய வாசகத்தைப் பற்றுக்கோடாகக் கொண்டு, இவ்வுலகில் அருளம்பலப் பற்று ஒன்றினையே திடமாகப் பற்றிக் கொள்ள வேண்டும். அப்படித் தீவிரமாகப் பற்றிக் கொள்ள வேண்டுமானால், மற்றெல்லாப் பற்றுகளையும் அற விட்டுவிடல் வேண்டும். பிறவற்றில் வைத்துக் கொண்டுள்ள, தடையான பற்றுகளை எல்லாம் அறுத்துவிட வேண்டுவது அவசியம். சமய மதப் பற்றுகள், கொள்கைப் பற்றுகள், தேசப் பற்று, நாட்டுப்பற்று, இனப்பற்று முதலியனவும், மூவாசைப் பற்றும் முடிவில் தேகப்பற்றும் ஒழிக்கப்பட வேண்டும். இறுதியில் கூறிய "தேகப்பற்றே எல்லாவற்றிற்கும் ஆதாரமாய் இருக்கின்றதால் அதனையே மிக முக்கியமாக முதலிலேயே களைந்திட வேண்டும்." இவ்வுடற் பற்று நீங்கியவிடத்து மற்றெல்லாப் பற்றுகளும் தாமே ஒடுங்கிப்போம். தேகப் பற்றில்லாது வாழ வேண்டுமேயானால், அருள் அம்பலவன் பற்றையே முழுத் துணையாகக் கொண்டாக வேண்டும். இந்தக் கடவுட் பற்று ஏற்பட்டுவிட்டால் மற்றவைகளிடத்து இருந்த பற்றுகள் தாமே நீங்குவதோடு, வேண்டுதல் வேண்டாமை அற்ற சமநிலையும் உண்டாகிவிடும். அப்போது அருளம்பலத்தான் அருளாணை ஒன்றே காரணமாயிருந்து, உலகிடை வாழ வைப்பதாம். இவ்வருளம்பலவாணர்கள், உடற்பற்றற்று உள்ளிருந்து கொண்டு, உலக காரியங்களை நடத்துகின்றார்கள். தயவுச் செயல் புரியவேண்டும் என்ற காரணத்தால் புறப்பற்று அறுப்பதில்லை. அவர்கள். அது

Koviloor Digital Library

கடவுள் அருட்செயலாகக் காரியப்படுகின்றதால், அருளம்பலத்தில் இருந்து புரிகின்றவர்கள் பந்தமுறுவதில்லை. அதற்குப் பதிலாக அருட்பேராற்றல் கொண்டு அனகவாழ்வில் ஓங்குகின்றார்கள். ஆகவே, இவ்வம்பலப்பற்று ஒன்றே அவசியம் மேற்கொள்ள வேண்டியது நம் கடமையாகும்.

ஞான சரியை - செய்யுள் : 25

இறந்தவரை எடுத்திடும்போ(து)
அரற்றுகின்றீர் உலகீர்
இறவாத பெருவரம்நீர்
ஏனடைய மாட்டீர்

மறந்திருந்தீர் பிணிமூப்பில்
சம்மதமோ நுமக்கு
மறந்தும்இதை நினைக்கில்நல்லோர்
மனம்நடுங்கும் கண்டீர்

சிறந்திடுசன் மார்க்கமொன்றே
பிணிமூப்பு மரணம்
சேராமல் தவிர்த்திடும்காண்
தெரிந்துவம்மின் இங்கே

பிறந்தபிறப்(பு) இதிற்றானே
நித்தியமெய் வாழ்வு
பெற்றிடலாம் பேரின்பம்
உற்றிடலாம் விரைந்தே.

உரை : உங்களுக்கு மிக நெருங்கிய உறவினர்கள், நண்பர்கள் முதலியவர்கள் மரணமடைந்து விடுகின்றபோது, அளவுகடந்த துக்கம் ஏற்பட்டு, அடக்க முடியாது அழுகை

Koviloor Digital Library

வெளிப்பட அலறுகின்றீர்கள். இவற்றால் எல்லாம், அந்த இறந்தவர்கள் மீண்டும் உயிர்பெற்று எழுந்திடமாட்டார்கள் என்பது உங்களுக்கு தெரிந்துதான் இருக்கின்றது. இன்னும் சற்று உண்மை அறிந்தவர்களாயின், நித்திய ஆன்மாவோடும், அநித்திய தேகத்தோடும் கூடியிருந்தவர் உடலை விட்டு கடந்து (இறந்து) விட்டார் என்றும் அப்பிரிவு நிலையே பெருநஷ்டம் என்றும் உணர்ந்து வருந்துவீர்கள். மற்றும் சிலரோ உண்மை அறியாது, இறந்தவர் தெய்வநிலை எய்திவிட்டார் என்று நினைத்து சமாதானம் அடைந்து தம் வருத்தத்தை மாற்றிக் கொள்கின்றார்கள். மற்றுஞ்சில மேதைகள், இறப்பைப் பேரிழப்பு (பெரிய நஷ்டம்) எனக் கொள்ளாது, இறந்தவருடைய தேகம் அன்றும் இருந்தது, இன்றும் இருக்கிறது. ஆன்மாவையே அன்றும் காணவில்லை, இன்றும் காண்கின்றீர்கள் இல்லை, அப்படி இருக்க எதற்காக அழுது அரற்றுகிறீர்கள் அந்தோ! என இரக்கப்பட்டு சமாதானம் கூறுகின்றார்கள். இப்படியெல்லாம், பலகாலும் கண்டும் கேட்டும் கவலைப்பட்டு பின்னர் மறந்தும் விடுகின்றீர்கள். இதுதான் உங்கள் சுபாவமாகி விட்டிருக்கின்றது. அருட்பெரும்பதியின் உண்மையை அறிந்து கொள்வீர்களாயின், அவர்பால் இறவா வரம் பெறலாம். இறவா வரம் பெற்று, இன்போடு வாழ வேண்டும் என்பதுவே திருவருளாணையாகவும் இருக்கின்றது.

கடவுளுண்மையையும், அவரது ஆணையையும் அறியாமல் இருந்ததுபோக, அறிந்து கொண்ட பின்னும் மறந்து விட்டுத் துன்பப்பட்டுக் கொண்டு கிடப்பது ஏனோ! பிணி, மூப்பு, சாக்காடு அடைகின்றது இன்னமும் உங்களுக்கும் சம்மதம் தானோ? இவற்றை நினைத்தாலும், இவற்றை அடைகின்றவர்களைக் கண்டாலும், இவற்றைக் கண்டு வருந்தி அழுது அரற்றுகிறவர்களை நோக்கினாலும் நல்லோர் நடுங்குகின்றார்கள். இந்நிலை கண்டும், இறப்பு

Koviloor Digital Library

அச்சம் கொள்ளாதவர்களும், இறப்பை இன்முகத்தோடு ஏற்கின்றவர்களும், யாதொரு கலக்கமும் இல்லாது சாந்தத்தோடு மரணம் அடைகின்றவர்களும் உண்டெனில், அவர்கள் ஆனந்த நடனம் புரிகின்ற அருட்பெரும் பதியின் ஆணையை அறியாதவர்களே ஆவார்கள்.

சிறந்த சன்மார்க்கம், சுத்த சன்மார்க்கம், அனகநெறி என்னும் அருட்பெரு நெறியேயாம். இவ்வொரு நெறியே, பிணி, மூப்பு, மரணத்தை ஒழித்து, உட்சாராமல் தடுத்து விடுவதாம். எந்த நிலையில் இருப்பவர்களும், அதாவது பிணி, மூப்பு, அடைந்து இருக்கின்றவர்களும் கூட, இச்சன்மார்க்கத்திற்கு வந்து சேர்ந்து திருவருளைப் பெறுவார்களாயின் அப்போதுமுதல், அவர்களுடைய பிணி மூப்பும் மாற்றிடப் பெற்று சுகானந்த தேக வாழ்வு நல்கப்படுவார்கள். ஆகையால், இங்கு வாருங்கள் என அழைக்கின்றார் நமது வள்ளற் பிரான்.

இகத்தில் தான தருமங்கள் செய்தால், பரத்தில் மேல் பிறப்பில் நன்மை அடையலாம் என்கிறார்கள். இப்பொழுதே நல்வழியில் சென்றுவிட்டால் வரும் பிறப்பில் நற்பயன் பெறலாம் என்கின்றார்கள். அவற்றை எல்லாம் பற்றி நினைக்க வேண்டாம். மேலும், "இந்தப் பிறப்பில் காலம் கடந்துவிட்டதே, வயது ஆகிவிட்டதே, பிணி, மூப்பு, வந்து விட்டனவே, எப்படி இனிமேல், இப்பிறப்பில் ஈடேறப் போகிறோம்" என்றெல்லாம் கவலைப்பட வேண்டாம். "இந்தப் பிறப்பில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற எந்த நொடியிலும், கடவுள் அருள் பூரணமாகவே உள்மறைந்து கிடக்கின்றது உண்மையேயாம். ஆகையால் உயிர் பிரியாதிருக்கும் கடைசி வினாடியில் கூட திருவருள் சேர்க்கை உண்டாகி, எல்லாம் மாற்றப்பட முடியும்." திரைந்த தோலுடைப் பிணி உடம்பும், திருவருள் நிறை சுத்த தேகமாக

Koviloor Digital Library

மாறி விளங்கவல்லதாம். ஆகவே இதனை நம்புங்கள். பிறந்த பிறப்பு இதில் தானே (திருவருளால்) நித்திய மெய்வாழ்வு பெற்றிடலாம். பேரின்பம் உற்றிடலாம் விரைந்தே எனப்படுகின்றது. சிலர் நினைக்கின்றார்கள் ஒருவனுக்கு இந்தப் பிறவியில் அப்படி தெய்வநிலைப் பேறு கிடைக்கும் விதியிருந்தால் மட்டும் அதனைப் பெற முடியும் என்றும், அப்படி விதியில்லாதபோது எந்தவிதமான முயற்சி செய்தும் அடைய முடியாது போய் வேறொரு பிறவியில் ஒருவேளை அச்சித்திநிலை எய்திடலாம் என்றும் கருதுகின்றார்கள். அக்கருத்து உண்மையல்ல. நம் அருட்பெருஞ்ஜோதி பதி எல்லாம் வல்லவர். ஒழிவிலாத் தனிப்பெருங்கருணை ஆட்சி புரிந்து கொண்டே உள்ளவர். எல்லா ஆன்மாக்களையும் பக்குவம் வருவித்துத் தன்மயமாக்கி வாழ்விக்க உள்ளவர்.

அப்படிப் பக்குவம் உண்டாதற் பொருட்டே ஒவ்வொரு ஆன்மாவுக்கும் விதிமுறை செய்துள்ளார். அவ்விதிமுறை, திருவருள் வெளிப்படும்வரை, நீங்காது சூழ்ந்து கொண்டேதானிருக்கும். அத்திருவருள் வெளிப்பட்ட கணத்தில், பதியே அனகமுற்று விளங்கும் விநாடியில், அவ்விதியின் செயல் முடிந்துவிடுவதாம். ஆகவே, சுத்த சன்மார்க்கத்தில் அருட் பூரணபதியை, எவரும் எக்காலத்தும் திருவருளாலே பெறுவது சாத்தியமேயாம். ஒருமையும் தயவும் கொண்டு சத்விசாரமும் பரோபகாரமும் அகமிருந்து அனகம் வரும்போது நம்மில் பதியே நிறைந்து கொண்டு வாழ்விக்க உள்ளார். எப்போதும் அருள் வழங்கத் தயாராக இருக்கின்ற பதி, அது பெறும்படி முயற்சி செய்விக்கவும் அகத் துணையாய் இருந்து உதவுகின்றார். விதிமுறையின் இரகசியமே இங்குதான் மறைந்து கிடக்கின்றது. ஆன்மாவுக்கு எல்லாவிதமான சூழ்நிலையும் உதவி, அகப் பெரும்பதியை அடைவிக்கவே வந்துள்ளது இவ்விதிமுறை.

Koviloor Digital Library

ஆகையால், அவ்வகநிலை பெறாதவரையில் இந்த விதிமுறை விட்டொழியவே ஒழியாது. எந்த நொடியில் அவ்வக நிலைப்பேறு கிட்டுகின்றதோ, அதே நொடியில்தானே வினைச் சூழல், விதிமுறையெல்லாம் விலகி ஒழிந்து போகின்றனவாம். எனவே, இந்தப் பிறப்பில் ஒருவனுக்குக் கடவுட்பேறு அடையும் விதி இருக்கின்றதோ இல்லையோ எனக் கருதிக் கொண்டு வீணிற் காலம் கழிக்க வேண்டாம். உண்மை அறியும் அறிவு பெற்று அதனை அறிந்து கொண்டும் உள்ள நல்ல ஒரு தருணம் இதுவாகும். இத்தருணம், வேறு ஒன்றையும் மதித்து மயங்கிக் கிடக்காது, அருள்விசாரம் செய்து அக அம்பலத்தை அடைந்து அனகானந்த வாழ்வில் ஓங்குவீர்களாக.

ஞான சரியை - செய்யுள் : 26

உற்றமொழி உரைக்கின்றேன்
ஒருமையினால் உமக்கே
உறவன்அன்றிப் பகைவன்என
உன்னாதீர் உலகீர்

கற்றவரும் கல்லாரும்
அழிந்திடக்காண் கின்றீர்
கரணமெலாம் கலங்கவரு(ம்)
மரணமும்சம் மதமோ

சற்றுமிதைச் சம்மதியா(து)
என்மனம்தான் உமது
தன்மனம்தான் கன்மனமோ
வன்மனமோ அறியேன்

Koviloor Digital Library

இற்றிதனைத் தடுத்திடலாம்
என்னொடுசேர்ந் திடுமின்
என்மார்க்கம் இறப்பொழிக்கும்
சன்மார்க்கம் தானே.

உரை : நேர்மையானதையே உங்களுக்கு எடுத்துச் சொல்லுகின்றேன். உங்களுக்கெல்லாம், ஒருமையினால் உறவுடையவனாய் இருக்கின்றேன். என்ன ஒருமை என்றால், ஒன்றான கடவுள் உண்மை பற்றிய ஒருமையாகும். அதாவது, கடவுள் ஒருவரே உண்மையாக இருக்கின்றார். அந்த ஒருவர் தானே, கோடி கோடியான ஆன்ம உருவு கொண்டு விளங்குகின்றார் என்ற உண்மையைக் கண்டு கொண்டுள்ளேன். ஆகையால், நான் ஆக இத்தேகத்தில் இருக்கின்றதும், நீங்களாகத் தனித்தனி ஒவ்வொரு தேகத்தில் இருக்கின்றதும், பிறராகப் பிற தேகங்களில் இருக்கின்றதும், அந்த அவர் ஒருவரே என்பது உண்மையன்றோ! ஆகையால், நாமெல்லோரும் அக உரிமை உறவு கொண்டுள்ளவர்கள் என்பது உண்மை தானே. இந்த அக உரிமை உறவு உண்மையை, ஓர்ந்து அறிந்து கொள்ளாது, என்னை ஓர் அயலானாகவோ, மாறுபாடுடைய ஒரு விரோதியாகவோ எண்ணி விடாதீர்கள். உங்களது அறியாமையாலே அப்படி ஒருவேளை நினைத்தாலும் நினைக்கக்கூடும். அப்படி நினைத்துவிட்டால் நான் நல்லது சொன்ன போதிலும் உங்களுக்கு கெட்டதாகப்பட்டுவிடும். அதனால் பணிந்தேற்று அடைய வேண்டியதை அடையாமல் போவீர்கள் என்று கருதி, எனது உள்ளத் தயவால் உருகுகின்றனன்.

இவ்வுலகில், பிறர் வியக்கக் கற்றுத் தெளிந்து, கலா வல்லுநர்களாய் விளங்கி இருந்தவர்களும் சரி, கல்லாமலே காலம் கடத்தி விட்டவர்களும் சரி, முடிவில் இறந்து

Koviloor Digital Library

ஒழியத்தான் காண்கின்றீர்கள். படித்த மேதையும் படியாத பேதையும் அடைகின்ற முடிவு ஒன்றாய்த் தானிருக்கக் காண்கின்றீர்கள்.அப்படி இறக்கும் தருணம் என்ன நேருகின்றது என எண்ணிப் பாருங்கள். "அப்பொழுது, மனம், புத்தி, சித்தம், அகங்காரம் எல்லாம் சுழன்று, தடுமாறி, கலங்கி ஒன்றிலொன்று மோதிச் சிதைந்து விழுந்து ஒடுங்குகின்றனவாம்." இப்படிக் கரணமெல்லாம் கலங்க வரும் மரணமும் சம்மதமோ என வினவுகின்றார். சம்மதம் என்றாலோ அது அறியாமை. சம்மதமில்லை என்றாலோ அதற்கான வழிவகை கண்டு உய்வு பெற முயல வேண்டும். அப்படிச் செய்யாமல் இறக்கப் பிரியமில்லை என்றோ, மரணத்தை விரும்பவில்லை என்றோ சொல்லிக் கொண்டிருந்தால் மட்டும், அம் மரணம் நீங்கி விடுகின்றது இல்லையாம். உண்மைநெறி அறியாமையால், கலக்கமுற்று அழிந்து போகச் சம்மதித்தாலும், நீங்கள் ஒரு வேளை சம்மதித்து விடலாம். என் மனம், அதனைக் கொஞ்சம் கூட சம்மதிக்கவே சம்மதிக்காது. என் மனம் மிக இலேசாகக் கரைந்து போகக் கூடியது, மென்மையானது. உங்களுக்குத் தயவில்லை, உள்ளத்தில் உருக்கமில்லை. ஆகையால் கசிந்து உருகாத கன்மனமாய் வன்மனமாய் இருக்கின்றது போலும் என்கின்றார்.

கடினமான கல்லின் மீதும், வன்மையான இரும்பு முதலிய உலோகத்தின் மீதும் எவ்வளவு தண்ணீர் கொட்டினாலும் என்ன? அத் தண்ணீர் கசிந்து உட்செல்லுமா, கல்லையும் இரும்பையும் கரைந்து உருகச் செய்து விடுமா? ஒன்றும் பயன்படாதது போல், கடின சித்தர்க்கு, வன் நெஞ்சர்க்கு எவ்வளவுதான் அன்பு உபதேசம் செய்தும் பயன் ஏற்படாதாம். நீங்கள் அன்புடையவர்களாய் இருக்கின்றீர்கள். உங்கள் மனமும் எளிதில் உருகக் கூடியதாயுள்ளது. ஆகவேதான் நீங்களும் சாவைத் தவிர்த்து சதானந்த

Koviloor Digital Library

வாழ்வில் தழைத்திட வேண்டுமென்று ஆசைப்படுகின்றேன். அம்மரணத்தைத் தடுத்திடலாம். அதற்கான உபாயம் எனக்குத் திருவருளால் வழங்கப்பட்டுள்ளது. நீங்களும் என்னுடன் வந்து சேர்ந்து கொள்ளுங்கள். என்னால், எனது சுத்த சன்மார்க்கமாம் மெய்ந்நெறியால் உங்களுக்கு பெரு நன்மை உண்டாகும். இந்த எனது மார்க்கம் இருக்கிறதே, இறப்பைத் தவிர்க்கவல்ல சுத்த சன்மார்க்கமாகும். சிற்றறிவும் சிறுவாழ்வும் கொண்டு, இருந்து மறையும் மனித மதியாற்கண்ட மார்க்கங்கள் எல்லாம், முற்றறிவும், பெருவாழ்வும் கொண்டு என்றென்றும் விளங்குகின்ற இறையருள் கண்ட சுத்த சன்மார்க்கத்திற்கு சிறிதும் ஒவ்வாது எனத் தெளிந்து கொள்ளுதல் வேண்டும். மேலும், மனித நெறியால் கண்ட சித்திகளும், பயனும், அருளால் காணவல்ல அற்புத சித்திகளுக்கும், அழியா இன்ப வாழ்வுக்கும் எப்படி ஒப்பு நோக்க முடியும்? ஆகையால், நான் பெற்ற இன்ப வாழ்வு நீங்களும் பெற வேண்டுமென்று அகநிறை விழைவோடு பலகாலும் அழைக்கின்றேன், வாருங்கள், வந்து என்னுடன் வாழுங்கள்.

ஞான சரியை - செய்யுள் : 27

சன்மார்க்கப் பெருங்குணத்தார்
தம்பதியை என்னைத்
தாங்குகின்ற பெரும்பதியைத்
தனித்தசபா பதியை

நன்மார்க்கத் தெனைநடத்திச்
சன்மார்க்க சங்க
நடுவிருக்க அருளமுதம்
நல்கியநா யகனைப்

Koviloor Digital Library

புன்மார்க்கர்க்(கு) அறிவரிதாம்
புண்ணியனை ஞான
பூரணமெய்ப் பொருளாகிப்
பொருந்தியமா மருந்தை

அன்மார்க்கம் தவிர்த்தருளி
அம்பலத்தே நடம்செய்
அருட்பெருஞ்ஜோ தியைஉலகீர்
தெருட்கொளச்சார் வீரே.

உரை : பெருங்குணம் என்பதும் பெருந்தன்மை என்பதும், "எல்லாம் வல்ல கடவுளரின் அருள் அல்லது தயவு தான்" ஆகும். இந்தச் சுத்த தயா அருளே கடவுட் குணமாயிருந்து, நம்மையும் அவரோடு இணைத்து வைத்து விடுவதாய் உள்ளதாம்.இதனால், இது ஒன்றே கடவுளை அடையும் உண்மை நெறியாக, சுத்த சன்மார்க்கமாக கொள்ளப்படுகின்றது. இந்நெறி பயில்வோர் யாவரும் சன்மார்க்க சங்கத்தவர்களே ஆவர். இச் சன்மார்க்கத்தவர்கள் எல்லாம் தயா பெருங்குணம் படைத்தவர்களே. என்னைத் தாங்குகின்ற அருட்பெரும்பதி ஒருவரே, சன்மார்க்க சங்கத்து அருளாளர்களுக்கு எல்லாம் பதியாக உள்ளார். இந்த என் பதி, தனித்தன்மை கொண்டிலங்குகின்ற சத்திய ஞான சபையிலே, தனித் தலைமைப் பெரும் பதியாக விளங்கிக் கொண்டுள்ளார். இவர் என்னைச் சிறுபோதே ஆட்கொண்டு, அருள் விளங்கு நல்ல வழியிலே நடத்தி, சுத்த சன்மார்க்க நண்பர்களுக்கு நடுவிருக்கச் செய்துவிட்டார். அத்தோடு என்னுரிமை நாயகனாகி, என் உட்கூடி, அருளமுதம் பெருகச் செய்தும் உள்ளார். புறத்திருந்து ஏற்கப்படும் புத்தேள் (தேவர்) அமுதம் போலல்லாது, அகத்திருந்து என்றும் விளங்கும் அருளமுதை அனகத்தே நிரம்பிடச் செய்து ஆக்கையை, அருளின்ப வடிவமாக்கிவிட்டார், எனது நாயகர்.

Koviloor Digital Library

இந்த என் நாயகர் அருட்பெருஞ்ஜோதியாய் அம்பலத்தே நடனம் புரிந்து கொண்டிருக்கின்றார். அவரைத் தெரிந்து, தெளிந்து கொள்ளவாரீர், அவர் இப்பொழுது அன்மார்க்கம் தவிர்த்து அருள்கின்றார். அல் + மார்க்கம் என்பதே அன்மார்க்கம் எனக் குறிக்கப்பட்டுள்ளது. 'அல்' - இருள் எனப் பொருள்படுவது. அதனால் உண்மை விளக்கம் சிறிதும் இல்லாத, அந்தகாரம் நிறைந்த இருள்நெறி எனப்படுவன, "முன்பு சமய மதத் தலைவர்களால் வகுத்து வழங்கப்பட்ட பலப்பலவாகிய மார்க்கங்களாகும்". அந்த அந்தகார நெறிகள், அல் மார்க்கமாய், நெறியல்லாத நெறியாய் இதுவரை இருந்து வந்தன. அவற்றில் பற்று வைத்துச் சென்றவர்கள் பட்டனவெல்லாம் உலகம் அறிந்தனவே. இருள் நெறியிற் சென்று முட்டி மோதிக் கொண்டு, வாழ வகை தெரியாது அவத்தைப் பட்டதெல்லாம் உலகம் அறியுமே.

அப்படிப்பட்ட அன்மார்க்கங்களைத் தவிர்த்து ஒழித்தற் பொருட்டு, அருட்பெருஞ்ஜோதியோடு எனது பதி வெளிப்பட்டு காட்சி கொடுக்கின்றார். அவரிடத்திருந்தே எப்பக்கமும் விரிந்து விரிந்து செல்கின்றது சுத்த சன்மார்க்கமாம், அருட்ஜோதிப் பெருநெறி. இந்நெறி அகத்திலே இருந்து அனகத்தே விரிந்து பெருகி உள்ளதால், புற உலகத்தார்க்கு விளங்காது இருக்கின்றது. இதனால் இனியும் அந்தப் பழைமையான இருள்நெறிகளில் சென்று கொண்டிருக்கின்றீர்கள் போலும். நீங்கள் என்ன செய்வீர்கள், பாவம்; உண்மையை எடுத்துச் சொல்லி அவ்விருள் நெறிகளை விட்டு விட்டு ஒளிநெறிக்கு வரும்படியாக அழைத்துச் செல்ல இதுவரை ஒருவரும் முற்படாது இருந்தார்கள். அதனால் நீங்களும் அகம் திரும்பாது புறத்தே அலைந்து கொண்டு, இருந்தீர்கள், இருக்கின்றீர்கள். ஆனால், இனிமேல் அப்படி இருக்கமாட்டீர்கள், இருக்கவும் கூடாது.

Koviloor Digital Library

இது ஆண்டவர் கட்டளை. இத் தருணமுதல் அக நோக்குங்கள். அகத்தே விளங்கும் அருட்ஜோதி பதியையும், அருட்பெரு நெறியையும் கண்டு கொள்ளுங்கள்.

எனது அருட்பெருஞ்ஜோதி பதியே ஒரு பெருமருந்தாக உள்ளார். அவர் எல்லாப் பிணிகளையும் பிணக்குகளையும் போக்கிடவல்லவர். இறப்பையே ஒழிக்கக் கூடிய அருட்பெரும் அற்புத மருந்தாகவும் இருக்கின்றார். அந்தப்பதி மருந்து நல்ல புண்ணியமே திரண்டு ஒருருவானதாகும். உருவானது என்றால், எங்கே நாம் பார்க்கலாமோ என்று கேட்பீர்கள், பார்க்கலாம். ஆனால் புறக்கண்ணால் பார்க்க முடியாது. ஏனெனில், அது பகுத்தறிவுக்கு அப்பாலாய் விளங்குகின்ற சுத்த அருள்ஞானத்தில், பூர்ண மெய்ப்பொருள் வண்ணமாய் அமைந்து விளங்குகின்றதாம். ஆகையால், அருள்ஞானக் கண்ணைத் திறந்து, அக அம்பலத்திலே காணவேண்டி உள்ளதாம். எனவே, இம்மருந்து வண்ண, அமுத வடிவாகிய அருட்பெருஞ்ஜோதி பதி புன்மார்க்கர்க்கு அறிதற்கு அரியவர் ஆவார். எதனை இருள்நெறியாக, அன்மார்க்கமாக மேற்குறிக்க நேர்ந்ததோ அதனையே ஈண்டு, மீண்டும் புன்னெறியாக புகலப்பட்டுள்ளதாம்.

புன்மையானது - அற்பம் சிறுமையுடையதும் ஆம். பிறவாகிய உலக மார்க்கங்கள் எல்லாம் புன்னெறிகளே எனத் தெளிதல் வேண்டும். அந்தப் புன்னெறிகளில் படர்வோர்க்கு ஒருக்காலும் அறிந்துகொள்ள முடியாதவர் நம் அருட்ஜோதிபதி. அவர்களுக்கு அரியதாய் உள்ள அருட்பெரு மருந்து, நமக்கு மிக எளியதாக இத்தருணம் வழங்கப்பட்டுள்ளதாம். நீங்கள் ஒளிநெறியின் பயன் கொண்டு ஆனந்தித்து வாழ்வதைக் கண்டு பிறரும் தம் அடர் இருள் இடர் நெறிகளை விட்டு விட்டு இங்கு வந்து சேர்ந்து

Koviloor Digital Library

கொள்ளுவார்கள்; பெரு நன்மையும் பெற்றுக் கொள்வார்கள்.

ஞான சரியை - செய்யுள் : 28

சாருலக வாதனையைத்
தவிர்த்தவர்உள் அகத்தே
சத்தியமாய் அமர்ந்தருளும்
உத்தமசற் குருவை

நேருறவே எவராலும்
கண்டுகொளற் கரிதாம்
நித்தியவான் பொருளையெலா
நிலைகளும்தா னாகி

ஏருறவே விளங்குகின்ற
இயற்கையுண்மை தன்னை
எல்லாம்செய் வல்லபத்தை
எனக்களித்த பதியை

ஓருறவென் றடைந்துலகீர்
போற்றிமகிழ்ந் திடுமின்
உள்ளமெல்லாம் கனிந்துருகி
உள்ளபடி நினைந்தே.

உரை : உலகில் அறிவூட்ட வரும் ஆசான்களாக, சில மனிதர்களை, இயற்கைப் பொருள்களை, தெய்வ தத்துவ வடிவங்களை, நூல்களைக் கொள்கின்றார்கள். இவைகளையெல்லாம் புறக் குருக்களாகக் கொண்டு சிறிது அறிவுவிளக்கமும், சிற்றியல் அனுபவமும் பெற முடிகின்றனவாம். இவைகள் யாவற்றிற்கும் மேலானதாயும், ஆதாரமாயும், எல்லோருக்கும் பொதுவில் விளங்கும் பரம்பொருளாயும் இருக்கும் ஒன்றே உத்தம சற்குருவாகக்

Koviloor Digital Library

கொள்ளப்படும். "அந்த குருவை புறத்தெங்கும் கண்டு கொள்ளமுடியாது. தூழூலக வாதனையை, சகல கேவலப் பற்றுகளை நீக்கிக் கொண்டவர்களின் உள்ளத்திற்குள்ளேதான் இந்த உத்தம சற்குரு எழுந்தருளி, சத்தியமாக நித்தியமாக விற்றிருக்கின்றார்". அந்த இடத்தில், அந்த பண்பட்ட உள்ளத்து உணர்வில்தான் "காணாது கண்டு கொள்ளப்படுகின்றதாம்."

அப்படி விளங்கும் அக்குருவை முகமுகமாக, நாமென்றும், அவரென்றும் இரு உருவ நிலையில் கண்டு அனுபவிக்க முடியாது. ஏனெனில் உண்மையில் இரு வடிவம் இல்லை அங்கே. பரமாகாசப் பரம்பொருளாய் இருக்கின்ற ஒன்றே சத்தியமாய் உள்ளது. அதுவே இந்தக் குரு வடிவாய்த் திகழ்கின்றதாம். அவ்வருட் பெரும்பதியே நம் குரு, அப்பதியின் அருளே நாம் என்ற ஒன்றாய் ஆகி, அதன் பிரதிபிம்பமே நாமாய்க் கண்டு கொள்கின்றோம். நாம் ஒரு நிலைக் கண்ணாடி முன் நிற்கும் போது, நமது தூல வடிவத்தின் பிரதி பிம்பத்தை அக்கண்ணாடியில் காண்கின்றோம். அப்போது, நாமும் நமது பிரதி வடிவமும் இரண்டாகத் தோற்றுவதைக் கண்டபோதிலும், உண்மையில் உள்ளது 'சாட்சாத்' நாம் ஒருவரே என்று உணர்ந்து கொள்கின்றோமன்றோ? இப்படித்தான் உண்மையில் உள்ளது அருட்ஜோதி குரு ஒருவரே. அவரது வெறும் பிரதிபிம்பமாக நாம் தோற்றிக் கொண்டிருக்கின்றோம். ஆகவே, எல்லா நிலைகளும் தானாகி விளங்குகின்ற அந்த நித்தியமான பரமாகாசப் பரம்பொருளை நேரடியாகக் கண்டுகொள்ள மனிதனால் முடிகின்றதில்லை. "நாம் (அதன்) தன்மையான (அருள்) உண்மையை உணர்ந்து, அந்த நாம் என்ற அகங்கார போதம் நீங்கி, அருள் மயமாய் விளங்கும் போதுதான் அப் பரம்பொருட் காட்சி அனுபவம் கிடைக்கின்றதாம்."

Koviloor Digital Library

ஒன்றான அக வடிவம், எங்கும் தானாய் மன்னியுள்ளது. அதனைச் சூழ்கின்ற அருள் வண்ண காரியப்பாட்டால் எண்ணரிய தோற்றம் கொள்கின்றதாம். இத்தோற்றநிலை ஏருற (அற்புத அழகுத் தோற்றம்) செயல்படுவது அப்பதி அருளேயாம். இந்த இயற்கை உண்மை விளக்கம் செய்து கொண்டு உள்ளிருக்கும் அவர், எல்லாம் செய்ய வல்லபதி, ஆட்கொண்டு எனக்கே தன் வல்லப சக்தியையும் வழங்குகின்றார். என் மூலமாக அவருடைய உறவும், சம்பந்தமும் உங்களுக்கு ஏற்படுவது திண்ணம். ஆகையால், நீங்கள் எல்லாம் இவண் அடைந்து உள்ளபடி உணர்ந்து கொண்டு, அவரோடு இரண்டறக் கலந்திலங்கும் சம்பந்தம் பெற்றுக் கொள்ள, உள்ளமெல்லாம் கனிந்து, கனிந்து, உருகியுருகி நினையுங்கள். அப்படிக் கசிந்து உருகிக் கருதினால், அக் கருணாநிதியின் காட்சியையும், கூட்டுறவையும் பெற்று பெரு மகிழ்வு கொண்டு விளங்கலாகும்.

சுத்த சன்மார்க்கத்தால் மட்டும், உண்மைப் பதியை உள்ளக் கோயிலில் கண்டுகொள்ள முடியும். கண்டு அவரோடு கலந்து கொண்டு கழியா இன்பில் வாழவும் முடியும். உத்தம சற்குருவாகக் கண்டு கொள்ளப்படுபவரும் நம் பதியல்லால் வேறில்லை. அவரது உபதேசம் உலக வாதனையை (அதாவது) உலகைப் பற்றிய மாயா விஷயாதிகளின் சிந்தனைகளை வேரற அழித்து விடும். அவ்வாதனை ஒழிந்தால்தான், உள் விளங்கு பதியின் அனுபவம் என்றென்றும் உலவாது விளங்கும். இதுதான் "சாருலக வாதனையைத் தவிர்த்தவர் உள் அகத்தே சத்தியமாய் அமர்ந்தருளும் உத்தம சற்குருவாக" ஓதப்பட்டுள்ளதாம்.

இந்தப் பாடல் "உள்ளபடி நினைந்தே" என முடிக்கப்பட்டுள்ளது. இந்த முடிவுதான் முதற்பாட்டின்

Koviloor Digital Library

முதலாக "நினைந்து, நினைந்து" எனத் தொகுக்கப் பட்டதாம். இந்த அந்தாதி மாலையில் எந்த ஒரு பாடலில் தொடங்கினாலும், முழுச்சுற்றாக நிறைவுற்றே விளங்கும். இது அகண்ட பிரபஞ்ச வட்டத்தில், அகர பதியை நடு வைத்து உகர உயிர்கள் சுற்றிக் கொண்டு இருக்கும், போற்றி வலம் வந்து கொண்டிருக்கும் உண்மையைக் குறிப்பதாக உணர்த்துகின்றதாம். எவரும் பதியை நோக்கி உண்மையாகப் பிரார்த்தித்துக் கொண்டால், அருளால் அவரை அடைந்து இப்பிரபஞ்சத்தில் ஆனந்தம் கண்டு நிலவலாம்.

தயவு

Koviloor Digital Library

ஞானசரியையின் முடிவு

மெய்ஞ்ஞானத்தின் எல்லையாக உள்ளது நமது அருட்பெருஞ்ஜோதிபதியேயாம். அந்த ஞான பதியைக் கலந்து ஒன்றி ஆனந்தமாக வாழ்வதே நம் குறிக்கோளாகும். இதை சாதித்துக் கொடுக்கத்தான் இந்த ஞானசரியை தொடுக்கப்பட்டுள்ளதாகும். இதில் கண்ட பாக்களை ஓதுவதே சரியையாகும். ஒருமுறைக்குப் பலமுறையாக ஓதுவதாலும், ஓதக் கேட்டலாலும் மனம் தூய்மையுறும். அதற்கு அவசியம் தயா ஒழுக்கத்தோடு இருந்துவரல் வேண்டும். ஓதிய பாட்டின் பொருளுணர்ந்து உள் உருகுதலும், புறத்தில் அன்பு செய்தலும் ஞானகிரியை ஆகும். இதற்கு மேற்பட்ட இரு நிலைகளும், அக அனுபவ வாழ்க்கை நிலைகளேயாம். அவைகளைச் சொற்களால் வெளிப்படுத்தற்கு இயலாதாம். ஆனால், அந்நிலைகளைக் குறித்து ஒரு சிறிது புற விளக்கம் மட்டும் குறிக்கலாம். அவை இரண்டு : "ஞான யோகநிலை"யும், "ஞான ஞானநிலை"யுமாம். "ஞான யோக நிலை" என்பது சுத்த சத்விசாரத்தால், ஞான சபேசரை அகத்திலே கண்டு கலந்து விளங்குதல் ஆகும்.

அப்படி இருந்து கொண்டு, அக உண்மையின் விரிவே சூழ் உலகமெல்லாமாய்க் கண்டு, அகமுடையான் திருவாணைப்படி இவ்வுலகில் ஞானானந்த வாழ்வு நடத்திக் கொண்டே இருத்தலாம். இதுதான், ஞானத்தில் ஞானமாகிய பேரின்ப வாழ்க்கை நிலை ஆகும். இம்மேனிலை அனுபவத்தில் செலுத்தி நம்மை எல்லாம் வாழ்விக்க வேண்டியே நமது வள்ளலார், இந்த இருபத்தெட்டு பாடல்களையும் அந்தாதி ரூபமாக ஆக்கிக் கொடுத்துள்ளார்.

Koviloor Digital Library

ஒவ்வொரு பாட்டிலும், சத்விசார ஒருமை உண்டாகத் துதித்தலும், உள்ளுணர்ந்து ஒன்றத் தியானித்தலும், அத்தோடு தயவு ஆணைக்குப் பொருந்த உலகோடு ஒத்து வாழப் பழகுதலும் இப்படி இப்படி எனக் குறிக்கப்பட்டுள்ளனவாம் பாக்கள் ஞானசரியை ஆகும். **"கிரியையும், யோகமும், ஞானமும்" அப்பாக்களின் ஆறாகப் பெறப்படும் உண்மையும், அடைவும், அனுபவமுமாம்.** பாக்களை மட்டுமே ஈண்டு வரைந்து காட்ட முடிவதால் இதற்கு இந்த ஞானசரியை என்ற தலைப்பே வழங்கப்பட்டு உள்ளதாகும். இதுவே வாய்ப்பறையான செய்தியாய்க் குறிக்கப்பட்டது. உலகம் இதனை நன்கு ஓதி உணர்ந்து, முயன்று திருவருள் அடைந்து, அதுகொண்டு சுத்த சன்மார்க்க இலட்சிய சித்தியாகிய, சுத்த சுகானந்த வாழ்வு பெறவேண்டும் என்பது அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் ஆணையாம்.

"அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை"

தயவு

தயவு சரவணானந்தா

Koviloor Digital Library

தயவு

அருட்பெருஞ்ஜோதி
அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை
அருட்பெருஞ்ஜோதி

https://www.facebook.com/112254003883417/posts
Daeiou Sathiya Gnana Kottam, Dindigul.
+ 91 99767 50609

Koviloor Digital Library

தயவு

தயா விளக்கமாலை

தயாவொளி விளக்கே தயாபரஞ் சுடரே
தயாபெருஞ் ஜோதியென் அரசே
தயாவெளித் தலத்தே தயாமணி மன்றில்
தயாஅரி ஆதனத் தமர்ந்து
தயாமுறை விளங்கத் தயாநெறி யோங்கத்
தயாவர சியற்பெருஞ் செங்கோல்
தயாவிய லுண்மை தயாவறி வின்பம்
தயாவுல கௌஞ்செலுத் துகவே. *(1)*

எல்லாம் வல்ல இறைவன், தயா பெருஞ்ஜோதி பதியாய், எழுந்தருளி விளங்கும் திருமுன் உற்றுப் போற்றிச் சுத்த சுகானந்த வாழ்வு எவரும் பெற, வழங்கப்படும் பாமாலை இதுவாகும்.

தயா விளக்கமாலைக் கருத்து விளக்கம்

தயாவெளித்தலம், தயாமெய் யறிவு விளங்கும் இடம்: இதுவே, உண்மைச் சின்மயபுரம் ஆம். இங்கு விளங்கும் மணிமன்றம் தயவு ஆலயமே. இந்தக் கோயிலில், ஐங்கோண ஆசனத்தில், திகழும் விளக்குதான் நம் பதியைச் சுட்டுவது இச்சந்தியில் இருந்து கொண்டு, தயா பெருஞ்செங்கோல் ஓச்சும் மன்னர் மன்ன! உலகம் எல்லாம் சச்சிதானந்த வாழ்வில் தழைக்க தயை பாலி, என வேண்டப்படுகின்றது.

https://www.daeiou.in

https://www.facebook.com/112254003883417/posts
Daeiou Sathiya Gnana Kottam, Dindigul.
✆+ 91 99767 50609

Koviloor Digital Library

தயவுக்குறள்

மெய்யன்பு (22)

அகர னகரம் அடிமுடி யாகிப்
புகரத் திருக்கும் பொலிந்து

அன்பு என்ற சொல்லில், அகரம் முதலாகவும், னகர மெய்யீறாகவும் கொண்ட தமிழ் மொழியின் தெய்வப் பண்பை உணர்த்தி, அவ்வுண்மை வெளிப்பட்டிலங்கும் நம் சிரநடு ஆன்ம ஜோதிக் கடவுள் ஒளி நிலையைப் 'பு'கரமாகக் கொண்டு சேர்த்து அன்பின் மெய்ப்பொருளைக் காட்டியுள்ளனர்.

இத்தகு அன்பு வடிவக் கடவுளை அடைவதற்கும் அன்பு புரிதல் வேண்டுமென்பதே மெய்யன்புடையார் கண்ட மெய்ப்பொருள்.

புகரம் = (ப்+உ) பகர மெய், நம் தலை நடுவுள்ள பகர வடிவக் குழி மீது நித்திய தீப ஆன்ம விளக்காகவும், அது உகரமாகிய ஐந்தாம் உயிரெழுத்தால் கடவுள் ஐந்தொழில் சக்திச் செயலைப் புரிவதையும் விளக்க வந்துள்ளதாம்.

https://www.daeiou.in

https://www.facebook.com/112254003883417/posts
Daeiou Sathiya Gnana Kottam, Dindigul.
✆+ 91 99767 50609

Koviloor Digital Library

தயாநிதி சுவாமி சரவணானந்தா அவர்களின் வரலாற்றுக் குறிப்பு

இயற்பெயர் : சுப்பையா

சிறப்புப்பெயர் : தயாநிதி சுவாமி சரவணானந்தா

தோற்றம் : 19.11.1910 சாதாரண வருடம் கார்த்திகை மாதம் 4ம் நாள் சனிக்கிழமை, திருவாதிரை நட்சத்திரம்.

பிறந்த ஊர் : திண்டுக்கல்.

தந்தை : ரெங்கசாமி ஐயர்

தாயார் : கஸ்தூரி அம்மாள்

உடன் பிறந்தோர் : சகோதரி - பத்மாவதி அம்மாள்

கல்வி : இண்டர்மீடியட் புனித வளனார் கல்லூரி, திருச்சி.

குருவைச் சந்தித்தது :1929ல் திண்டுக்கல்லில் சத்திய ஞான சபாபதி சுவாமிகளை திருஞானசம்பந்தர் குரு பூஜைஅன்று

வள்ளலார் காட்சி பெற்றமை

மேட்டுக் குப்பத்தில் : 1938 ம் வருடம்

சத்திய ஞானகோட்டத்தில் : சுபானு வருடம், ஆடி மாதம் 17ந் தேதி, அமாவாசை பூசம் (1.8.1943) அன்று

Koviloor Digital Library

நிறுவியவை : தயவு சத்திய ஞான கோட்டம்
திண்டுக்கல்,

தயவு ஆலயம், சின்னாளப்பட்டி,

தயவு நூல் வெளியீட்டு அறக்கட்டளை,
திண்டுக்கல்,

தயவு ஆலயம், திண்டுக்கல்,

அருட்பெருஞ்ஜோதி தயவு ஆலயம்,
இராமநாதபுரம்.

அருட்பெருஞ்ஜோதி தயவு இல்லம்,
பொன்னகரம், திண்டுக்கல்.

இயற்றிய நூல்கள் : அருட்பெருஞ்ஜோதி அகவல்
- உரைவிளக்கம்

தயவுப் பாக்கள்

தயவுக் குறள்

திருஅருட்பா விளக்க விரிவுரை நூல்கள்

தயவு மெய்ப்பொருள் விளக்க விரிவுரை
நூல்கள்

GOD-MAN

சித்தி பெற்றமை : 6.4.2006 பார்த்திப வருடம்
பங்குனி மாதம் 23ம் நாள்
வியாழக்கிழமை, பூச நட்சத்திரம்.

தயவு சரவணானந்தா

Koviloor Digital Library

தயவு

ARUTPERUMJOTHI
SWAMI SARAVANANANTHA
DAEIOU ILLAM CHARITABLE TRUST

Ponnagaram, Natham Road, Dindigul - TamilNadu.

Name : ARUTPERUMJOTHI SWAMI SARAVANANANTHA THAYAVU ILLAM CHARITABLE TRUST

A/c No	:	1459101093578
IFSC	:	CNRB0001459
MICR Code	:	625015029
Bank	:	Canara Bank, Nagal Nagar Dindigul.

For Contact :

Daeiou Sathiya Gnana Kottam - Dindigul : +91 99767 50609

Daeiou S.S.Shivaram : +91 94430 31232

Daeiou A. Ramanujam (for English) : +91 86109 62453

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
A. No. 44088

Koviloor Digital Library

Koviloor Digital Library

தயவு

அருட்பெருஞ்ஜோதி
அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை
அருட்பெருஞ்ஜோதி

சூழ்க தயவு

இந்த புனித நூல்கள் எல்லாம், அக ஒருமையில், அருள் ஒளி முன்னிலையில் இருந்து வேண்டி வேண்டி, அவ்வருளே வழங்க வழங்க எடுத்துத் தொகுத்துத் தரப்பெறுகின்றனவாம்.

இது முதலாக நீங்கள், இந்த அனக வாழ்வு பெற, அருள் - அகமும், ஜோதி - புறமும் சூழ, நடு விளங்கும் பெருநிலையுற்று, அருட்பெருஞ்ஜோதி மயமாய், சுத்த சன்மார்க்கிகளாய் வாழ வேண்டும் என்பது எனது தாழ்மையான வேண்டுகையும், அருட்பிரகாச வள்ளல் ஆணையுமாகும்.

வாழ்க அனக சுத்த சன்மார்க்கப்
பெருநெறி தரும் நிறைவாழ்வு

இங்ஙனம்,
அனகன் சரவணானந்தா
திண்டுக்கல்.

https://www.daeiou.in
https:/www.facebook.com/112254003883417/posts
Daeiou Sathiya Gnana Kottam, Dindigul. Ph : +91 99767 50609